

சோ. ராமேஸ்வரன்

JPL
C4565

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

4565

வசந்தம் புத்தக நிலையம்
405, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

122433

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
1997

# ஆசிரியர் உரை

1991 ஆரம்பத்தில் "வாடா மச்சான் ஊருக்கு" என்ற தலைப்பில் நகைச்சுவைத் தொடர் ஒன்றை "வீரகேசரி வாரவெளியீட்டில்" எழுதிய போது, என் மனதினுள் ஒரே ஒரு விடயம் தான் புதையுண்டிருந்தது. யுத்த மேகத்தினால் சூழப்பட்டிருந்த வட பகுதியில் எவ்வாறான ஒரு வாழ்க்கையை மக்கள் மேற்கொள்கிறார்கள், அவர்கள் எவ்வாறான நரக வேதனையை அனுபவிக்கிறார்கள் என்பதை ஏனைய இடங்களில் உள்ள மக்களும் அறிய வேண்டும் என்பதே அவ்விடயமாகும்.

அப்போதிருந்த நிலையில் என் உள்ளார்ந்த எண்ணத்தை அப்படியே அப்பட்டமாக எழுத்தில் வெளியிட முடியாத ஒரு சூழ்நிலை விளங்கியது. எனவே, நகைச்சுவை என்ற இனிப்பைக் கலந்து, அந்தக் காரமான உண்மைகளை எழுதினேன். நமது தலைவர்களுக்கு சற்று விழிப்புணர்ச்சியை ஊட்ட வேண்டும் என்ற ஓர் எண்ணத்தில் சிறிதளவு அரசியலையும் அதில் சேர்த்திருந்தேன். ஒவ்வொரு அத்தியாயமும் அந்தந்த வாரத்தில் முடியும் வகையிலும், ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத முறையில் சம்பவக் கோர்வை வடிவத்திலும் எழுதியிருந்தேன்.

"வாரவெளியீட்டு" ஆசிரியரும், எனது ஆசானுமான திரு.பொன். ராஜகோபால் அவர்கள் இத்தொடரை எழுதிய போது உற்சாகமும், உறுதுணையும் நல்க, வாசகர்களும் வரவேற்பு வழங்க இதனை சுமார் இருபது வாரங்கள் எழுதினேன்.

இங்கே எனது கதாமாந்தர்களான சுப்பிரமணியம் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும், அவரது தர்மபத்தினி, பதினொரு பிள்ளைகள், சன்–இன்–லோ என்று யாவரும் யாழ்ப்பாணத்திலும் அனுபவிக்கும் கஷ்டங்களையும், யுத்தத்தின் கெடுபிடியில் அவர்களது வாழ்க்கை முறையையும் விபரித்திருந்தேன்.

இதைத் தொடர்ந்து 1991 பிற்பகுதியில் இதே குடும்பம் கொழும்புக்கு வந்து இங்கு அனுபவிக்கும் கஷ்டங்களையும், நஷ்டங்களையும், சந்தோஷங்களையும் "கொழும்பில் ஒரு ததிங்கிணதோம்" என்ற மகுடத்தில் எழுதினேன். பதினாறு வாரங்கள் தொடராக எழுதிய இதையும் வாசகர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள் என்பதை "வார வெளியீட்டின்" "வாசகர் கணைகளில்" வெளிவந்த கடிதங்கள் வெளிப்படுத்தின.

இத் தொடர்களின் கதைமாந்தர்களான சங்கீதமணி, 'ஸ்டெனோ' மல்காந்தி. 'சன்–இன்–லோ' தம்பிப்பிள்ளை ஆகியோர் பிரபல்யம் அடைந்தனர் 'சங்கீதமணி சுகமாக இருக்கிறானா', 'சன்–இன்–லோவை எப்ப கனடாவுக்கு அனுப்பப் போறாய்' என்று பலரும் கேட்டனர். இதனால் இத் தொடரை மேலும் தொடர வேண்டும் என்ற ஆர்வம் பிறக்க, என் ஆவலை திரு.ராஜகோபாலிடம் சொல்ல அவர் எனது கதாமாந்தர்களுக்கு மேலும் வாழ்வு கொடுத்தார். இதன் விளைவாக 'அக்கரைக்கு இக்கரை பச்சை' என்ற பெயரில் எழுதிய தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993 ஏப்ரல் 11 முதல் 1994 ஏப்ரல் 10 வரை வெளியாகியது.

இத் தொடருக்கும் அமோக வரவேற்பு இருந்தது. மனமின்றி இதை எழுதுவதை நிறுத்தினேன். ராமேஸ்வரன் சிரிக்க வைத்து சிந்திக்க வைக்கிறார் என்ற எண்ணம் பலர் மத்தியிலும் பதிந்திருப்பதை வாசகர்களின் கடிதங்கள், நண்பர், உறவினர்களின் அபிப்பிராயங்கள் மூலம் அறிந்தேன். இதனால் இதனை ஆவணப்படுத்த வேண்டும் என்ற அவா என்னுள் துளிர்விட்டது. அந்த ஆசை இறுதியில் மனதினுள் நன்கு இறுகிவிட்டது. அதன் விளைவே 'அக்கரைக்கு இக்கரை பச்சை' என்ற இந்நூலாகும்.

ஒரு வருடத்தில் 38 அத்தியாயங்களாக வெளிவந்த சம்பவக் கோர்வைகளில் சிறந்தவை என நான் கருதிய இருபது அத்தியாயங்களை மட்டும் தெரிவு செய்து, அவற்றை ஒரு நகைச்சுவை நவீனமாக உருமாற்றியுள்ளேன். அந்தந்த அத்தியாயங்களை 'வாரவெளியீட்டில்' வெளி வந்த விதத்தில் வெளியிடாமல், சற்று மாற்றம் செய்துள்ளேன்.

முதலில் இத்தொடர் உட்பட மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்களை வெளியிடுவதற்கு களம் அமைத்துக் கொடுத்ததுடன், நூலுருவில் வெளிவருவதற்கு ஆதரவும் அளித்த திரு.ராஜகோபால் அவர்களுக்கு எனது மனநிறைவான நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வழமை போல் என் சிறுகதைகள், நாவல்களையிட்டு காத்திரபூர்வமான கருத்துக்களைப் பரிமாறும் எனது அலுவலக நண்பர்களான திரு.மு.கௌரிசங்கர், திரு.த.இரவிச்சந்திரன் ஆகியோர் இது குறித்தும் சில ஆலோசனைகளை வெளியிட்டிருந்தனர். இத்துடன் திரு.கௌரிசங்கரின் தம்பி மு.உமாசங்கர் (யாழ். மருத்துவ பீட மாணவன்) இந்நவீனத்தில் வெளியிடப்பட்டுள்ள சகல படங்களையும் கீறித்தந்தார். இம் மூவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

அத்துடன் அச்சுச் செலவைக் குறைக்கு முகமாக விளம்பரங்களைத் தந்துதவிய எனது நண்பனும், டி.டினோர்ஷன் டிரேடிங் (பிறைவேற்) லிமிற்றெற்றின் உரிமையாளருமான திரு. சின்னத்துரை தனபாலாவுக்கும், மற்றும் குகன் மோட்டார் ஸ்டோர்ஸ், யுனிவேர்ஸ் எலக்டிரிக் கோ. ஆகிய இரு தாபனங்களுக்கும் எனது நன்றி.

இந்நூலின் சகல பக்கங்களையும் அழகுறவும், தவறு இல்லாமலும் கணணிப் பொறியில் பதித்துத் தந்த திரு.வி.சடகோபன், அச்சிட்ட திரு.சிவசுப்பிரமணியம் ஜெகதீசன் ஆகியோருக்கும் நன்றி.

இறுதியாக இத் தொடரை புத்தக ரூபத்தில் வெளியிட அனுமதி தந்த 'எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) லிமிற்றெற்றுக்கும்' எனது நன்றி.

*41/2, சித்ரா ஒழுங்கை,* **சோ. ராமேஸ்வரன்.**
*கொழும்பு –5.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (1)

அதிகாலை வேளைக்குரிய ஒரு ஞாயிற்றுக்கிழமை. பக்கத்து வீட்டு பறட்டை நாயின் ஊளைச் சத்தம் என் நித்திரையைக் குழப்ப, கண் விழித்தேன்.

சில வினாடிகள் இருட்டைப் பார்த்து விட்டு நாயைச் சபித்தபடி கண்களைக் கசக்கினேன். நாய் தொடர்ந்தும் ஊளையிட்டது. 'ஆவ்' எனப் பலமாகக் கொட்டாவி விட்டவன், மீண்டும் உறக்கத்திற்கு அடிமையாக முற்பட்ட போது, கதவில் ஒரு 'டொக்', 'டொக்' சத்தம். வழமையான 'டொக்', 'டொக்' சத்தத்தை விட வித்தியாசமான 'டொக்', 'டொக்' சத்தம்.

இந் நேரத்தில் யார் கதவைத் தட்டுகிறார்கள்? மூளையைச் சாம்பாராக்கினேன். 'சட்' டென்று புரியவில்லை. யார்....? யார்....?

மீண்டும் 'டொக்', 'டொக்'...... மனதில் ஒரு சிறு கிலேசம். கதவைத் திறந்தால் காக்கிச் சட்டைக் காரர்கள் நிற்பார்களோ?

எழும்பினேன். 'லைட்'டைப் போட்டு விட்டு, கைக்கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தேன். ஐந்து மணி! காக்கிச் சட்டைக்காரர்கள் வரும் நேரம் அல்ல.

'சடாரென' – பலத்த காற்றுக்கு ஜன்னல் வீச்சுடன் மூடியது போல – மனதுக்குள் எனது 'செக்ஷன் ஸ்டெனோ' மல்காந்தி புகுந்து, என் நாளங்களைத் தட்டுவது போன்ற ஓர் உணர்வு தடம் புரண்டது.

"மிஸ்டர் சுப்பிரமணியம், நாளைக்கு நான் ஒருக்கால் களுத்துறைக்கு போறன். தனியாகப் போக 'என்னவோ' போல இருக்குது. உங்களுக்கு இயலுமென்றால் என்னோட களுத்துறைக்கு வர முடியுமா?" என மல்காந்தி முதல் நாள் மாலை கண்களால் எனது இதயத்தை அளக்க முற்படுவது போல பார்த்தபடி கேட்ட போது, இளித்த வாயனாக சரி எனத் தலையாட்டியிருந்தேன்.

அவள் தான் வந்திருக்கிறாள் என்ற நினைப்பை 'எதுவோ' என்னுள் விதைக்க...... அந்த நினைவே என் இதயத்தினுள் 'ஐஸ்' துண்டொன்றைச் செருகியது போன்ற குளிர்மையை ஏற்படுத்தியது. ஹ!

வெள்ளவத்தையில் இருந்து களுத்துறைக்கு அவளுடன் பஸ்சில் ஒன்றாக அமர்ந்து போவதென்றால்......... (ஹ!) களுத்துறை வரை எத்தனை வளைவுகள்...... (ஹ!) அத்தனை வளைவுகளிலும் முப்பத்தியேழு வயதிலும் 'மிஸ்ஸாக' விளங்கும்– பல ஆண்களை 'மிஸ்' பண்ணிய மல்காந்தியுடன் உராயும் போது..... (ஹ!) அதில் தான் எத்தனை ஆனந்தம்.....! இருநூற்றி ஐம்பது மைல்களுக்கு அப்பால் இருக்கும் தர்மபத்தினியின் நெருக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

உணர்ந்து எத்தனை மாதங்கள் கழிந்துவிட்டன! அந்தக் கிளாலிப் பயணத்தை, காக்கிச் சட்டைக்காரர்களை, முகத்திற்கு நேரே பிடிக்கப்பட்டிருக்கும் துப்பாக்கிகளை நினைத்து பல மாதங்களாக ஊர் பக்கமே தலை வைத்துக் கூட படுக்கவில்லை.

"யெஸ்......யெஸ் கமிங். வெயிட் எ மினிட் டார்லிங்" என்று குதூகலத்துடன் கூவியபடி, கதவைத் திறந்து, காதல் கண்களில் நிறைய கொப்பளிக்க, பார்வையை வெளியே படர விட்டேன்.

வெளியில் நின்றவர்களைக் கண்டதும், என் சப்த நாடிகள் யாவும் 'பட்டரி' இல்லாத கடிகாரத்தின் நிலையை அடைந்தன.

'ஓ!' என்னை அறியாமலேயே கூவினேன். என் கண்கள் மூடிக் கொண்டன.

'க்ளுக்', 'க்ளுக்' கென்று குதூகலம் நிறைந்த சிரிப்பு. அதைத் தொடர்ந்து, "கதவைத் திறக்க முந்தியே உங்கட 'டார்லிங்' தான் வந்திருக்கிறாள் எண்டதை அறிஞ்சு விட்டியள் போல..... அய்யோ, என்ர அறிவுக் களஞ்சியமே.....! உங்களுக்கு கண் சரியாகத் தெரியாட்டாலும், ஞானக்கண் நல்லா வேலை செய்யுது" என்றபடி நின்றவள் சாட்சாத் என் தர்மபத்தினியே !

அவள் பின்னே சோகம் சோம்பேறித்தனம், களைப்பு, கோபம், ஆத்திரம், எரிச்சல், மகிழ்ச்சி என பல்வேறு உணர்ச்சிகளை வெளியிட்டபடி, எனது முகவெட்டும், தர்மபத்தினியின் முகவெட்டும் கலந்த நிலையில் எமது பதினொரு பிள்ளைகளும், ஒரே ஒரு 'சன்–இன்–லோ'வும் ஒவ்வொரு நிலையில் நின்றனர்.

என்னை இறுக அணைத்திருந்த அதிர்ச்சி, ஆச்சரியம், அரைகுறை ஆனந்தம்...... யாவும் கொஞ்சம், கொஞ்சமாக அகல, தர்மபத்தினியை விறைப்புடன் நோக்கினேன்.

"இடியே, என்னடி இது? எனக்கு ஒண்டும் விளங்க இல்ல. என்னெண்டு ஊரில இருந்து வந்தனி? ஏன் வந்தனி? ஆரைக் கேட்டு வந்தனி?" என ஒவ்வொரு கேள்வியையும் உஷ்ணத்தைக் கலந்து வெளிப்படுத்தினேன்.

தர்மபத்தினியின் முகத்தில் ஒரு 'சிடுசிடுப்பு' தாவியது. "வாற மாதிரித்தான் வந்தனாங்கள். இடைக்கிடை தான் கிளாலிக் கரையில படகைத் தள்ளினனாங்கள். அது சரி, இஞ்ச வாறதுக்கு நான் ஆரைக் கேக்கணும்? " எனக் கேட்ட படி என்னை இடித்துக் கொண்டு அறையினுள் புக முற்பட்டாள்.

'செக் பொயின்டை' நினைவுறுத்துமாப் போல, அவளைத் தடுத்து நிறுத்தினேன்.


"இடியே, உள்ளுக்கை போகாதை. நான் கேட்ட கேள்விக்கு ஒண்டு ஒண்டாக மறுமொழி சொல்லிப் போட்டு உள்ள போ. நீ ஆரைக் கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனி? ஏன் வந்தனி ? அதுவும் இந்த படை பட்டாளத்தோட ஏன் வந்தனி ?"

தர்மபத்தினியின் முகத்தில் ஒரு மாற்றம் தெரிந்தது. அதில் சாந்தம் குடியேறியது. என்னை கொஞ்சுமாப் போல பார்த்தாள். "இஞ்சருங்கோ பிள்ளையளுக்கு ஊர் வாழ்க்கை அலுத்துப் போயிட்டுது. அதுகள் வயிறு முட்ட சாப்பிட்டு இருக்குங்களோ? இல்லாட்டால் சரியாக 'சோப்' போட்டு குளிச்சிருக்குங்களோ? இரவில ஏழு மணிக்கு பிறகு ஒருத்தரின்ர முகத்தை ஒருத்தர் பார்த்திருக்குங்களோ? பிள்ளையளைப் பார்க்கப் பாவமாக இருந்துது. நாங்க தான் அனுபவிச்சிட்டம். அதுகள் அனுபவிக்கிற வயசு. அதுகளும் ஒரு மாற்றம் வேணுமெண்டு சேர்ந்து அடம்பிடிச்சுதுகள். கூட்டிக் கொண்டு வந்து விட்டன். அதில என்ன பிழை? கூட்டிக் கொண்டு வரக் கூடாத இடத்திற்கோ கூட்டிக் கொண்டு வந்திருக்கிறன்? சீதைக்கு அயோத்தி மாதிரி எனக்கு இந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளவத்தை" என மூச்சு விடாமல் தர்மபத்தினி சொல்லி முடித்த போது , அவள் இறுதியாக கூறிய வசனத்தை கேட்டு என் மனம் அக்குளத்தல் அடைந்து விட்டது.

இவ்வளவு நேரமும் தர்மபத்தினியின் முகத்தில் பதித்திருந்த எனது விழிகளை என் முன்னால் பரம்பி இருந்த புத்திரபாக்கியங்கள், 'சன்–இன்–லோ' தம்பிப்பிள்ளை ஆகியோர் மீது பதித்தேன். 1. தர்மசிகாமணி 2. பருபதபத்தினி 3. மாசிலாமணி 4. தமிழ்மொழியழகி 5. சங்கீதமணி 6. சௌந்தர்யவல்லி 7. திருகோணமாமணி 8. கற்பனைநாயகி 9. ரொபர்ட் பெஞ்சமின் 10. திருலோகசம்பந்தீஸ்வரி 11. ஒப்பிலாமணி என்று சகல பிள்ளைகளும் நன்கு களைத்து, வாடி வதங்கிய நிலையில் விளங்கினர். அவர்களைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. மனதில் ஈரம் சொட்டியது.

"அப்பா, ஐஞ்சு நாளைக்கு முந்தி ஊரில இருந்து வெளிக்கிட்ட பயணம். இண்டைக்குத் தான் முடிஞ்சுது. ஏறக்குறைய பத்தாயிரம் ரூபாய் பயணத்துக்கு எண்டு செலவளிஞ்சு போச்சுது" என்று அழாக்குறையாகச் சொன்னான் மூன்றாவது மகன் சங்கீதமணி.

இதைக் கேட்டு துள்ளிக் குதித்தேன். "இக்கணம் போறதுக்கும் பத்தாயிரம் தேவைப்படுமே! இடியே, இருபதினாயிரம் ரூபாவை அநியாயமாக்கி விட்டியே" என்றவன், தர்மபத்தினியை நோக்கி கோபப் பார்வை ஒன்றை வீசினேன்.

"அதுக்கு என்ன? சும்மா கிடைச்ச காசு தானே?" என அவள் இறுமாப்புடன் கூறினாள்.

"என்ன ? விளக்கமாகச் சொல்லு பார்ப்பம்."

"உங்களுக்கு விசயமே தெரியாதா ? எங்கட வரணிக் குஞ்சியப்பு அல்லோ போன மாசம் மண்டையைப் போட்டவர்? அவர் சாக முந்தி எனக்கு இருபத்தைஞ்சாயிரம் ரூபாவை தந்தவர். அந்தக் காசைத் தான் செலவளிக்கிறன்."

"இடியே, இந்தக் காசுக்கு ஐஞ்சு பவுணில ஒரு சங்கிலி வாங்கி இருக்கலாமே?"

"ஏன் நிலத்தில புதைச்சு வைக்கவோ?"

"என்னடி சொல்லுறாய்?"

"ஊரில நகை வைச்சிருந்தால் நிலத்தில புதைக்கிறதும், கொழும்பில நகை வைச்சிருந்தால்' பாங்க் வோல்ட்டில' பூட்டி வைக்கிறதும் தானே இப்ப 'ஃபஷன்'?"

"அப்படியிருந்தும் எங்கட பொம்பளையளுக்கு நகையில இருக்கிற ஆசை, மோகம் போக இல்லயே!"

"இந்த மாதிரி ஆசை எனக்கும் வரக் கூடாது எண்டு தான் காசை இப்படி செலவளிக்கிறன்."

அந்த தருணத்தில் நான்காவது மகன் திருகோணமாமணி என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கி வந்து, 'சீரியஸான' பார்வை ஒன்றை வெளியிட்டான். "அப்பா, சிலுக்கு சுமிதா 'அன்ரி'யின்ர படம் ஏதாகிலும் இஞ்ச ஓடுதோ? நான் பார்க்க வேணும்" என அன்பொழுகச் சொன்னான்.

"அடேய், நீ கெட்ட கேட்டுக்கு சிலுக்கு சுமிதான்ர படம் பார்க்கப் போறியோ?" என்றபடி அவனை நையப்புடைக்கப் பாய்ந்தேன். அதற்குள் அவன் அங்கிருந்து ஓடி விட்டான்.

"இஞ்சருங்கோ, வந்த உடனேயே பிள்ளையளைப் பயப்படத்தாதீங்கோ. ஏற்கனவே கோட்டை ரயில் ஸ்டேஷனில ரண்டு பொலிஸ்காரங்களைக் கண்டு மிரண்டு விட்டுதுகள்."

"ஊரில பொலிஸ் இல்லாததால இஞ்ச கண்டாப் போல பயந்து விட்டதுகளாக்கும்."

"அப்பா, கொழும்பு ஒரு சொர்க்கபுரி மாதிரி...." மூன்றாவது மகள் சௌந்தர்யவல்லி கண்களை அகல விரித்தபடி சொன்னாள்.

"அது முந்தி. இப்ப அது நரகம். கொட்டாஞ்சேனையிலும், வெள்ளவத்தையிலும் எங்கட ஆட்கள் படுறபாட்டை நீ பார்த்தால் இப்படி சொல்லமாட்டாய். பனையால விழுந்தவனை மாடு ஏறி மிதிச்சது மாதிரி, ஊரில எல்லாத்தையும் விட்டுட்டு, நிம்மதியாக இஞ்ச மூச்சு விடலாம் எண்டு வந்த எங்கடை ஆட்கள் படுறபாடு..... அங்க இருந்து சனங்கள் இஞ்ச அள்ளுப்பட்டு வந்தாப் போல வாடகை எல்லாம் எக்கச்சக்கமாக கூடி விட்டுது. ஒரு அறைக்கு அறு நூறு , எழுநூறு எண்டிருந்த வாடகை ஆயிரத்தி ஐநூறு ரூபாவையும் தாண்டி விட்டுது. கூடுதல் வாடகை குடுத்தாலும் வசதியாக இருக்க முடியுமோ? ஒரு கக்கூஸுக்கு முப்பது, நாற்பது ஆட்கள் 'நான்', 'நீ', 'என்னை விடு' எண்டு சண்டை பிடிக்கிறதும், அலாரம் வைச்சு விடியற்காலமை மூண்டு, நாலு மணிக்கு ஒழும்பி குளிச்சுப் போட்டுப் பேந்து படுக்கிறதும், நுளம்புக் கொல்லி வைச்சும் நுளம்புக் கடியால அவதிப்படுறதும்..... சேச்சே....! தமிழன் பாடு இவ்வளவு மட்டமாகி விட்டுது. "

"மாமா, இஞ்ச கோழிக்கூட்டையும் அறையாக மாத்தி விட்டு வாடகைக்கு குடுக்கினம் எண்டு கேள்விப்பட்டன். உண்மையோ?" என வினாவினான் 'சன்–இன்–லோ' தம்பிப்பிள்ளை.

"ஓமோம்... இந்த அறை கூட முந்தி கோழிக் கூடாகத் தான் இருந்துதாம்."

"நான் நினைச்சது சரிதான். வந்த நேரம் துடக்கம் இந்த மாதிரி ஒரு அறையை எங்கேயோ பார்த்திருக்கிறன் எண்ட மாதிரி இருந்துது. இப்பத் தான் விளங்குது. எங்கட முன் வீட்டு தாம்பர் மாமான்ர கோழிக் கூடு மாதிரி அச்சொட்டாக இருக்குது." இப்படி மாசிலாமணி அகடவிகடம் கலக்கக் கூறினான்.

"ஆனால், பண்டிக் கொட்டில் நாத்தம் வருது" என்று சிரித்தபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னான் சங்கீதமணி.

இதைக் கேட்டதும் கோபம் என் தலைக்குள் புகுந்தது. "அடேய், சத்தம் போடாமல் அறைக்கு வெளியில போங்கடா. ஆரைக் கேட்டுடா இஞ்ச வந்தியள்?" என உச்சஸ்தொனியில் கத்தினேன்.

இவ்வளவு நேரமும் என்னை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த தர்மபத்தினி விழிபிதுக்கினாள். புத்திர பாக்கியங்கள், சக 'சன்–இன்–லோ' கலவரத்துடன் என்னை நோக்குவதும், நோக்காததுமாக இருந்தனர். நிலைமை எனக்குச் சாதகமாக அமையவே, வார்த்தைகளைச் சூடாக்கி, தர்மபத்தினியை அவற்றினால் அபிஷேகம் செய்தேன்.

"இடியே, இந்த அறையின்ர பரப்பளவு எவ்வளவு எண்டு உனக்குத் தெரியுமோ? முப்பத்தியாறு சதுரஅடி. ஒரு ஆளுக்கு குறைஞ்சது பத்து சதுர அடியாவது வேணும். இந்தக் கணக்குப்படி பார்த்தால் உனக்கும், எனக்கும், இந்த பன்னிரண்டு தறுதலைக்கும் நூற்றி நாற்பது சதுர அடி வேணும். அவ்வளவு இடப்பரப்பு இஞ்ச இருக்குதோ?"

தர்மபத்தினி என்னை ஆதங்கத்துடன் நோக்கினாள். "இஞ்சருங்கோ, மனம் இருந்தால் மார்க்கம் இருக்குது."

"நிண்டு கொண்டு படுக்கச் சொல்லுறியோ?" எனச் சினந்தேன்.

தர்மபத்தினி ஒரு கணம் தன்னைச் சுற்றி பார்த்து விட்டு, "இந்த விறாந்தை இருக்குது தானே? இதில பெடியள் படுக்கட்டும்" என்றாள்.

"இதிலையோ? இதில படுக்கிறதுக்கு ரவையில ஆட்கள் வருவினம்."

"அப்பா, முகட்டில படுக்க ஏலாதோ?" சங்கீதமணி நமுட்டுச் சிரிப்புடன் கேட்டான்.

"டேய், வாயில தூஷணம் தாண்டா வருது. என்ர கோபத்தைக் கிளறி வாங்கிக் கட்டாதை " என்று கர்ஜித்தபடி சங்கீதமணியின் முதுகில் ஒன்று வைத்தேன். உடம்பை ஒரு முறை முறுவலித்தபடி, வாயை மூடினான்.

"இது ஒரு பெரிய பிரச்சனை. அப்பா, ஒரு வட்ட மேசை மகாநாடு கூட்டுவமோ?" திருகோணமாமணி வினாவினான்.

"மகாநாடு? எனக்கு அதில நம்பிக்கை இல்ல. நீ எரிகிற நெருப்பில எண்ணெய் விடுற மாதிரி அல்லோ கதைக்கிறாய்?"

"அப்பா, இஞ்ச மண்ணெண்ணெய் என்ன விலை?" எனது கடைக்குட்டி ஒப்பிலாமணி கேட்டான்.

"டேய், ஏன்டா ஆட்டுக்குள்ள மாட்டை விடுறாய்? இப்ப என்ர பிரச்சனைக்கு மறுமொழி சொல்லுங்கோ. இவ்வளவு பேரும் இந்த அறையில எப்படி இருக்கிறது எண்டு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ. ஏதோ நான் இஞ்ச மாடா மாளிகையில இருக்கிறன் எண்டு நினைச்சு உங்கட கொம்மா உங்களை எல்லாம் இஞ்ச கூட்டிக் கொண்டு வந்திருக்கிறா" என்று எல்லோரையும் கர்ண கடூர பார்வையால் விசிறியபடி உரைப்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா, இஞ்ச ஏதாவது அகதி முகாம் இருக்குதோ?" திருகோணமாமணி கேட்டான்.

"இருக்குது."

"அப்ப நாங்கள் ஆறு, ஏழு பேர் அங்கை போய் இருக்கிறம். பிரச்சனை தீர்ந்துது தானே?"

"அகதி முகாம் எல்லாம் நிறைஞ்சு வழிஞ்சு சனங்கள் 'ரோட்டிலையும்' படுக்குதுகளாம்."

"அப்படியோ? அப்படியெண்டால் நாங்க 'ஹில்டன் ஹொட்டேல்ல' இருக்க ஏலாதோ?" ரொபர்ட் பெஞ்சமின் வாஞ்சையுடன் கேட்டான்.

"அதுக்கெல்லாம் நாங்கள் புண்ணியம் செய்திருக்க வேணும். என்ர ஒரு மாதச் சம்பளம் ஒரு நாளைக்கு அறை வாடகையிலேயே கரைஞ்சு விடும்."

இல்லாமை, இயலாமை, ஏழ்மை என்று பலவும் மனதினுள் பாம்பாக நடனம் புரிவது போல் தோன்றியது.

"இதுக்கு ஒரு வழி இல்லயா?" திருகோணமாமணி கேட்டான்.

"இருக்குது" என்றேன்.

"என்னப்பா?" பல குரல்கள் வெளிப்பட்டன.

"இண்டைக்கே நீங்கள் எல்லாரும்..... அம்மாவைத் தவிர..... ஊருக்கு போங்கோ. பிரச்சனை தன்ரபாட்டில தீர்ந்து விடும்."

"அப்பா, 'சூ' பார்க்காமல் 'கோல்பேஸ்' பார்க்காமல், 'மியூஸியம்' பார்க்காமல்..." என்று சங்கீதமணி இழுக்க, "சிலுக்கு சுமிதா 'அன்ரியின்ர' படம் பார்க்காமல்....." என்று திருகோணமாமணி அவனுடன் ஒத்துப்பாட, "நாங்கள் கொழும்பை விட்டுப் போகமாட்டம்" என்று மற்ற எல்லோரும் ஒரே குரலில் 'கோரஸ்' பாட, என் பாடு திண்டாட்டமாகி விட்டுது. என்ன செய்வது என்று தெரியாமல் 'பேந்தப்பேந்த' விழிக்க, தர்மபத்தினி என்னை நெருங்கினாள்.

"இஞ்சருங்கோ, கொழும்பில ஒரு வீடு எடுங்கோவன். பிள்ளையள் இஞ்ச இருக்க விரும்புதுகள். அதுகளுன்ர ஆசையை நிறைவேத்தி வையுங்கோவன்."

"என்னெண்டு அதுகளுன்ர ஆசையை நிறைவேத்துறது? அதுக்கு நிறையக் காசு வேணுமே! 'அட்வான்ஸுக்கு' மட்டும் ஒரு ஐம்பதினாயிரமாவது தேவைப்படும்."

"அதுக்குத் தேவையான காசை நான் தாறன்."

"எப்படித் தரப் போறாய்? ஏதும் 'பாங்கை' உன்ர பெடியளைக் கொண்டு கொள்ளை அடிக்கப் போறியோ?"

"இல்ல."

"ஏதாவது கோயில் உண்டியல் பூட்டின்ர மாற்றுச் சாவி உன்னற்ற இருக்குதோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள மாதிரி கள்ளக்குணம் என்னஉற்ற இல்ல."

."அப்படியெண்டால் என்னெண்டு காசை புரட்டப் போறாய்?"

"என்னஉற்ற ரண்டு 'பிளான்' இருக்குது. அதில ஒண்டு சரி வந்தால் காசு வரும்."

"பிளானோ? முதல்ல உன்ர ஒரு 'பிளானைச்' சொல்லு பார்ப்பம்."

தர்மபத்தினியின் முகத்தில் ஒரு பிரகாசம் பரிணமித்தது. "இஞ்சருங்கோ, கோட்டை 'ஸ்டேஷனுக்கு' கிட்ட ஒவ்வொரு சாதி 'சுவீப்'பிலையும் பத்துப் பத்து வாங்கி இருக்கிறன். ஒண்டிலாவது 'பிரைஸ்' விழுந்து, சில லட்சங்களாவது கிடைக்காதோ? அந்தக் காசில 'அட்வான்ஸுக்கு' காசு தாறன்."

" சுவீப் டிக்கெட்டில 'பிரைஸ்' கிடைக்கும் எண்டு உனக்கு அவ்வளவு நம்பிக்கை இருக்குதோ?"

"ஓமப்பா. 'சல்லி கஹுா', 'திலின', 'செவன', 'சனீதா வாசனா' எண்டு வாயில வராத பெயரில 'சுவீப் டிக்கெட்' நிறைய வாங்கி வைச்சிருக்கிறன். என்ர சாதகப்படி பதினொரு பிள்ளையள் பிறந்து, கடைசிப் பெடியன் பள்ளிக்கூடத்திற்கு போகக்கில எனக்கு 'சுவீப்'பில 'பிரைஸ்' விழும் எண்டு எங்கட அப்புக்குஞ்சு சாத்திரியார் பன்னிரண்டு வருஷத்திற்கு முந்தி சொன்னவர். இப்ப கடைசிபெடி பள்ளிக்கூடத்திற்கு போகுது தானே?"

"அப்புக்குஞ்சு சாத்திரியாரில அவ்வளவு நம்பிக்கை வைச்சிருக்கிறியோ? அவர் சொன்ன சாத்திரம் எல்லாம் பிழையாகத்தான் முடிஞ்சிருக்குது. 1987 இல இருந்து சமாதானம் வரும் எண்டு சொன்னவர். வந்துதோ? அவரை விடு. நீ அதிர்ஷ்டசாலி எண்டு நினைக்கிறியோ? உன்ர மூஞ்சிக்கும், முகரக்கட்டைக்கும் அஞ்சி அதிர்ஷ்ட தேவதை உன்னை அணைக்க வரமாட்டாள்."

எனது சொற்பதங்களின் தாற்பரியத்தை அறியாத நிலையில் ஓர் அப்பாவிப் பார்வையை வெளியிட்டவள், "ஏன் நான் அதிர்ஷ்டசாலி இல்லை எண்டு நினைக்கிறியளோ" எனக் கேட்டாள்.

"ஓமடி. நீ அதிர்ஷ்டசாலி எண்டால் நாங்கள் எல்லாரும் இப்ப அமெரிக்காவில, அதுவும் ஜிம்மி கார்ட்டரின்ர வீட்டுக்குப் பக்கத்தில இருப்பம். சனிக்கிழமையில நிக்ஸன்ர வீட்டில சாப்பிடுவம். ஞாயிற்றுக்கிழமையில றோல்ஸ் ரொயிஸ் காரில நியூயோர்க் நகரத்தை உலா வருவம். சங்கீதமணி ஒரு குட்டி ஹொலிவூட் நடிகனாக இருப்பான். கிணற்றடியில பாட்டுப் பாடுற உன்ர கடைசி மேள் மைக்கேல் ஜாக்ஸனோட சேர்ந்து பாட்டுப் படிப்பாள்."

"அப்ப, எனக்கு 'சுவீப்' பில 'பிரைஸ்' விழாது எண்ட முடிவுக்கு வந்து விட்டியளோ?"

"ஓமடி. அதிர்ஷ்டத்தை இல்ல, இப்ப நான் கடவுளைக் கூட நம்புறதில்ல. உன்ர அதிர்ஷ்டத்தை நம்பி நான் மண் கவ்வத் தயாரில்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதாவது உருப்படியான விசயத்தைச் சொல்லு. கேட்கிறன். சரி, உன்ர ரண்டாவது 'பிளான்' என்ன?"

"திரும்பிப் போறதுக்காக பதினையாயிரம் ரூவா இருக்குது. என்ர கழுத்திலையும், பிள்ளையளுண்ர கழுத்திலையும் இருக்கிற நகை, நட்டுக்களை அடகு வச்சால் அறுபது, எழுவது எண்டு தேறும். அந்தக் காசு 'அட்வான்ஸுக்கு' காணும்."

"மாசா மாசம் வாடகைக்கு காசுக்கு எங்கை போவாய்? நகை, நட்டை எப்படி மீட்கப் போறாய்?"

"அது ரண்டாம் பட்சம். இப்ப இருக்கிறதுக்கு எங்களுக்கு வீடு தேவை. அதை முதல்ல எடுங்கோ. பேந்து சில வேளையில 'சுவீப் டிக்கெட்டில' 'பிரைஸ்' விழலாம். அப்படி இல்லாவிட்டால் சமாளிப்பம்."

"சரி, நீ இப்படி சொல்லக்கில நான் மரக்கட்டையாட்டம் நிற்கிறது பிழை. இப்ப போறன். நீயும், பிள்ளையளும் இந்த அறைக்குள்ள கிடவுங்கோ. பிள்ளையளை எங்கையும் போக விடாதை."

நான் கூறியதைக் கேட்டு, "அப்பா வாழ்க" என்ற கோஷம் எழும்பியது.

சிறிது நேரத்தில் உடை மாற்றிக் கொண்டு அறையை விட்டுப் புறப்பட்டேன்.

வெள்ளவத்தை சந்தியை அடைந்து கொழும்பில் வெளியாகும் சகல ஆங்கில, தமிழ் பத்திரிகைகளையும் வாங்கிக் கொண்டு அறைக்கு மீண்டேன்.

அறைக்குப் போனவுடன் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் விளம்பரப் பகுதியை முதலில் மேய்ந்தேன். அடியேனுக்கு கடவுளைக் கண்ட சந்தோஷம் திடீரென ஏற்பட்டது.

"இடியே, ஆரோ பரோபகாரி இரண்டறை வீட்டை 1500 ரூபா வாடகைக்கு விடுறானாம். அதுவும் பம்பலப்பிட்டியில. நான் இப்பவே போயிற்று வாறன்" என்றபடி ஓட்டமும், நடையுமாக சென்று, பஸ் பிடித்து, பம்பலப்பிட்டியை அடைந்தேன். பல இடங்களுக்கும் அலைந்து திரிந்து, கடைசியாக, குறிப்பிட்ட வீட்டைக் கண்டு பிடித்த போது, அங்கு 'கேட்'டின் வெளியே ஒரு 'கியூ' நிற்பதைக் கண்டு துணுக்குற்றேன்.


'க்யூ'வில் நானும் சேர்ந்தேன். எனக்கு முன்னால் ஒரு 'சைவக்கிழம்'. எண்பது வயதிருக்கும். சுருட்டுப் புகையில் இன்பம் கண்டு கொண்டிருந்தார்.

"தம்பி (?), மொத்தமாக இதுவரை அறுபத்திரண்டு வீடுகள் பார்த்திருப்பன். ஒண்டுமே சரிப்பட்டு வரயில்ல. வாடகை பொருந்தினால் 'அட்வான்ஸ்' பொருந்தாது. 'அட்வான்ஸ்' பொருந்தினால் வாடகை பொருந்தாது. இரண்டுமே பொருந்தினால் இடம் பாதுகாப்பானதாக இருக்காது. மூண்டுமே பொருந்தினால் வீட்டுச் சொந்தக்காரங்க என்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரைக் கேட்டுப் போட்டு, 'ஸொரி, உங்களுக்கெல்லாம் வீடு தந்திட்டு என்னரல பொலிஸ் ஸ்டேஷனுக்கு ஏறி இறங்க ஏலாது' என்கிறாங்கள். சரி இதெல்லாம் பொருந்தினால் 'விசிட்டர்ஸ்' வரக்கூடாது. நாய் வளர்க்கக்கூடாது, தமிழ் பாட்டுக்களை 'பலமாக போடக்கூடாது' எண்டு




சொல்லுறாங்கள். சரி இது எல்லாத்துக்கும் உடன்பட்டால், என்னைப் பார்த்து விட்டு, 'பெரியவரே, நீங்கள் ஒண்டிரண்டு மாதங்களுக்குள்ள மண்டையை போட்டு விடுவிங்க. என்ர வீட்டை உங்கட செத்த வீட்டை நடத்துறதுக்கு விட எனக்கு விருப்பம் இல்ல' என்கிறாங்க. இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கில இப்படியே நான் போனால் வீடு தேடப் போற இடத்தில தான் எனக்கு சாவு கிட்டும்" என அந்தப் பெரியவர் மூக்கால் அழுதார்.

அவருக்கு ஆறுதல் கூற நான் வார்த்தைகளை மனதினுள் கோர்க்க முற்பட்ட போது, வீட்டின் முன் 'கேட்' திறக்கப்பட்டது. 'நைட்டி'யுடன் ஓர் இளம் பெண் நிறைய கவர்ச்சியைக் காட்டியபடி வந்தாள். எல்லோரையும் பார்த்து, 'மன்னிப்புப் புன்னகை' ஒன்றை உதிர்த்தாள். "நீங்கள் எல்லாரும் 'பேப்பரில்' வந்த விளம்பரத்தைப் பார்த்து விட்டு வந்திருக்கிறீங்க என்று நினைக்கிறன். மன்னிக்க வேண்டும். வாடகை விஷயத்தில் ஒரு சைபரைக் காண இல்லை. உண்மையில் வாடகை 15,000 ரூபா. 1,500 அல்ல. 'அட்வான்ஸ்' ஒரு லட்சத்து எண்பது ஆயிரம் ரூபா. விருப்பமிருக்கிற ஆட்கள் நில்லுங்கோ" என்றாள்.

அடுத்த வினாடி அந்த இடத்தில் இருந்து முதலாவதாக புறப்பட்டவன் நான் தான்.

ஏமாற்றம், ஆதங்கம், ஆத்திரம், கோபம் ஆகியவற்றை மனதில் சுமந்தவண்ணம் கோணலான நிலையில் வீடு வந்தேன். வீட்டை அடைந்தவுடன் தர்மபத்தினி, பிள்ளைகள், 'சன்–இன்–லோ' என்று பதிமூன்று பேரையும் கண்டபடி ஏச வேண்டும் என்று எண்ணி இருந்தேன். ஆனால், வீட்டை அடைந்த போது எனது மச்சான் முறையான சாம்பசிவம் அங்கு என் தர்மபத்தினி, பிள்ளைகளுடன் அளவளாவுவதைக் கண்டு, எனது உணர்ச்சிக் கொட்டலை ஒத்தி வைத்தேன்.

அவன் எடுத்த எடுப்பில்,"அத்தான், ஒரு நல்ல சமாச்சாரம் சொல்லத்தான் வந்திருக்கிறன்" என்று சொன்னான்.

"உனக்கு விழுந்த 'சுவீப் டிக்கெட்டை' எனக்குத் தரப்போறியோ?" என்று சுவாரஷ்யத்துடன் கேட்டேன்.

"எனக்கு 'சுவீப் டிக்கெட்டில' நம்பிக்கை இல்ல..... அத்தான், அதிர்ஷ்டம் இருந்திருந்தால் நான் பரமசிவத்திற்கும், பரமேஸ்வரிக்கும் பிள்ளையாய் பிறந்திருக்க மாட்டன். மார்ட்டினுக்கும், மெனிக்கேயுக்கும் பிள்ளையாகப் பிறந்திருப்பன். அப்படி பிறந்திருந்தால் இந்த நாட்டில ராசா மாதிரி இருப்பன். அகதி மாதிரி கனடாவுக்கு போக மாட்டன்."

"என்ன, நீயும் கனடாவுக்கு போகப் போறியோ?"

"ஓமோம். நானும், மனுசியும், பிள்ளையளும் போறம். போக முந்தி ஆரும் நம்பிக்கையான ஆளிட்ட வீட்டை குடுத்திட்டு போக வேணும். கூட்டாளி ஒருவன், தான் வீட்டைப் பாரம் எடுக்கிறன் எண்டு சொன்னான். ஆனால், நேத்தைக்கு இரவு வந்து தன்னால பாரம் எடுக்க ஏலாது எண்டு என்ர காலை வாரிப் போட்டான். அப்பத்தான் உங்கட நினைப்பு வந்துது. நீங்க தனியாக இருந்தாலும் குடுத்திட்டு போவம் எண்டு நினைச்சன். இஞ்ச வந்தாப் பிறகு தான் அக்காவும், பிள்ளையளும் வந்திருக்கிறதை அறிஞ்சன். அதோட நீங்களும் வீடு ஒண்டை எடுக்கிறதுக்காக



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிட்டீங்க எண்டதையும் அறிஞ்சன். அப்படி எண்டால் என்ர வீட்டை எடுங்கோ. எனக்கு வாடகை வேண்டாம். வீட்டின்ர சோலை வரியை கிரமமாகக் கட்டி, சின்ன சின்ன 'றிப்பேரை' செய்து கொண்டிருந்தால் போதும். கட்டில், மேசை, கதிரை எண்டு ஒண்டும் வாங்காதேங்கோ. என்ர சாமான்கள் எல்லாத்தையும் விட்டுட்டுத் தான் போறன்."

அவன் கூறியதைக் கேட்ட போது என் முகம் நிச்சயம் ஆனந்தத்தினால் மத்தாப்பாகி இருக்க வேண்டும். உடல் முழுவதும் சந்தோஷம் தங்கு தடையின்றி ஓடியது.

"டேய் அப்பு, நீ அல்லோ கடவுள். மனுஷருக்குள்ள கடவுள் இருக்குது எண்டு சொல்லுறது சரி எண்டு இப்பத்தான் படுது. அப்பு, உன்ர படத்தை தந்து விட்டுப் போ. நான் அதுக்கு 'பிரேம்' போட்டு, ஒவ்வொரு நாளும் பூ போட்டுக் கும்புடுறன்"என்று சொல்லும் போதே என் நா தழுதழுத்தது.

"சாம்பு மாமா வாழ்க" என்று பிள்ளைகள் கோஷமிட்டார்கள்.

தர்மபத்தினியின் முகத்தில் மகிழ்ச்சி ததிங்கிணதோம் போட்டது.

"சாம்பு மாமாவுக்கு ஒரு முட்டைக் கோப்பி குடுங்கோ அம்மா" என்று குதூகலித்தான் சங்கீதமணி.

சாம்பசிவத்தின் கைகளை அன்புடன் பற்றினேன். "அப்பு, நீ ஒரு பெரிய உதவியை செய்திட்டாய். உன்னை என்னால மறக்க ஏலாது."

"மாமா, எப்ப உங்கட வீட்டில குடியேறலாம்?" சங்கீதமணி கேட்டான்.

"இண்டைக்கே. எங்களுக்கு பின்னேரம் 'ஃபிளைட்'. நல்ல நேரமாகப் பார்த்து வாங்கோ."

மீண்டும் ஒரு "சாம்பு மாமா வாழ்க" கோஷம்.

அன்றைய மாலைப் பொழுதில் மகிழ்ச்சியினால் அரை அங்குலம் பெருத்து விட்ட நானும், வாயெல்லாம் பற்களான நிலையில் தர்மபத்தினியும், தலைகால் புரியாத நிலையில் பதினொரு பிள்ளைகளும், சோம் பேறித்தனத்தை உதறித் தள்ளிய நிலையில் 'சன்–இன்–லோ' வும் வெள்ளவத்தையில் இருந்து சாம்பசிவத்தின் வீட்டை நோக்கிப் பயணமானோம்.

## (2)

சாம்பசிவத்தின் வீட்டுக்கு வந்து ஒரு மாதம் மறைந்தது.

இந்த ஒரு மாதத்தையும் எனது குடும்ப அங்கத்தவர்கள் யாவரும் மிகவும் குதூகலத்தில் நகர்த்தினார்கள்.

சில நாட்களைக் கொழும்பில் கழித்துவிட்டு யாழ்ப்பாணத்திற்கு மீளப் போவோம் என்ற எண்ணத்தில் வந்தவர்கள், கொழும்பின் 'உன்மத்தங்களில்' தமது மனதைப் பறி கொடுத்து, இங்கேயே நிரந்தரமாகத் தங்கி விடுவோம் என்ற தீர்மானத்துக்கு வந்தனர். இந்தத் தீர்மானத்தில் எனக்கு அறவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பம் இல்லை என்ற போதிலும், யாவருமே தமது தீர்மானத்தை நிறைவேற்றியே தீர வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கவே, "சரி இஞ்சேயே இருங்கோ" என்று இறுதியாகக் கூறினேன்.

இதனைத் தொடர்ந்து ஊரில் பள்ளிக்கூடம் சென்ற பிள்ளைகள் இங்குள்ள பள்ளிக் கூடங்களில் சேர்ந்து விட்டார்கள். மற்றவர்கள் வீட்டில் முடங்கிக் கிடந்தனர்.

சாம்பசிவத்தின் வீடு நாலறை கொண்டது. கண்ணை மூடி பதினைந்து, இருபதினாயிரம் ரூபாவிற்கு வாடகைக்கு விடலாம். அந்தளவில் நான் மகா அதிர்ஷ்டசாலியே! ஒருசெம்புச் சல்லியையும் அவனிடம் நீட்டாமல் இந்தப் பென்னம் பெரிய வீட்டை எடுத்துவிட்டேன்.

நாலறையில் முதல் இருந்த சிறிய அறையை நானும்,தர்மபத்தினியும் பங்கு போட்டோம். இரண்டாவது அறையை 'சன்–இன்–லோ' தம்பிப்பிள்ளையும், மூத்தமகள் பருபதபத்தினியும் தமதாக்கினர். மூன்றாவது அறையை ஆண் பிள்ளைகளுக்கும், நான்காவது அறையை பெண்பிள்ளைகளுக்கும் ஒதுக்கினேன்.

சாம்பசிவத்தின் உருவம் தான் அடிக்கடி என் கண்முன்னே தோன்றியது. அவனை மனதினுள் கடவுளாகப் பூஜித்தேன்.

ஏப்ரல் மாதம் பிறந்தது. புது வருடப் பிறப்பு நெருங்கிக் கொண்டிருந்தது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை.

நள்ளிரவாக இருக்க வேண்டும்.

என்னை மறந்த நிலையில் நித்திரையில் லயித்திருந்தேன். 'கொர்', 'கொர்' என குறட்டை விட்டு, நுளம்புகள், கொசுக்கள் என்னை அண்ட விடாமல் தூக்கத்தில் கிடந்திருப்பேன் என்பது நிச்சயம்.

திடீரென 'யாரோ' என்னை உலுப்புவதை உணர்ந்தேன். மிகக் கஷ்டப்பட்டு, கண்களைத் திறந்தேன். என் தர்மபத்தினி தான் என்னை உலுப்பினாள் என்பதை அவள் என் மூக்கைப் பிடித்து, அழுத்த முற்பட்ட போது அறிந்தேன். அவள் கையைத் தட்டியபடி, கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்தேன். அவளும் நிமிர்ந்தாள்.

ஜன்னலூடாக ஊடுருவிய சந்திரனின் வெளிச்சத்தில் தர்மபத்தினியின் மேலுடம்பை, முகத்தை கண்களால் மேய்ந்தேன். அவள் முகத்தில் ஒரு 'பள, பளப்பு' பளிச்சிட, என்னுள் உற்சாகமும், உத்வேகமும் ஏற்பட, மனதை 'ஏதோ' ஓர் உணர்ச்சி தாளம் போட வைத்தது. சில விநாடிகளில் கடல் அலைகளுள் புரண்டு, உருண்டு, உருளுவது போன்ற உணர்வு உடலைக் கெட்டியாகப் பிடிக்க, என் மனதின் அனுமதி இன்றி வார்த்தைகள் புறப்பட்டன.


"என்ர ராசாத்தி, குஞ்சு, மக்களைப் பெற்ற மகராசி, சீதேவி..... நீ இப்பவும் இருபத்தியாறு வயசுக் குமரி மாதிரித் தான் இருக்கிறாய். நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122433

உடுத்து, படுத்துக் கொண்டு தெருவில போனால், ஆரும் தெரியாத ஆட்கள் உன்னைப் பார்த்தால், எங்கட மூத்த மேள்ன்ர அக்காவோ எண்டு கேட்டு மூக்கில விரலை வைப்பினம். இருபத்தைஞ்சு வருஷத்துக்கு முந்தி எங்கட ஊர் திருவிழாவில பார்க்கக்கில என்ன மாதிரி இருந்தியோ, அந்த மாதிரித்தான் இப்பவும் இருக்கிறாய். 'சோப்' விளம்பரக்காரங்கள் எங்கட வீட்டுக் கதவை இது வரை ஏன் தட்ட இல்ல எண்டு எத்தனை தரம் மூளையைப் போட்டு உருட்டி இருப்பன்" என்று வார்த்தைகளால் தர்மபத்தினியை அபிஷேகம் செய்தேன்.




எனது பசப்பு வார்த்தைகளுக்கு அவள் மயங்கி, "அன்பே என் நாதா, நக்கா" என விளிப்பாள் என்று நினைத்தால், அதற்கு எதிர்மாறாக, குரலில் 'கரகரப்பை' அணைத்த நிலையில், "உங்கட புகழ்ச்சி வார்த்தைக்கு ஒரு நாளும் தட்டுப்பாடு இல்ல. ஒரு சதமும் செலவளிக்காமல் வார்த்தை ஜாலங்களை பூமாலையாகப் போட்டு, உங்கட காரியத்தை நிறைவேத்தி விடுவீங்க. ஐம்பத்திரண்டு வயசிலும் இருபத்தியாறு வயசுக் குமரி போல இருக்கிற இந்த மனுசிக்காரியின்ர ஆசையை நிறைவேத்தி வைக்கத்தான் உங்களுக்கு வக்கு இல்ல" என்றவள், மூக்கை இரு முறைகள் உறிஞ்சிவிட்டு, கண்களைக் குளமாக்கினாள்.

"இடியே, ஏன்ரி அழுறாய்? நான் உன்னை அடிச்சுப் போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டன் எண்ட மாதிரி அல்லோ அழுறாய். என்ர செல்லக் குஞ்சு, நான் உன்னை அடிச்சனானோ? "என கொஞ்சும் குரலில் குழைந்தபடியே அவள் கன்னத்தில் ஆசை ததும்பக் கிள்ளினேன்.

"கையை எடுங்கோ"என்றவள், என் கையைத் தட்டி விட்டாள்.

கோபம் 'பொத்'தென என்னைக் கவ்விப் பிடித்தது. "இடியே, இந்த நட்டநடு ராத்திரியில என்னை ஏன்ரி ஒழுப்பினனி? அழுது காட்டவோ?" என்று சற்றுச்சினத்துடன் வினாக்களைத் தொடுத்தேன்.

"அழுது காட்ட நான் என்ன நடிகையோ? என்ர அடிமனதில இருக்கிற துக்கத்தால தான் கண்ணீர் தன்ரபாட்டில வெளிய வருது. உங்களைக் கலியாணம் கட்டின பிறகு நான் அழுத கண்ணீரை சேர்த்து வைச்சால், தண்ணி இல்லாத காலத்தில நானும், பதினொரு பிள்ளையளும் குளிக்கக் காணும்"என தர்மபத்தினி அழுகையை அடக்கியபடி வெடித்தாள்.

"சும்மா பேய்க்கதை கதையாதை. உன்னை நான் என்ர கண்ணின் மணி போல, கங்காரு தன்ர குட்டியை மடியில வைச்சிருக்கிற மாதிரி, வைச்சுப் பராமரிக்கிறன். நீ கிணற்றுக் கணக்கில கண்ணீர் விடுற அளவுக்கு உனக்கு என்ன குறை வைச்சிருக்கிறன் எண்டு சொல்லு பார்ப்பம்."

நான் வாயை மூட முன் அவள் வார்த்தைகளை ஈட்டிகளாக என் மீது ஏவினாள்.

"குறை வைக்காத மாதிரி அல்லோ அப்பாவி போல கேள்வி கேட்கிறியள். மனதைத் தொட்டு உண்மையைச் சொல்லுங்கோ."

"நீ என்னடி சொல்லுறாய்? குருடன் செவிடனுக்கு கதை சொன்ன மாதிரி நீ சொன்னால் எனக்கு என்ன விளங்கும்? கொஞ்சம் விளக்கமாகச் சொல்லன்."

"உங்களை கலியாணம் கட்டின பிறகு எத்தனை புது வருஷம் வந்திருக்கும் எண்டு நினைக்கிறியள்?"

உடனே என் கை விரல்களையும், கால் விரல்களையும் எண்ணிப் பார்த்து, அவை காணாமல் போகவே அவள் கை விரல்களையும் எண்ணி விட்டு, "உன்னைக் கண்ட பிறகு இருபத்தியாறு. உன்னை கட்டினாப் பிறகு இருபத்தைஞ்சு" எனப் பெருமூச்செறிந்தேன்.

"இந்த இருபத்தைஞ்சு புது வருஷத்தில நீங்க எந்த புது வருஷத்திற்கு எனக்கு புதுச்சாரி வாங்கித் தந்தீங்க எண்டு சொல்லுங்க பார்ப்பம்."

"ஓ! இப்பத்தான் உன்ர கண்ணீருக்கான காரணம் எனக்கு விளங்குது. சரி, உன்ர கேள்விக்கு மறுமொழி சொல்லுறன். இருபத்தைஞ்சு புதுவருஷத்தில பதினொரு புது வருஷத்தன்டு நீ பிள்ளை பெத்துக்காக ஆசுபத்திரியில கிடந்ததால புதுச்சாரிக்குப் பதிலாக பால் மாவும், முட்டையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுக்கோத்தும் தான் வாங்கி வர முடிஞ்சுது."

"மீதி பதினாலு புதுவருஷத்தில எத்தனை புதுச் சாரி வாங்கித் தந்திங்க?"

"முதலாவது புதுவருஷத்தில என்னையே உனக்கு பரிசாக தந்தன். அதை அதுக்கிடையில மறந்து விட்டியோ?" என சிரிப்பை அடக்கியபடி பெருமை படரக் கேட்டேன்.

"உங்களை நான் பரிசாக நினைக்கிறதில்லை, தரிசாகத் தான் நினைக்கிறனான்...... சரி, அந்த ஒரு வருஷத்தை விடுறன். மீதி பதிமூண்டு புது வருஷத்தில என்ன வாங்கிக் கிழிச்சீங்க?"

"ஒவ்வாரு புது வருஷத்திற்கும் கோச்சி ஓடினாலும், ஓடாட்டாலும், 'கேர்ஃபியூ' போட்டாலும், போடாட்டாலும், அடிச்சுப் பிடிச்சு, அரக்கப்பரக்க உன்னைப் பார்க்க கொழும்பில இருந்து ஊருக்கு வாறதை நீ மறந்து விட்டியோ? உன்னோட சோடி கட்டிக் கொண்டு எங்கட ஊர் கோயில் காவடி ஆட்டத்திற்கு போனதை மறந்து விட்டியோ? காவடியாட்டம் முடிஞ்ச பிறகு கோயிலுக்கு பக்கத்தில இருக்கிற கடலைக்காரனற்ற கச்சான் கடலை வாங்கித் தந்ததை மறந்து விட்டியோ? புது வருஷத்திற்கு இவ்வளவு செய்திருக்கிறதை அதுக்குள்ள மறந்து விட்டியோ?" என கேள்விகளை வீச்சுடன் விசிறினேன்.

தர்மபத்தினி 'குபீர்' எனச் சிரித்தாள். மனதை 'ஏதோ' குமட்டியது போலிருந்தது. அவள் என்னை ஏளனமாகப் பார்த்தாள். "ஒரு சாதாரண புருஷன் கூட செய்யுறதை செய்து விட்டு, 'மறந்து விட்டியோ', 'மறந்து விட்டியோ' எண்டு தம்பட்டம் அடிக்கிறியளே! உங்களுக்கு இப்படிக் கேட்க வெட்கம் இல்லையோ?"

அவள் வார்த்தைகளில் தென்பட்ட வெக்கை, என் மனதை அவித்தது, உடலைக் கொதிக்க வைத்தது. "இடியே, நான் ஒண்டு கேட்கிறன். உண்மையைச் சொல்லுவியோ?" என ஆக்ரோஷத்துடன் கேட்டேன்.

"என்ன?"

"எங்கட இருபத்தைஞ்சு வருஷ கலியாண வாழ்க்கையில உனக்கு எத்தனை சாரி வாங்கித் தந்திருப்பன் எண்டு நீ நினைக்கிறாய்?"

சிறிது நேர யோசனையின் பின், "ஒரு ஐம்பது இருக்கும்" என்றாள்.

"இதுகளை எல்லாம் ஆரடி வாங்கித் தந்தது? அடியேன் தானே?"

"ஓமோம்."

"அப்ப ஏன்ரி மீனைப் போல எந்த நேரமும் கண்ணீர் விடுறாய்?'சாரி வாங்கித் தா, தா' எண்டு என்ர உயிரை வாங்கிறாய்? வசதி வாற நேரத்தில சாரி வாங்கித் தருவன் தானே?" என்ர அம்மான்ர 'பேர்த்டேக்கு' சாரி வாங்கித் தாறன் எண்டு அம்மாற்ற சொல்லி, சொன்ன மாதிரி சாரி வாங்கி வந்து அதை அவவுக்கு குடுக்காமல் உனக்குத் தானே தாறனான்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்ர குஞ்சி அம்மான்ர குஞ்சு மேளின்ர கலியாண வீட்டுக்கு நான் வாங்கித் தந்த புதுச்சாரியை 'சரசரக்க' உடுத்திக் கொண்டு நீ போக, நான் பீத்தல் வேட்டியைத் தானே மடிச்சுக் கட்டி சமாளிச்சனான்? இப்படி உனக்கு சாரி வாங்கித் தாறதுக்காக எத்தனை பொய் புரட்டுக்களை, தியாகங்களை செய்திருப்பன்?"

சோகத்தை இரவல் வாங்கிய நிலையில், வார்த்தைகளைக் கபடமாக வெளியிட்டு, தர்மபத்தினியின் மனதைக் கரைக்க முற்பட்ட போதும், தோல்வி தான் கிட்டியது. அவள் மனம் கட்டியாகி இருக்க வேண்டும். "எல்லாத்தையும் ஒத்துக் கொள்றன். ஆனால், நீங்கள் புதுவருஷத்துக்கு எண்டு புதுச் சாரி வாங்கித் தர இல்லத் தானே?"என்று என்னை மடக்கினாள்.

ஆத்திரம் கட்டை மீறியது. "இடியே, நான் தந்த ஐம்பது சாரியும் பழைய வருஷ சாரியோ?"

"நான் அப்படிச் சொல்ல இல்ல. புது வருஷத்தைச் சாட்டி எண்டாலும் எனக்கு புதுச் சாரி வாங்கித் தாங்கோ எண்டு தான் கேக்கிறன்."

"என்னடி உடைஞ்ச 'ரெக்கோர்ட்' மாதிரி திருப்பித் திருப்பி 'புதுச்சாரி வாங்கித் தாங்கோ, தாங்கோ' எண்டு அடம்பிடிக்கிறாய்? உனக்கு சாரி வாங்கித் தந்தால், எங்கட பதினொரு பிள்ளையளும், 'சன்–இன்–லோ' வும் வாயை மூடிக் கொண்டு சும்மா இருப்பினமோ? எல்லாரும் வாயைத் திறந்தால் நான் நாளைக்கு' ஒபிஸுக்கு' கோவணத்தோட தான் போக வேணும். இப்பவே ஒரு வருஷ சோலைவரி பாக்கி இருக்குது. 'கரண்ட் பில்' இரண்டாயிரத்தையும் தாண்டி விட்டுது. தண்ணி 'பில்லை' கட்டாததால தண்ணியையும் வெட்டுற நிலையில இருக்கிறம். நீங்கள் எல்லாம் ஊரில இருந்து இஞ்ச படை எடுத்தாப் பிறகு நான் படுற பாடு உனக்குத் தெரியுமோ? என்ர நிலையை 'லைட் போஸ்ட்' டுக்கு சொன்னால் கூட அது கண்ணீர் விடும்" என்று சொல்லும் போதே என் நாத் தழுதழுத்தது.

தர்மபத்தினியின் முகத்தில் எவ்வித மாற்றமும் தென்படவில்லை. முகத்தை 'உம்' மென்று வைத்தபடி இருந்தாள். பின் பேசினாள். "அப்ப இந்த முறையும் சாரி வாங்கித் தரமாட்டீங்களோ?"

யோசித்தேன். கபடமான ஓர் எண்ணம் மனதினுள் முளைத்தது.

"சரி வாங்கித் தாறன்."

நான் கூறியதைக் கேட்டு அவள் சொக்கி விட்டாள். "என்ர அச்சாக் குஞ்சு, செல்லக் குஞ்சு, என்ர மன்மதராசா, கணவனே கண்கண்ட தெய்வம் எண்டதை நிரூபிக்கும் என்ர காதலனே..... இல்ல இல்ல, காவலனே" எனப் பிதற்றினாள்.

அவளின் மகிழ்ச்சியைக் கொய்யும் நோக்கில் என் அடிமனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதையுண்டிருந்த நரித்தனத்தை வெளிப்படுத்தினேன். "ஆனால், ஒரு 'கொண்டிஷன்'."

"என்ன, நீங்களும் 'கொண்டிஷன்' போடுறியள்."

"புதுச்சாரியை மடிப்புக் குலையாமல் வைச்சிருந்து, அடுத்த வருஷம் தான் கட்டவேணும்."

இதைக் கேட்டு, தர்மபத்தினி நக்கீரப் பார்வை ஒன்றை வீசினாள். 'டேய், சுப்பிரமணியா, வேல் கைவசம் இருந்தால் உன் நெஞ்சில் பாய்ச்சுவேன் என்னுமாப் போல என்னைக் கொலை வெறியுடன் நோக்கினாள். அவள் உதடுகள் துடித்தன. "உங்களுக்கு என்ன பைத்தியம் பிடிச்சுப் போட்டுதோ? இல்லாவிட்டால் பேய் பிடிச்சுப் போட்டுதோ?...... உங்களைக் கலியாணம் கட்டின நேரம் ஒரு எருமையைக் கட்டி இருந்தாலாவது அடுத்தவன், அயலவன்ர வயலை உழுது அதில கிடைக்கிற காசில ஒரு புதுச்சாரி வாங்கி இருப்பன்."

"உன்னை எருமை கூட கட்டாது. கழுதை தான் கட்டும். நானெண்டபடியால் உன்னைக் கட்டினன். உன்னை மொத்தமாக எத்தனை பேர் பார்த்திருப்பினம்? ஒரு இருவதாவது வரும். ஒவ்வொருத்தனும் சொல்லி வைச்ச மாதிரி பொம்பளைக்கு வாய்க் கொழுப்பு எண்டு சொல்லிப் போட்டு உங்கட வீட்டுப் பக்கமே தலை வைச்சுப் படுக்க இல்ல. அது உனக்குத் தெரியுமோ? அப்படி தெரிஞ்சால் நீ இப்படி கதைக்க மாட்டாய்."

எனது வார்த்தைகள், அவள் நலிந்த இதயத்தை தைத்திருக்க வேண்டும். 'வெலவெலத்த' நிலையில் என்னைப் பார்த்து 'பேந்தப் பேந்த' விழித்தாள். பேசுவதற்கு வார்த்தைகள் இன்றி திக்குமுக்காடினாள். சில வினாடி நிசப்தம் நிலவியது.

தர்மபத்தினியைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அவளை நெருங்கினேன். "என்ர தர்மபத்தினியே, என்ர பதிவிரதாசிரோண்மணியே, உனக்கு உண்மையைச் சொன்னால் என்ன? நீ பாதி, நான் மறுபாதி தானே? புது வருஷத்திற்கெண்டு புதுச்சாரி வாங்கவோ, இல்லாட்டால் புதுசு புதுசாக பிள்ளையளுக்கு உடுப்புக்கள் வாங்கவோ, எங்கட பழைய காலத்து சம்பிரதாயங்கள கடைப்பிடிக்கவோ என்னற்ற காசு இல்ல. இல்லாமை, இயலாமை, ஏழ்மை எண்டு எல்லாமே வாட்டி, துவட்டி, கையாலாகாதவன் எண்ட நிலைக்கு என்னைத் தள்ளி விட்டுது. நான் வாடுறன். என்னோட சேர்ந்து நீங்களும் வாடுறீங்க. முதுகைச் சொறியுறதுக்கே நகம் இல்லாத நிலையில நான் அவதிப்படுறன், அல்லல்படுறன். கோழி வளர்த்தாலும் கொவன்மேந்து உத்தியோகம் பார்க்க வேணும் எண்டு எங்கட ஆக்கள் அந்தக் காலத்தில செபிச்ச தாரக மந்திரத்திற்கு கட்டுண்டு, மோட்சத்துக்கு பதிலாக மோசம் போயிட்டன். எண்பத்து மூண்டு ஆடிக் கலவரம் மாதிரி அறுபத்து மூண்டில ஒரு கலவரம் வந்திருந்தாலாது கனடாவுக்கோ, ஒஸ்திரேலியாவுக்கோ போய் கை நிறைய உழைச்சு புது வருஷம் எண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல், ஒவ்வொரு சனிக்கிழமையும் உனக்கு புதுசு புதுசாக சாரி வாங்கித் தந்து, எங்கட ஊர் காளி அம்மனைப் போல உன்னை ஆக்கியிருப்பன்."

"அப்படி போயிருந்தால் நான் புதுசு புதுசாக சாரி வாங்கித் தாங்கோ எண்டு கேட்டிருக்கமாட்டன்."

"அப்படி எண்டால்.....?"

"கட்டைச் சட்டையைத் தான் கேட்டிருப்பன்."

நைந்த நிலையிலும் தர்மபத்தினி அப்படியொரு கூற்றை வெளிப்படுத்திய போது நான் 'சிரி, சிரி' என்று சிரித்தேன்.

அதன் பிறகு தர்மபத்தினி என்னை நிம்மதியாகப் படுக்கவிட்டாள்.

## (3)

**வீ**ட்டில் இருந்து காரியாலயத்திற்கு புறப்படும் போது, தர்மபத்தினி என் முன்னால் ஓடி வந்து, என்னை வழி மறித்தபடி நின்றாள்.

"இடியே, ஏன்ரி நந்தி மாதிரி நிற்கிறாய்? கொஞ்சம் விலகி நில்லன்" என வார்த்தைகளால் அவளை அபிஷேகம் செய்தேன்.

"நல்ல வேளை மந்தி எண்டு அப்பா சொல்ல இல்ல. அப்படி சொல்லி இருந்தால் இஞ்ச 'பலவேகய' மாதிரி ஒரு 'ஒபரேஷனைப்' பார்த்திருக்கலாம்" என்றபடி வந்த சங்கீதமணி எனக்கும், தர்மபத்தினிக்கும் நடுவில் நின்றான்.

"டேய், பெரிய ஆட்கள் கதைக்கக்கில ஏன்ரா குறுக்கால கதைக்கிறாய்?" என்று அவன் மீது எரிந்து விழுந்தேன்.

"அப்படி எண்டால் நான் எப்ப உங்களோடு கதைக்கிறது?"

"நான் தான் இந்த வீட்டுத் தலைவன் எண்டு உனக்குத் தெரியுமோ?"

"ஓமோம்."

"எண்டபடியால என்ர மனதில என்ன இருக்குது எண்டு அறிஞ்சு, அதுக்கு ஏத்த மாதிரி கதைக்க வேணும்."

"அது என்னெண்டு அப்பா முடியும்? எனக்கு ஞானக் கண் இல்லயே!"

"அப்ப வாயைப் பொத்திக் கொண்டு இரு."

"அப்படி என்னால இருக்க ஏலாது. எந்த நேரமும் 'எதையாவது' சொல்ல வேணும். இல்லாட்டால் என்னால நித்திரை கொள்ள ஏலாது."

"நீ போன பிறவியில அரசியல்வாதியாகத் தான் பிறந்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேணும்." என்றாள் தர்மபத்தினி.

"இல்ல, இல்ல. 'குடுகுடு'ப்பைக்காரனாகத் தான் பிறந்திருக்க வேணும்" என்று தர்மபத்தினியைத் திருத்தினேன்.

சங்கீதமணி முழியைப் பிரட்டினானே தவிர ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

இவ்வாறு நாம் வாதம் புரிந்து கொண்டிருக்கையில் 'சன்–இன்–லோ' தம்பிப்பிள்ளை அசட்டுத்தனத்தை முகத்தில் அடக்கியபடி வந்தான்.

"மாமா, என்ர மனசுக்குள்ள ஒரு சந்தோஷமான சமாச்சாரம் ஒளிஞ்சு இருக்கிறது. அதை என்னெண்டு உங்களுக்கும், மாமிக்கும், மச்சான்மாருக்கும், மச்சாள்மாருக்கும் சொல்லுறது எண்டு தெரியாமல்



தவிக்கிறன் " என்ற தம்பிப்பிள்ளை, தொண்ணூறு சதவீத அப்பாவிச் சிரிப்பொன்றை உதிர்த்தான்.

"சந்தோஷமான சமாச்சாரமோ? 'பிளேனில' இருந்து குண்டு போடுறதுக்குப் பதிலாக, பூமாலைகளைச் சுருட்டிப் போடப் போறாங்களோ?" என அகடவிகடமாகக் கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

"இல்ல மாமா."

"க்ரசென்ட்ரா குரொஸிங்'எண்டு ஒரு இங்கிலிஷ் படம் எடுத்த மாதிரி, 'கிளாலி குரொஸிங்' எண்டு ஒரு படம் எடுக்கப் போறாங்களோ?"

"இல்ல மாமா."

"கொழும்பில இருக்கிற முட்டாள்கள் எல்லாரும் சேர்ந்து அமைக்கப் போற சங்கத்திற்கு உன்னைத் தலைவனாக்கப் போறாங்களோ?"

"இல்ல மாமா. என்ர சிரிப்பை பார்த்தாவது உங்களால ஏதாவது ஒண்டை ஊகிக்க முடியாதோ?"

"உன்னையும், உன்ர அசட்டுச் சிரிப்பையும் பார்க்கக்கில பனை மரத்தில இருந்து விழுந்த பனம் பழத்தின்ர ஞாபகம் தான் எனக்கு வருது. வேறை ஒண்டையும் என்னால ஊகிக்க முடிய இல்ல."

"இஞ்சருங்கோ, உப்புடியோ மருமோனோட கதைக்கிறது?" தர்மபத்தினி மருமகனுக்குப் பரிந்து பேசினாள்.

"இவன் மருமோனோ? இல்ல மறுமோடன். வந்த நேரம் துடக்கம் 'பூன்' வித்தை காட்டுறான். ஏதோ சந்தோஷமான சமாச்சாரத்தை மனசில வைச்சுக் கொண்டு சொல்லித் தொலையுறான் இல்ல."

"மாமா, நீங்க தானே என்னை கதைக்க விடுறீங்க இல்ல. நான் சமாச்சாரத்தை சொல்ல முந்தி நீங்க குறுக்கீடு செய்யுறீங்க."

"சரி, சொல்லித் தொலை."

"மாமா, சந்தோஷமான சமாச்சாரம் என்ன தெரியுமோ?"

"சொல்லன்ரா."

"நான் ஒரு அப்பாவாகப் போறன்."

தம்பிப்பிள்ளை கூறியதைக் கேட்டு ஆச்சரியமுற்றேன். தர்மபத்தினியின் முகத்திலும் ஆச்சரியம் விரிந்தது.

"அக்காவுக்கு பத்துப் பிள்ளைகள் பிறக்கணும். நான் அதுக்கு பாவாடை, சட்டை தைச்சு கொடுக்கணும்"என்று 'மேஜர் சந்திரகாந்த்' பாடலை முகாரி ராகத்தில் பாடினான் சங்கீதமணி.

"பொத்தடா வாயை.... மருமோன் நீ என்ன சொல்றாய்? உண்மையோ சொல்லுறாய்?"

"மாமா, நான் உண்மையைத் தான் சொல்றன்.... 'எனக்கு ஒரு மகன் பிறப்பான். அவன் என்னைப் போல இருப்பான்', என 'பெற்றால் தான் பிள்ளையா' பாடலைக் குதூகலத்துடன் பாடினான் தம்பிப்பிள்ளை.

"அவன் உன்னைப் போல பிறந்தால் அடுத்த தலைமுறையினர் முட்டாள்கள் சங்கத்தை அமைக்க முன் வந்தால் அவனே தலைவர், செயலாளர் பதவியை ஏற்கலாம்" என்று ஆச்சரியத்தை உதறித் தள்ளியவனாகச் சொன்னேன்.

அவன் முகம் தொட்டாற் சுருங்கி போலாகியது.

தம்பிப்பிள்ளையை சங்கீதமணி ஆசையுடன் நோக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHOX 191

"அத்தான் உங்களுக்கு என்ன பிள்ளை பிறக்க வேணும்? ஆம்பிளையா? பொம்பளையா?"

"ஆம்பிள்ளை, பொம்பளை பற்றி எனக்கு கவலை இல்ல. எந்த வித 'ஒபரேஷனும்' இல்லாமல் பிள்ளை பிறக்க வேணும்."

"ஏன் 'ஒபரேஷன்' எண்டால் உனக்கு பயமோ?" எனக் கேட்டேன்.

"ஓம் மாமா. சில டாக்குத்தர்மார் 'ஒபரேஷன்' செய்யுறன் எண்டு சொல்லி ஆளையே 'குளோஸாக்கி' விடுவினம்."

"அட, உனக்கும் இப்ப விஷயம் எல்லாம் விளங்குது போல. மெய்யே, ஆம்பிளை பிறந்தால் என்ன பெயர் வைப்பாய்?" இது என் கேள்வி.

தம்பிப்பிள்ளை கண்மணிகளைப் போட்டு உருட்டி விட்டு, "டொனல்ட் டக்" என்றான்.

"நல்ல வேளை 'டிகரி, டிகரி டொக்' எண்ட பெயரைச் சொல்ல இல்ல" என சங்கீதமணி விழுந்து விழுந்து சிரிக்க நானும், தர்மபத்தினியும் ஒருவரது முகத்தை ஒருவர் வியப்புடன் பார்த்தோம்.

இரு நாட்கள் கழிந்த பின்னர் தம்பிப்பிள்ளை சோர்வுடன் வந்தான்.

"மாமா, எல்லாம் பிழைச்சுப் போயிட்டுது" என்றான்.

"என்னடா?" எனக் கேட்டேன்.

"எனக்கு ஒரு மகன் பிறக்காது."

"ஏன், என்ன நடந்து போச்சுது?"

"எங்கேயோ பிழைச்சு போச்சுது" என்றவன், தலையைத் தொங்கப் போட்டபடி சென்றான்.

எனக்கு அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

## (4)

'சன்–இன்–லோ' தம்பிப்பிள்ளை தலையில் கையை வைத்திருந்தான்.

தர்மபத்தினி கண்கள் குளமான நிலையில் கவலை, சக கோபம் மிழிற்ற, ஏகாந்தமான பார்வையுடன், அக்கிலி பிக்கிலியான நிலையில் வீற்றிருந்தாள்.

எனது இரண்டாவது பிள்ளையில் இருந்து பதினோராவது பிள்ளை வரையிலான பத்துப் பிள்ளைகளும் வேதனையை முகங்களில் அப்பிய நிலையில் 'பேந்தப்பேந்த' விழித்தபடி ஒவ்வொரு நிலையில் அமர்ந்திருந்தனர்.

முன் அறையில் இருந்து மூத்த மகள் பருபதபத்தினியின் விசும்பல் தெளிவாகக் கேட்டது.

அங்கு எந்த மட்டத்தில் ஒரு பிரச்சனை உருவாகி, அது எவ்வாறான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது என்பதை சில வினாடிகளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளேயே அனுமானித்து விட்டேன்.

தம்பிப்பிள்ளையின் கோலம், மூத்த மகளின் விசும்பல் அந்த உண்மையை என்னுள் தள்ளியது. நடக்கக் கூடாதது நடந்துவிட்டது.

இது போன்ற ஓர் உண்மை என் மனதினுள் புகுந்ததினால் தான், 1983 இல் காடையர்களின் வாள் வீச்சுக்கு தப்பினேன். அத்துடன் நான் வளர்த்த பத்து கோழிகளின் உயிரையும் காப்பாற்றினேன். அது பழைய கதை.

தர்மபத்தினியைப் பரிதாபத்துடன் நோக்கினேன். இப்போது அவள் மணவறைப் பெண்ணான நிலையில் கண்களை கீழே தாழ்த்தி இருந்தாள். நேரே அவளிடம் சென்றேன். உடனே அவள் 'கேவிக்கேவி' அழுதாள். வேறு இடம், வேறு சூழ்நிலை என்றால், அவளை அப்படியே இறுக அணைத்து, ஆறுதல் வார்த்தைகளை தேனாகக் கக்கியிருப்பேன்.

என் உணர்ச்சிப் பிரவாகத்தை அடக்கியபடி, "பருபதபத்தினியை உன்ர மருமோன் அடிச்சு, உதைச்சு விட்டானோ?" என வினா தொடுத்தேன்.

தர்மபத்தினியின் முகத்தை 'சடா'ரென ஆச்சரியம் அரவணைத்தது. "எ..... எ.... எப்படி நடந்ததை அச்சொட்டாக சொல்லுறியள்?"

"இடியே, ஒரு வேலையும் இல்லாமல், கனடாவுக்கு போக வேணும் எண்டு பைத்தியமாக திரியுற ஒருத்தனுக்கு, தன்ர பெஞ்சாதியை அடிக்கிறதைத் தவிர வேறை என்ன தெரியும்? ஏன் அவளை அடிச்சவனாம்?" என்று கேட்டு விட்டு தம்பிப்பிள்ளையை நோக்கி, தணலான பார்வையை வெளியிட்டேன்.

"முட்டைக் கோப்பிக்குள்ள மறந்து போய் மூக்குத்தூளை போட்டுக் குடுத்தாளாம்" என்றாள் தர்மபத்தினி.

"இவனுக்கு முட்டைக் கோப்பிக்குள்ள மூட்டைப் பூச்சி மருந்தைத் தான் கலந்து குடுக்க வேணும்" என்று சிரிப்பினிடையே சொல்லிவிட்டு "இந்த சின்ன பிழை செய்ததுக்கோ அடிச்சவன்?" என்ற கேள்வியை எழுப்பினேன்.

"சின்ன ஆட்கள் சின்ன பிழையைச் செய்தால், அது பெரிய ஆட்களுக்கு பெரிய பிழை போலத்தான் தெரியும்" என்று தர்மபத்தினி சொன்னாள்.


"அத்தானுக்கு அக்கா குடுத்த முட்டைக் கோப்பியில பல்லி முட்டையும் மிதந்துதாம். அதுவும் அத்தான் அடிக்கிறதுக்கு இன்னொரு காரணமாம்" என்றாள் சங்கீதமணி.

"பல்லி முட்டை இல்லாமல் கோழி முட்டையோ மிதக்க வேணுமாம்?" என்று வாய் தடுமாறி கேட்டு விட்டு, நாக்கைக் கடித்தேன்.

தம்பிப்பிள்ளை என்னைக் கோபத்துடன் நோக்குவதை கடைக் கண்ணால் அவதானித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவன் கோபம் அடங்க சில வினாடிகள் எடுத்தன.

அதன் பின் அவனை அன்புடன் நோக்கினேன். "மருமோன், இந்த சின்னப்பிழை செய்ததுக்கு நீ உன்ர பெஞ்சாதியை அடிக்கலாமோ? நீங்கள் ரண்டு பேரும் ஒருவரை ஒருவர் விரும்பித் தானே கலியாணம் கட்டினியள்? நீ அவளுக்கு முறை மச்சான். ரண்டு பேரும் கலியாணம் கட்டி ஒரு வருசம் கூட ஆக இல்ல. அதுக்கிடையில அவளுக்கு கை நீட்டுற அளவுக்கு வந்திட்டியோ? நான் கலியாணம் முடிச்சு முதல் மூண்டு வருசம் மாமியை சினந்திருக்க மாட்டன். மூண்டு பிள்ளையள் பிறந்த பிறகு தான் ஒரு நாள் அவவை ஏசினனான்."

"நல்ல நாளில ஏசி இருக்கிறீங்க. அது தான் வருஷாதி வருஷமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கட ஏச்சு தொடருது" என நமுட்டுச் சிரிப்பொன்றை சங்கீதமணி உதிர்த்தான்.

"டேய், பொத்தடா வாயை" என்று அதட்டிய போது, பருபதபத்தினி தனது அறையில் இருந்து வீச்சுடன் வந்து என் அருகில் முற்றுப்புள்ளி போட்டாள்.

"அப்பா, என்னால இவரோட வாழ ஏலாது. நான் இவரை 'டைவோஸ்' செய்யப் போறன்" என்று அவள் உச்சஸ்தொனியில் கத்திவிட்டு, தம்பிப்பிள்ளையை முறைத்தாள்.

"விவாகரத்தோ? ஏன்ரி அம்மா விவாகரத்து?" என்று ஆச்சரியமும், அதிர்ச்சியும் குரலில் கலந்திருக்கக் கேட்டேன்.

பருபதபத்தினி முறைப்பில் இருந்து விடுபடாமல் மௌனமாக இருந்தாள்.

"அப்பா, அத்தானைப் பிரிஞ்சு வாழ்றது தான் அக்காவுக்கு நல்லது. அத்தான் அடிக்கடி அதிரடி தாக்குதல் நடாத்துறார். இடைக்கிடை குண்டு போடுற மாதிரி அக்கான்ர தலையில குட்டுறார்." இது வரை மௌனத்திற்கு அடிமையாகவிருந்த திருகோணமாமணி சொன்னான்.

"அப்பா, அத்தானை எங்கையாவது கட்டி வைச்சு அடிக்க வேணும் அப்பத்தான் அவர்ற திமிர் அடங்கும்." இது மூத்த மகன் தர்மசிகாமணியின் ஆவேசக் குரல்.

"அப்பா, அத்தானுக்கு ஒரு பாடம் படிப்பிக்காமல் நான் இனி இந்த வீட்டில சாப்பிடமாட்டன்" என்று கூப்பாடு போட்டாள் இரண்டாவது மகள் தமிழ் மொழியழகி.

"அத்தான்ர கால், கைவிரல் நகங்களை வெட்டி காகத்திற்கு இரையாகப் போடவேணும்" என்று கீச்சுக்குரலில் கத்தினான் கடைசி மகன் ஒப்பிலாமணி.

"அப்பா, நீங்க ஒரு அரசன். நாங்கள் மந்திரிமார். அப்படியெண்டால் ஒரு அரசாங்கம் தானே? இந்த அரசாங்கத்திற்கு எதிராக அத்தான் சண்டை பிடிக்கிறார்" என்றான் சங்கீதமணி.

சிலந்தி வலைக்குள் அகப்பட்ட பூச்சியின் நிலையில் தவித்தேன். தத்தளித்தேன். தடம்புரண்டேன். எனது மக்களின் ஆவேசங்களை, ஆட்சேபங்களை, ஆணித்தரமான கருத்துக்களை, ஆக்கிரோஷங்களை, ஆதங்கங்களை, ஆக்ஞைகளை எவ்வாறு அடக்குவது, தணிப்பது?

ரோஜா முட்களில் சிக்கிய பட்டுப் புடவையை கிழியாமல், குலையாமல் எடுப்பவனின் நிலைக்கு, மீசையும் வேண்டும், கூழும் வேண்டும் என்ற நிலைக்கு வீசப்பட்டேன்.

என்ன செய்வது? காமா சோமா என்று முடிவு எடுக்க இயலாது. மூளையில் ஓர் எண்ணம் சுடர் விட்டது.

"டேய் தம்பிப்பிள்ளை, இஞ்சவா" என்று அழைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அசைவில்லை.

"டேய் தம்பிப்பிள்ளை" என்று குரலை உயர்த்தி மறுபடியும் கூப்பிட்டேன்.

ஊகும்! அவன் உசும்பவில்லை.

"அடேய் தம்பிப்பிள்ளை....."

தம்பிப்பிள்ளை அருவருப்புடன் என்னை நோக்கினான். "டேய் சுப்பிரமணியம், நான் உன்ர 'சன்–இன்–லோ'. மரியாதையாகக் கதை. மரியாதை குடுத்துத் தான் மரியாதையை எடுக்க வேணும்."

முன்னூறு கிலோ குண்டு முப்பது அடிக்கு அப்பால் வெடித்திருந்தால் என்ன உணர்ச்சியை அடைந்திருப்பேனோ அந்த உணர்ச்சியை அடைந்தேன். சில வினாடிகள் என்னால் எச்சிலை விழுங்க முடியவில்லை. பேசும் சக்தி என்னிடம் இருந்து விடை பெற்று விட்டது.

என் சீவிய காலத்தில் ஒருத்தர் கூட என்னை இப்படி விளித்திருக்க மாட்டார்கள். அதட்டி இருக்க மாட்டார்கள்.

தர்மபத்தினி சக பிள்ளைகள் யாவரும் அரண்டு, மிரண்டு, அடுக்களைக்குள் பாய்வோமா என்ற நிலையில் விளங்கினர்.

"பொறுத்தது போதும், பொங்கி எழு எண்ட நிலைக்கு வந்துவிட்டன். இனியும் என்னை மரியாதை இல்லாமல் நடத்தினால் என்னற்ற இருந்து மரியாதையை எதிர்பார்க்க மாட்டீங்க. நீங்கள் எல்லாரும் ஒண்டு சேர்ந்தாலும் இந்த தம்பியை அசைக்க ஏலாது. வாலாட்டவும் ஏலாது. விவாகரத்து செய்யப் போறாளோ? நான் அதுக்கும் ' ரெடி'. அப்படி செய்தால் என்னால தனியாக, அதுவும் சுதந்திரமாக வாழ ஏலும். உங்கட தயவு எனக்கு தேவையில்ல" என்று விரிவுரை நடத்துவது போல தம்பிப்பிள்ளை பேசிய போது எனது தர்மபத்தினி, பிள்ளைகள் வாயைப் பிளந்தபடி இருந்தனர்.

ஆடுற மாட்டை ஆடிக் கறக்கத்தான் வேண்டும் என்ற உபாயம் என்னுள் உதயமாகியது. பருபதபத்தினியை நோக்கினேன். "நீ பிழை செய்திட்டு, சரி எண்டு வாதாடுறது பிழை. உன்ர பலம் கூட எண்டதற்காக மருமோன வெருட்டுறதும் பிழை. இனியும் அவரைப் பயங்காட்டி நாங்க வாழ ஏலாது. அவரோட சமாதானமாக வாழ்ந்தால் தான் எல்லாருக்கும் நன்மை" என்று நசுக்கினேன்.

"அப்படியெண்டால் நாங்க அவருக்கு 'சரண்டர்' ஆக வேணுமா?" என அழுவாரப் போல சங்கீதமணி கேட்டான்.

'சரண்டர்' இல்ல. சமாதானம். சண்டையை இனியும் தொடர்ந்தால் அக்காவும், அத்தானும் பிரிஞ்சு விடுவினம். இதால அவவுக்கு, எனக்கு, உனக்கு நஷ்டம், கஷ்டம், அவமானம், துக்கம், துயரம், துன்பம்" என்று வார்த்தைகளை அடுக்கினேன்.

"ஒரு ஆளுக்காக நாங்க பதிமூண்டு பேர் எங்கட வாயைப் பொத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ வேணுமோ?" தர்மசிகாமணி வாண வெடி போல சீறினான்.


"ஓமடா. இப்ப வாயைப் பொத்தாட்டால் பிறபாடு வயித்தைப் பொத்த வேண்டி வரும். அக்காவை வாழாவெட்டி ஆக்கிறதோ உங்கட 'ஆமிக்கார...' இல்ல, இல்ல ஆக்கிரமிக்கிற புத்தி? வாழு, வாழ விடு எண்டு சொல்ற மாதிரி வாழ்ந்தால் தான் எல்லாருக்கும் நன்மை" என்றேன்.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மையோ?" திருகோணமாமணி சிரிப்புடன் கேட்டான்.

பருபதபத்தினியை நோக்கினேன். "உன்ர முடிவு என்ன?"

"அவர் என்னை அடிச்சு உதைக்காவிட்டால் நான் அவரோட வாழத் தயார்" என்றாள் பருபதபத்தினி.

தம்பிப்பிள்ளையை நோக்கினேன். "மருமோன், நீ என்ன சொல்றாய்?"



"முட்டைக் கோப்பிக்குள்ள மூக்குத் தூளும், பல்லி முட்டையும் போடுற மாதிரி திருகுதாள வேலைகள் செய்யாட்டால் அடிக்க மாட்டன். உதைக்க மாட்டன். ஆனால்...."

"என்ன ஆனால்.......?"

"அணைப்பன்."

என் பாணியில் அவன் பேசுவதைக் கேட்டு, என்னை மீறிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

சிரித்தேன்.

எல்லோரும் அங்கிருந்து கலைந்த போது "டுவிங்கிள், டுவிங்கிள் லிட்டில் ஸ்டார்" என்று பாடியபடி, பருபதபத்தினியுடன் சென்றான் தம்பிப்பிள்ளை.

# (5)

காரியாலயத்தில் இருந்து வீடு போன போது தர்மபத்தினி வாயெல்லாம் பற்களாக என்னை வரவேற்றாள். வழமையாக 'உம்' மென்ற முகத்துடன் 'வாங்கோ' என்று கூட அழைப்பு விடுக்காதவள், இவ்வாறு வரவேற்ற போது என்னுள் ஒரு 'கிளு, கிளு'ப்பு. சில நாளங்கள் 'நொய்ங்' , 'நொய்ங்' என உணர்ச்சிகளை மீட்டின. ஏதோ புது இரத்தம் உடலினுள் புகுந்த நிலையில் வீட்டினுள் நுழைந்தேன்.

ஆனால், அங்கு அமர்ந்திருந்த ஒரு ஜோடியைக் கண்டவுடன் என்னுள் ஏற்பட்டிருந்த உற்சாகம், உணர்ச்சித் துடிப்பு, உந்துசக்தி ஆகியன எல்லாமே என்னை உதைத்து விட்டு, 'படீ'ரென உதிர்ந்தன. தர்மபத்தினியின் ஒன்றுவிட்ட அண்ணனின் மகள் மின்மினியும், அவள் கணவன் பாலசுப்பிரமணியமும் அங்கு அமர்ந்திருந்தனர்.

இருவர் முகங்களிலும் செல்வக்களை தாராளமாகப் பரவி இருந்தது. அவர்கள் அப்பியிருந்த 'ஃபெர்ஃபியூம்' என்னை வரவேற்றது.

"அங்கிள்" என்ற மின்மினி எழுந்து எனக்கு மரியாதை கொடுக்க முற்பட்டாள். பாலசுப்பிரமணியம் சிரிப்பொன்றை வெளியிட்டு, உடம்பை கோணங்கித்தனமாக வளைத்து நிமிர்த்தினான்.

"இரு .... இரு....." என்று மின்மினியிடம் கூறியபடி அமர்ந்தேன்.

"இஞ்சருங்கோ, மின்மினியும், அவளின்ர மனுசனும் இண்டைக்குத் தான் கனடாவில இருந்து வந்தவையளாம். எப்படியோ நாங்க இங்க இருக்கிறதை கண்டு பிடிச்சு இஞ்ச வந்து விட்டினம்" என்று தர்மபத்தினி குதூகலத்துடன் கூறினாள்.

"கொலம்பஸின்ர இரத்தம் ஓடுதாக்கும்" என்று முணுமுணுத்தேன்.

"அங்கிள், நாங்க இன்னும் ஒரு மாசம் வரை கொழும்பில இருக்கப் போறம்" என்ற தகவலை மின்மினி வெளியிட்டாள்.

"அப்ப ஊருக்கு போகவில்லையோ?" என ஆர்வத்துடன் கேட்டேன்.

"ஊருக்கோ? என்ன 'அங்கிள்' 'ஜோக்' அடிக்கிறியளோ? கிளாலிப் பயணத்தைப் பற்றி நினைக்கவே வயித்தைக் கலக்குது. 'பிளேனில' வந்த ஒருவர் கிளாலி பயணத்தைப் பற்றி கதை கதையாகச் சொன்னார். அப்ப பிடிச்ச நடுக்கம் இவரை இன்னும் விட்டுப் போக இல்ல." கலவரத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் அளித்தாள் மின்மினி.

"ஓம் 'அங்கிள்'. இவ்வளவு நாளும் 'சேர்க்ஸ்'காரங்கள், கார், மோட்டார் சைக்கிள் 'ரேஸ்காரங்கள்', பாம்பு விழுங்கி வித்தை காட்டுறவர்கள் தான் தங்கட உயிரை துச்சமென மதிக்கினம் எண்டு நினைச்சன். ஆனால், கிளாலி கடலைக் கடக்கிற எங்கட ஆட்களும் உயிரை ஒரு சதத்திற்கும் மதிக்கிறதில்ல எண்டதை இப்பத்தான் அறியுறன்." பாலசுப்பிரமணியம் கண்களை அகல விரித்தபடி கூறினான்.

"மச்சாள், அண்ணே" என்றபடி தமிழ்மொழியழகி வந்து அங்கு அமர்ந்தாள். "எங்கட ஊரில இப்ப உயிருக்கு அவ்வளவு மதிப்பில்ல பத்துப்பன்னிரண்டு வருஷத்திற்கு முந்தி எங்கட பனை சீவுற வீமன் பனையால விழுந்து செத்துக் கிடக்கிறதைப் பார்க்க எத்தனை சனம் வந்துது தெரியுமோ? பேந்து விதானையார், பொலிசு, நீதவான், பேப்பர்காரன் எண்டு எத்தனை பேர் வந்து, எத்தனை பேரின்ர சாட்சியத்தை எழுதிக் கொண்டு போயிச்சினம். ஆனால், இப்ப ஒரே இடத்தில பத்துப் பேர் தாறுமாறாக செத்துக் கிடந்தாலும் கொஞ்ச ஆட்கள் தான் புதினம் பார்க்க வருவினம். காலம் எப்படி மாறிப் போச்சுது எண்டு பார்த்தியளோ?"

"இதை எல்லாத்தையும் கேள்விப்பட்டாப் போலத்தான் அங்கை போறதை விட்டு விட்டம் " என்றான் பாலசுப்பிரமணியம்.

"அப்ப, உன்ர கொப்பர், கொம்மாவை பார்க்கிறது இல்லை எண்டு முடிவு செய்திட்டியோ? " பாலசுப்பிரமணியத்திடம் கேட்டேன்.

"இல்லை அங்கிள். அங்கை போய் வழியில உசிரை விடுறதை விட, அவையளுக்கு காசு அனுப்பினன் எண்டால் அவையள் சந்தோஷப் படுவினம் தானே?"

"காசை விட பாசம் பெரிசு இல்ல எண்டு நினைக்கிறாய் போல."

"அப்படி இல்ல அங்கிள்......"

"இப்ப வெளிநாட்டில இருக்கிற எங்கடை ஆட்களுக்கு இஞ்ச இருக்கிற ஆட்கள விட தங்கட உசிர் தான் பெரிசு எண்டு ஒரு எண்ணம் இருக்குது. நீயும் அதுக்கு விதிவிலக்கு இல்லப் போல."

"நாங்க அங்கை மனுசரா வாழ்றதால எங்கடை உசிர் எங்களுக்கு பெரிசு மாதிரி தெரியுது."

"அப்ப நாங்கள் எல்லாம் மிருகங்களோ?"

"அந்த மாதிரியான நிலைக்குத்தானே வந்திருக்கிறியள்? "

"பாலா சொல்லுறதில என்ன பிழை? கொழும்பில இருந்து ஊருக்கு மிருகம் மாதிரித் தானே போறம்? சேத்துக்குள்ள நடக்கிறதும், கடல் தண்ணியில குளிக்கிறதும் இதெல்லாம் மனுசர் பிரயாணத்தில செய்யுற காரியமோ ?" என பாலசுப்பிரமணியத்துக்கு வக்காலத்து வாங்கினாள் தர்மபத்தினி.

"மிருகத்திற்கும் பாசம் இருக்குது தானே? அது மாதிரி பாலாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் பாசம் இருக்கக்கூடாது ?" என தர்மபத்தினியிடம் கேட்டு விட்டு, பாலசுப்பிரமணியத்தை நோக்கினேன். " உன்ர கொப்பரும், கொம்மாவும் 'வீடு போ, காடு வா' எண்ட நிலையில இருக்கினம். நீ ஒருக்கால் அவையளைப் பார்த்து விட்டு வந்தால் அவையள் நிம்மதியாக கண்ணை மூடுவினம். உன்ர கொப்பர் என்னை பருத்தித்துறை சந்தைக்கில காணக்கில, உன்னைப் பற்றித்தான் கதைக்கிறவர். நீ தானே அவருக்கு கொள்ளி வைக்க வேணும் ? இக்கனம் நீ ஊருக்கு போயிருக்கக்கில அவருக்கு ஒண்டு நடந்தால், அவருக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யலாம் தானே ?"

"ஆனால், அதுக்குள்ள கொள்ளி வைக்காமலே என்ர உடம்பு சாம்பலாகி விடுமே! " எனச் சிரித்தான் பாலசுப்பிரமணியம்.

"உன்ர கொப்பரையும், கொம்மாவையும் பார்க்க ஊருக்கு போக ஏலாது எண்டு தெரிஞ்சும் நீங்க ரண்டு பேரும் ஏன் சிலோனுக்கு வந்தியள்?" பொதுப்படையாக இருவரையும் பார்த்துக் கேட்டேன்.

"ஊரில இருக்கிற சீதன வீட்டை விக்கத்தான்" என்றான் பாலசுப்பிரமணியம்.

"இஞ்ச இருந்து விற்கப் போறியளோ ? ஆர் இந்தக் காலத்தில ஊர் வீட்டை வாங்கப் போயினமாம்?" மின்மினியிடம் கேட்டாள் தர்மபத்தினி,

"இப்ப இருக்கிற நிலைமையில காணியும், வீடும் பத்து லட்சமாவது பெறும். ஆனால், ஒரு ஆள் ஐஞ்சு லட்சத்துக்கு வாங்க இருக்கிறான்."

"ஆர் ஆள்? "

"அவன் எங்கட ஊர் இல்ல. பிறத்தியான்."

"பிறத்தியானோ? இக்கனம் நாங்க ஊருக்கு போகக்கில எங்கட ஊரில இருக்கிற பிறத்தி ஆட்கள் எல்லாம் எங்கள பார்த்து நீங்க எந்த ஊர் எண்டு கேட்கப் போகினம்."

அதைக் கேட்டு பாலசுப்பிரமணியம் சிரித்தவாறே, "அங்கிள், இன்னும் கொஞ்சக் காலத்தில கனடாவிலையும் உப்பிடித்தான் நடக்கப் போகுது. நாங்களும் கனடாகாரங்களிற்ற 'நீங்க எந்த ஊர்' எண்டு கேட்கத் தான் போறம்" என்றான்.

"மெய்யே பாலா, நீ கனடாவில என்ன வேலை செய்யுறாய்?" தர்மபத்தினி வினாவினாள்.

"சோத்துக்கடை நடத்துறன். "

"அட ! அது நல்ல பிஸினஸ் ஆகாரம் குடுத்து காசு உழைக்கிறது புண்ணியம் தானே?"

"சோத்துக்குள்ள பாக்குச் சீவல் போடாத வரைக்கும் புண்ணியம் தான்" என்று சிரித்தேன்.

பாலசுப்பிரமணியம் சிரித்தானே ஒழிய பதில் கூறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்மினியை நோக்கினேன். " நீயும் வேலை செய்யுறியோ?"

"வேலை செய்யாமலே காசு உழைக்கிறன்."

"'பிக்பொக்கட்' அடிக்கிறியோ?"

"இல்ல இவரைப் பிரிந்து இருக்கிறன் எண்டு பொய் சொல்லி அரசாங்கம் தாற காசை சம்பளம் மாதிரி எடுக்கிறன். அவங்கள் 'செக்' பண்ணுற நாட்களாகப் பார்த்து வேற ஒரு வீட்டில தங்கி இருப்பன்."

"புருஷனை பிரிஞ்சு வாழ்ந்தால் படிக்காசை அரசாங்கமோ குடுக்கிறது?"

"ஓம் 'அங்கிள்'. இஞ்ச எண்டால் புருஷன் தான் படிக்காசு குடுக்கிறது. அங்க அரசாங்கம் தான் குடுக்குது. அதால இஞ்ச இருந்து போன சில பொம்பளையள் புருஷனைப் பிரிஞ்சு வாழ்றன் எண்டு சொல்லி அரசாங்கத்திற்ற இருந்து படிக்காசு எடுக்கினம். நானும் அந்த மாதிரித்தான் படிக்காசு எடுக்கிறன்" என்று மின்மினி விளக்கம் அளித்தாள்.

'உனக்கு வெட்கம், ரோசம், மானம் இல்லையோ? எங்கட இனத்தின்ர கலை, கலாச்சாரம், பழக்க வழக்கங்களை கொஞ்ச காசுக்காக விற்கிறியோ' எனக் கேட்க நினைத்தும், கேட்காமல் விட்டேன். அப்படி கேட்டால் அவர்கள் வருவாயைப் பெருக்குவதையிட்டு எனக்கு எரிச்சல், பொறாமை என நினைப்பார்கள் என்பதே எனது நினைப்புக்கு காரணம்.

தர்மபத்தினி என்னை ஏளனமாக நோக்கினாள். "ஷா! உண்மையில கனடா ஒரு நல்ல நாடு தான். அங்கை அரசாங்கம் படிக்காசு குடுக்கிற முறை இஞ்சயும் இருந்தால், நானும் என்ர மனுசனைப் பிரிஞ்சு இருக்கிறன் எண்டு சொல்லி காசு உழைப்பன். மாசா மாசம் ஆரையும் நம்பி இருக்கவும் தேவையில்ல" என்றாள்.

"ஏன் இப்பவே நீ என்னைப் பிரிஞ்சு இரு. நான் மாசா மாசம் காசு தாறன்" என்று குரலை உயர்த்திச் சொன்னேன்.

"உங்கட பிச்சைக்காசு எனக்குத் தேவையில்லை. எனக்கு அரசாங்கத்திற்ற இருந்து தான் காசு வேணும்."

"பிச்சைக் காசோ? ஏன் நான் பிச்சை எடுத்தோ உனக்கு இப்ப மாசா மாசம் காசு தாறனான்? எல்லாம் என்ர உழைப்பு."

"கண்டறியாத உழைப்பு. கூலிக்காரன் கூட ஒரு நாளைக்கு உங்களை விட காசு உழைப்பான். ஒஸ்திரேலியாவில இருக்கிற என்ர மாமாவும், சவூதியில இருக்கிற என்ர அண்ணணும் காசு அனுப்புறதால தான் நாங்க ஒரு அளவில சீவியத்தை நடத்திறம் எண்டதை மறந்திடாதேங்கோ" என தர்மபத்தினி கத்தினாள்.

"அப்பாவும், அம்மாவும் சண்டை பிடிக்கத் தொடங்கி விட்டினம். இனி 'கன்பயர்', 'ஷெல்', 'ரொக்கட்' தாக்குதலுக்கு குறை இருக்காது" என்று அங்கு வந்த சங்கீதமணி கத்திச் சிரிக்க, "ஷெல்லா? அப்ப நாங்க போயிற்று வாறம்" என்றபடி பாலசுப்பிரமணியம் மனைவியை இழுக்காத குறையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து அழைத்துச் சென்றான்.

இரு கோப்பை தேநீர் மிச்சம் என அகமகிழ்ந்தேன்.

## (6)

எமது ஊரில் நடைபெறும் அம்மன் கோவில் திருவிழாவின் போது, அம்மன் எவ்வாறு ஆடை அலங்காரத்துடன் 'ஜொலி ஜொலிக்குமோ', அவ்வாறான ஒரு 'ஜொலி ஜொலிப்பில்' காணப்பட்டாள் தர்மபத்தினி. எங்காவது ஒரு 'ஜொலி ரவுண்ட்' அடித்து விட்டு வருவோம் என்று நினைத்தவனாக அறையில் இருந்து வெளிப்பட்டவன், தர்மபத்தினியின் 'ஜொலி ஜொலிப்பில்' என் மனதை அளவுக்கு மீறி பறி கொடுத்து நின்றேன்.

எல்லாம் சொற்ப வினாடிகள் தான். என்னைச் சுதாகரித்தேன்.

"இடியே, எங்கடி அன்னக்காவடி எடுக்கப் போறாய்?" என்று நக்கலாகக் கேட்டேன்.

என்னை சில வினாடிகள் முறைத்தவள், "கொழும்பில் இருக்கிற நாங்கள் ஒரு சங்கம் அமைக்கப் போறம். அதுக்காகப் போறன்" என்று செருக்குடன் சொன்னாள் தர்மபத்தினி.

"புருஷன்மாருக்கு அடங்கி வாழும் சங்கம் எண்ட பெயரில கொழும்பு ஏழில இருக்கிற பொம்பளையள் ஒரு சங்கம் அமைக்கப் போறதாகக் கேள்விப்பட்டன். அதுக்கோ போறாய்?"

அவள் என்னைக் கோபத்துடன் நோக்கினாள். "மழைக்கு நனைஞ்ச எங்கட ஊர் குருநாதி கதைக்கிறது போலத்தான் நீங்களும் கதைக்கிறியள்."

"யாரடி குருநாதி? உன்ர சொந்தக்காரனோ?"

"இல்ல, எங்கட ஊரில இருந்த ஒரே ஒரு விசரன்."

இதைக் கேட்டவுடன் என் இரத்தம் கொதித்தது. "இடியே, என்னை குருநாதிக்கு ஒப்பிடுறியோ? உன்னை என்ன செய்யுறன் பார்" என்றபடி அவளை நையப்புடைக்கச் சென்றேன்.

உடனே காளான் போல பருபதபத்தினி எம்மிடையே முளைத்தாள். "உங்கள் ரண்டு பேருக்கும் ஒரு நாளைக்கு ஒருக்காலாவது சண்டை பிடிக்காவிட்டால் பத்தியப்படாது போல. சண்டையை நிற்பாட்டுங்கோ. அவனவன் சண்டையை எப்படி நிற்பாட்டுறது எண்டு தலைமயிரைப் போட்டு பிய்க்கிறான். நீங்கள் என்னடா வெண்டால் ஒவ்வொரு நாளும் சண்டையில உங்கட வாழ்க்கையை துடங்குறீங்க."

"நல்ல வேளை நீ வந்தாய். நான் தப்பினன். உன்ர கொப்பருக்கு இப்ப கொஞ்ச நாளா மூளைக்கொதி. தேவை இல்லாமல் என்னை சொறியுறதும், வம்புக்கு இழுக்கிறதும், பேந்து அடிக்கிறதும்......." என தர்மபத்தினி மூக்கை உறிஞ்சினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் அப்பா இப்படி நடக்கிறியள்? நீங்கள் அம்மாவை ஆசைப்பட்டுத்தானே கலியாணம் முடிச்சனீங்க? அம்மாவைக் கட்டித் தராவிட்டால் தண்டவாளத்தில தலை வைப்பன் எண்டு எத்தனை தரம் சொல்லி பாட்டாவை வெருட்டியிருப்பியள்."

"அது பழைய கதை. ஆசைப்பட்டுத் தான் வந்தனான். ஆனால், இப்ப உன்ர அம்மான்ர நடத்தையைப் பார்க்கக்கில அருவருப்பாக, அரியண்டமா அவமானமாக இருக்குது. உன்ர கொம்மா ஏதோ பொம்பளைச் சங்கம் அமைக்கப் போறதாக சொன்னவுடன எனக்கு கொதி வந்திட்டுது."

"சங்கம் அமைக்கப் போற கூட்டத்துக்குத் தானே அம்மா போகப் போறா? கட்சி அமைக்கிற கூட்டம் இல்லத்தானே?"

"இந்தக் காலத்தில கட்சி அமைக்கிற கூட்டத்திற்குத் தான் போக வேணும். கட்சி அமைச்சு 'எலெக்‌ஷனில' போட்டி போட்டால் எவ்வளவு நல்லது? வெண்டால் 'பஜரோ' ஜீப்பில போகலாம். நானே அம்மாவுக்கு 'ஜயவேவா' எண்டு கோஷம் எழுப்புவன்."

"அடுத்த வருசம் நாங்க ஒரு கட்சி துடங்கத் தான் போறம்."

"'வெரி குட்'. அப்படி உருப்படியான வேலை செய். சும்மா பொம்பளைச் சங்கம் துடங்கி நேரத்தை வீணாக்காதீங்கோ. பொம்பளையள் அமைக்கிற சங்கத்தை பற்றி எனக்கு நிறையைத் தெரியும். உருப்படியாக எதையும்செய்யுறவேலோ? சும்மா விளம்பரத்தில பொம்பளையளை போடுறதுக்கு எதிர்ப்பு தெரிவிப்பினம். அவ்வளவு தான்."

"எங்கட சங்கம் வெறும் கண் துடைப்புச் சங்கம் இல்ல. நாங்க எங்கட சங்கத்திற்கு எவ்வளவோ செய்ய இருக்கிறம்."

"கண்ணீர் வராமல் எப்படி வெங்காயம் உரிக்கிறது எண்டு பொம்பளையளுக்கு சொல்லிக் குடுக்கப் போறியளோ?"

"இல்ல."

அப்போது 'குபீர்' என்ற சிரிப்புடன் சங்கீதமணி வந்து, பற்களைக் காட்டியபடி நின்றான்.

"டேய் பல்லைக் காட்டாதை" என்று தர்மபத்தினி வெருட்டினாள். சங்கீதமணி மிரளவில்லை.

"இடியே, கொழும்பில இருக்கிற பொம்பளையள அவையின்ர பாட்டில இருக்க விடுங்கடி. சங்கம், முன்னணி, கூட்டணி எண்டு சொல்லி அவையின்ர நேரத்தை வீணாக்காதீங்கடி."

"இதை நீங்க என்னற்ற சொல்லாதீங்க. எங்கட சங்கத் தலைவியாகப் போறவற்ற சொல்லுங்க."

"ஆரடி உங்கட தலைவி?"

"மிஸிஸ் தாமோதரம்."

"ஆர் எங்கட தாமுன்ர மனுசிக்காரியோ? தாமு பாவம். அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயித்தங்காய் மாதிரி. அவள் பூசணிக்காய் மாதிரி உருண்டு, திரண்டு வெடிக்கிற நிலையில இருக்கிறாள். அவள் வெருட்டி, வெருட்டியே அவன் மெலிந்து விட்டான். அவன் எத்தனை தரம் தற்கொலை செய்ய முயற்சித்திருப்பான். ஆனால், ஒண்டும் கைகூட இல்ல. நல்ல வேளை விசர் நாய் கடிச்சு செத்து விட்டான். அந்த அளவில அவன் அதிஷ்டக்காரன் தான். இப்ப என்னத்துக்கு மிஸிஸ் தாமோதரம் சங்கம் அமைக்கப் போறாவாம்? புருஷன்ர அந்தியேட்டிக்கு அழ ஆட்களை சேர்க்கிறதுக்கோ?"

"பொம்பளையளுக்கு சம உரிமை கேட்கிறதுக்குத் தான் மிஸிஸ் தாமோதரம் சங்கம் அமைக்கப் போறா."

"சம உரிமை எண்டால் என்னடி? என்னை ஒரு விசர் நாய் கடிச்சால் அந்த நாய் உன்னையும் கடிக்கிற மாதிரி நீ நடப்பதோ அந்த உரிமை?"

"இல்ல, எல்லா விசயத்திலையும் நீங்கள் அனுபவிக்கிற உரிமையை நாங்களும் அனுபவிக்க வேணும்."

"நான் வீட்டில வெறும் மேலோட இருக்கிற மாதிரி, நீயும் இருக்க வேணுமோ?"

இதைக் கேட்டு சங்கீதமணி அகநகை புரிந்தான்.

தர்மபத்தினி என்னை ஆவேசத்துடன் நோக்கி, "பேய்க்கதை கதையாதீங்கோ" எனக் கத்தினாள்.

"சொல்லடி....."

"இல்ல. அந்த மாதிரி உரிமை இல்ல. 'எஸ்டேட்டில' ஆம்பிளையளுக்கு பொம்பளையள விட சம்பளம் கூட. எங்களைப் பொறுத்தளவில ஆம்பளையளுக்கும், பொம்பளையளுக்கும் சமசம்பளம் குடுக்க வேணும். இந்த மாதிரி விசயங்களில தான் நாங்க அக்கறை காட்டப் போறம்."

"உங்களுக்கு எல்லா உரிமையளையும் தந்தால் நீங்கள் எங்களை மதிக்க மாட்டியள். ஏறி மிதிப்பியள். மொட்டை தட்டுவியள்."

"உங்களை மொட்டை தட்டத் தேவையில்லை. நாற்பது வயசிலையே அரை மொட்டையாகி விட்டியள்."

"எல்லாம் உன்னைக்கட்டி, இந்த தறுதலையளுக்கு தேப்பனான பிறகு இருந்த மயிரெல்லாம் கொட்டி விட்டுது. அண்டைக்கு உன்னைக் கலியாணம் கட்டாமல் அன்னபாக்கியத்தை கட்டி இருந்தால், நான் இப்ப செல்வச்செழிப்பில மிதந்து இருப்பன். மாலைதீவில ஒரு தீவை வாங்கி இருப்பன். இப்படி மொட்டை தலையனாகவும் இருக்க மாட்டன்."

"அப்பா, அன்னபாக்கியம் எண்டது ஆர்?" சங்கீதமணி ஆர்வத்துடன் கேட்டான்.

"உனக்கு அன்னபாக்கியத்தை தெரியாது. குஷ்புவும், கஸ்தூரியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாவும், ரோஜாவும் கலந்த கலப்பு. அவளைத் தான் நான் கட்டுறதாக இருந்தனான். ஆனால், எங்கட ஊர் விதானையாரின்ர மேன் அவளைக் கடத்திக் கொண்டு போய் தாலி கட்டி விட்டான். இப்ப ரண்டு பேரும் மாலைதீவில குபேர வாழ்வு வாழுகினம்."

"அவ உங்களைக் கட்டி இருந்தால் அம்மா மாதிரி உங்கடை களுசான்ர பீத்தலை தைக்கிற நிலையில அவதிப்பட்டிருப்பா" என்றான் சங்கீதமணி.

"அப்பா, உங்கட தலை எழுத்து அம்மாவைக் கட்ட வேணும் எண்டு இருந்தால் அதை ஒண்டும் செய்ய ஏலாது. அது தான் விதி " என்றாள் பருபதபத்தினி.

"அப்ப நான் போயிட்டு வரட்டோ? " தர்மபத்தினி வினாவினாள்.

"எங்கடி?"

"சங்க கூட்டத்திற்கு. அடிச்ச 'செண்ட்' மணம் மாற முந்தி கூட்டம் நடக்கிற இடத்திற்கு போயிடணும். "

"நீ அங்கை போய் என்னடி செய்யப் போறாய்?"

"இஞ்சருங்கோ, சில வேளையில என்னை 'செக்கரட்டரியாக' போட்டாலும் போடுவினம்."

"அதுக்கு என்னடி யோக்கியதை உன்னற்ற இருக்குது? "

"உங்களின்ர பெஞ்சாதியாக இருக்கிறதே ஒரு யோக்கியம் தானே?"

அக்கணமே என் உச்சி குளிர்ந்தது. "அப்படியெண்டால் ஒரு கேள்வி கேட்கிறன். மறுமொழி சொல்லு பார்ப்பம். சரியாக சொன்னால் உனக்கு 'செக்கரட்டரி' பதவி கிடைக்கும்."

"கேளுங்கோ...."

"நான் என்ர ஆள்காட்டி விரல் ரண்டையும் நிமிர்த்திய நிலையில காட்டி இது எவ்வளவு எண்டு கேட்டால் பதினொண்டு எண்டா, ரண்டு எண்டா சொல்லுவாய்?"

"ஒண்டுமே சொல்லமாட்டன்."

"அப்படியெண்டால்....? "

"நீங்க ரண்டு எண்டால் அது தான் சரி எண்டு சொல்லுவன். பதினொண்டு எண்டு சொன்னால் அது தான் சரி எண்டு சொல்லுவன்."

உடனே கைதட்டி ஆரவாரம் செய்து, "உனக்கு தலைவி, 'செக்கரட்டரி' எண்டு ரண்டு பதவியை அவையள் தர வேணும் " என்று சொல்லி, அவளை வாழ்த்தி அனுப்பினேன்.

## (7)

முகிலுக்குள் சந்திரன்.

என் நெஞ்சில் கொடியென படர்ந்திருந்தாள் தர்மபத்தினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்சருங்ககோ.......!"

."ஊம்..... "

"நித்திரையோ?"

"ஊம். "

"வாயைத் திறந்து ஏதாவது கதையுங்களேன்."

"சாப்பிடுறதுக்காகவும், கொட்டாவி விடுறதுக்காகவும் தான் வாயைத் திறப்பன்."

'க்ளிங்', ' க்ளிங்' என்ற சிரிப்பு தர்மபத்தினியிடம் இருந்து புறப்பட்டு, என் மனதை உதைத்தது.

"இடியே, ஏன்ரி சிரிக்கிறாய்?"

"நீங்க வாயை மூடிக் கொண்டிருந்தால் சூரியன் மேற்கில தான் உதிக்கும்" என்றவள் 'ப்ளுக்', 'ப்ளுக்' என்று நகைத்தாள்.

"சிரி, சிரி, நல்லா சிரி. இப்ப ஏன்ரி என்ர நித்திரையைக் குழப்பினனி?"

"இஞ்சருங்கோ...."

"ஊம்...."

"எனக்கு ஒரு ஆசை வந்திருக்குது. அதை பூர்த்தி செய்வீங்களோ?"

இருட்டில் என் கை விரல்களுக்கு கால் முளைத்து, அவை தர்மபத்தினியின் கன்னத்தில் ஊர்ந்தது.

"என்னடி ஆசை? எங்கட குடும்பத்தின்ர சனத் தொகையை கூட்டுற ஆசையோ? நீ 'ரெடி' எண்டால் நான்'ரெடி'." என்னிடமிருந்து மிருதுவான 'கெக்கே', 'பிக்கே' சிரிப்பு முகிழ்ந்தது.

"இன்னொரு பிள்ளையோ? இன்னொண்டை இந்த வயசில பெத்தால் எங்கட மானம், மரியாதை எல்லாம் பறந்து விடும். "

"இடியே, எங்கட மானம், மரியாதை எல்லாம் எப்பவோ பறந்து விட்டுது. உன்ர கொப்பர் கட்டி, உனக்கு சீதனமாக குடுத்த நாற்சார வீடு இருக்கத்தக்கதாக 'பொம்மர்' சத்தம் கேட்டு, மண்புழுவான நிலையில நானும், நீயும், பிள்ளையளும் 'பங்கருக்குள்ள' மண்ணோட மண்ணாக கிடக்கக்கில , மூத்த மேள் கலியாணம் முடிச்ச அண்டு 'சன்–இன்–லோ'வோட முதலிரவை'பங்கருக்குள்ள' கழிக்கக்கில எங்கட மானம், மரியாதை எல்லாம் பறந்து விட்டுது. இது மட்டுமோ? ஒருக்கால் 'பொம்மரின்ர' தொல்லை பொறுக்க முடியாமல் நாங்கள் எல்லாரும் கோயில்ல தஞ்சம் புகுந்த போது உன்ர ரண்டு மேள்மார் வீட்டுக்கு தூரமான நிலையில இருந்ததை அறிஞ்ச போது எங்களுக்கு மானம், மரியாதை இல்ல எண்ட முடிவுக்கு வந்துவிட்டன்" என்று ஈரமான குரலில் சொன்னேன்.

"மானம், மரியாதை இல்ல எண்டதுக்காக நீங்கள் 'சேர்ட்' இல்லாமல் 'ஒஃபிஸுக்கு' போவியளோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மபத்தினியின் கேள்வி என் மனதை ஊமையாக்கியது. சிறிது நேரம் மௌனம் விழுந்தது. எனக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

"இஞ்சருங்கோ, என்ர ஆசையை சொல்லட்டோ?"

"கனடாவுக்கு போற ஆசை வந்து விட்டுதோ?" நக்கல் பாதி, நகைச்சுவை பாதியாகக் கேட்டேன்.

"கனடா ஆசையோ? எனக்கோ? அந்த ஆசை இருந்திருந்தால் நான் இப்ப அங்க இருந்திருப்பன்."

"நல்ல வேளை நீ அங்க போக இல்ல. அப்படிப் போய் இருந்தால் அங்க இருக்கிற எங்கட சாதியளை துரத்திறதுக்கெண்டு ஒரு இயக்கமே தோன்றி, அதுகளுன்ர வாழ்க்கைக்கு குழி தோண்டியிருக்கும். "

'உக்கும்' என்று சூள் கொட்டியவள், சில வினாடி மௌனத்தின் பின், "இஞ்சருங்கோ. நான் என்ர ஆசையை சொல்லத் துடிக்கிறன். நீங்கள் அதைக் குழப்புறீங்களே" என சிணுங்கினாள்.

"நீ 'சீரியஸாக' கதைக்கக்கில குழப்புறதில ஒரு 'த்ரில்' இருக்குது.... இடியே, சரி காதை கூர்மையாக்கிறன். உன்ர ஆசையை சொல்லித் தொலை" என்றபடி பலத்த கொட்டாவி ஒன்றை விட்டேன்.

"மெல்ல கொட்டாவி விடுங்கோ. பிள்ளையள் பயப்படப் போகுதுகள்."

"என்ர பிள்ளையள் பயப்படாதுகள். அதுகள் எத்தனையோ குண்டுச் சத்தங்களைக் கேட்டு பழகினதுகள். உன்ர கடைசி தறுதலை கொழும்புக்கு வந்த புதிசில குண்டுச் சத்தம் கேட்டால் தான் தனக்கு நித்திரை வரும் எண்டு சொன்னதை மறந்து விட்டியோ? "

"மறக்க இல்ல. என்ர ஞாபக சக்திக்கு ஒரு குறையும் இல்ல. எனக்கு நீங்க தாலி கட்டின பிறகு, சப்பரத்துக்கு கீழ வைச்சு என்ன கேட்டனீங்கள் என்டதை இண்டைக்கும் என்ர ஞாபகத்தில வைச்சிருக்கிறன்."

"இடியே, என்னடி கேட்டனான்? எனக்கே மறந்து போச்சுது."

"கருவாட்டுக் குழம்புக்குள்ள உள்ளி போட வேணுமோ, இல்லையோ எண்டு கேட்டனீங்கள்."

"ஓ! ஓ!! இப்பத்தான் ஞாபகம் வருது. இப்படி ஏன் உன்னற்ற கேட்டனான் எண்டு மறந்து போச்சுது."

"சரி, என்ர ஆசையை சொல்லட்டோ?"

"சொல்லித் தொலையண்டி. பிரச்சனையை தீர்க்கிறன் எண்டு சொல்லி பராக்கு காட்டுற மாதிரித்தான் நீ என்னை பராக்கு காட்டுறாய். சொல்லுறதை 'டக்' கெண்டு சொல்லு. எனக்கு நித்திரை வருது. நேத்தைக்கு கண்ட கனவின்ர மிச்சத்தை இண்டைக்கு காண வேணும்."

"என்ர ஆசை சின்னச்சின்ன ஆசைதான்... "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இடியே, 'சின்னச் சின்ன ஆசை' பாட்டு கேட்கிறதோ உன்ர ஆசை?."

"சீ! உங்களுக்கு விசர், என்ர ஆசை சின்னச்சின்ன ஆசை எண்டு தான் சொல்ல வந்தன்."

"என்னடி சின்ன ஆசை? நான் மல்காந்திக்கு ஒரு முத்தம் குடுக்கிறதை நீ ஒளிஞ்சு இருந்து பார்க்க வேணும் எண்ட ஆசையோ?"

என் பின்புறத்தில் ஒரு கிள்ளு. முதுகில் ஒரு மெல்லிய குத்து.

"உங்களுக்கு மல்காந்தியின்ர பெயரை ஒருக்காலாவது உச்சரிக்காட்டால் தின்ற சாப்பாடு செமிக்காது போல."

"ஓமடி. அவளை என்னெண்டு மறக்கிறது? எண்பத்தி மூண்டாம் ஆண்டு கலவரத்தில காடையங்கள் என்னை துரத்திக் கொண்டு வரக்கில என்னால ஓட முடியாத போது, அவள் தானே என்னை தூக்கிக் கொண்டு ஓடினவள்? அப்படி தூக்கிக் கொண்டு ஓடி இருக்காவிட்டால் நான் 'குளோஸாகி' இருப்பன். கிளாலி பயணம் எண்டால் என்ன, அமைதிப் படை எண்டால் என்ன, பேச்சுவார்த்தை எண்டால் என்ன எண்ட விபரம் எல்லாம் தெரியாமல் 'மேல' போயிருப்பன். இப்படி என்ர உயிரைக் காப்பாத்தி, இந்த 'உன்மத்தங்களை' கண்டு களிக்க சந்தர்ப்பம் தந்த மல்காந்தியின்ர பெயரை ஒருக்கால் உச்சரித்தால் என்னடி பிழை?"

நான் சொன்னதைக் கேட்டு தர்மபத்தினி மௌனத்திற்கு ஆளானாள்.

"இடியே, உன்ர ஆசையை சொல்லித் தொலையன். நான் படுக்க வேணும்."

"சொன்னால் சிரிக்க மாட்டியளோ?"

"இல்ல."

"நானும், நீங்களும், பிள்ளையளும் சேர்ந்து ஒரு 'குரூப்' படம் எடுக்க வேணும்."

"ஏன் ஐ.நா.மகாநாட்டுக்கு அனுப்பி நிதி உதவி கேட்கப் போறியோ?"

"இல்ல."

"கின்னஸ் சாதனை புத்தகக்காரங்களுக்கு அனுப்பப் போறியோ?"

"இல்ல."

"குடும்பக் கட்டுப்பாட்டுக்கு எதிராக நடக்க இருக்கிற இயக்கத்துக்கு அனுப்பப் போறியோ?"

"இல்ல. ஊரில இருக்கிற தங்கம்மா அக்காவுக்கு அனுப்புறதுக்கு."

"தங்கம்மா அக்காவுக்கோ? ஏன் எங்கட படத்தைப் பார்த்தால் அவவின்ர மலட்டு மேள் பிள்ளை பெத்து விடுவாள் எண்டு தங்கம்மா அக்கா நினைக்கிறாவோ?"

"இல்ல, எங்களை எல்லாம் பார்க்கிறதுக்கு ஆசையாக இருக்குதாம்."

"அடிக்கடி கனவு காணச் சொல்லு. அப்படி கனவு காணக்கில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களையும் காணலாம்."

"உங்களுக்கு எந்த நேரமும் உந்த புளிச்சல் பகிடி தான். அந்த மனுசி ஏதோ ஆசைப்படுது. எனக்கும் அந்த ஆசை வந்திட்டுது. நாங்கள் ஒருக்காலும் எல்லாரும் சேர்ந்து படம் எடுக்க இல்ல. இதை ஒரு சந்தர்ப்பமாக வைச்சு எடுப்பம்."

"நாங்கள் எல்லாரும் ஒண்டாக சேர்ந்து படம் எடுத்து, அந்த படத்தைப் பார்க்கிறவையள் நாங்கள் எல்லாரும் ஒற்றுமையாக வாழ்றம் எண்டு நினைச்சு எரிச்சல்படுவினம். பேந்து எங்கட ஒற்றுமையை குலைக்கிறதுக்காக சதி செய்வினம். அந்த சதியில மாட்டி நாங்க பிரிஞ்சு விடுவம். எண்டபடியால உன்ர சின்னச் சின்ன ஆசையை மறந்து விடு. தங்கம்மா அக்காவுக்கு எங்களை பார்க்க ஆசை எண்டால் ஊரில இருந்து இஞ்ச வந்து பார்க்கச் சொல்லு. "

ஒரு சிணுங்கல் கேட்டது. ஒரு முனகலும் கேட்டது. ஒரு முணுமுணுப்பும் கேட்டது.

"உங்களை கலியாணம் கட்டின நேரம்...."

தர்மபத்தினியின் ஆசையை நிராசையாக்கியதனால் எனக்குள் வெற்றிக்களிப்பு. மாமன்னனான நிலையில் உறக்கத்தைத் தொடர்ந்தேன்.

# (8)

மாலை மங்கும் வேளை

எனது மகன்மாரைக் காணவில்லை. மதியத்தின் பின் ஒருவரின் சத்தமும் இல்லாமல் வீடு மயான அமைதியில் மூழ்கி இருந்தது. அவர்கள் எங்கே? ஊர் என்றால் ஊகித்து இருப்பேன். கொழும்பு என்றபடியால் ஊகிக்க முடியவில்லை.

அந்தப் பக்கம் தர்மபத்தினி வந்தாள். அழைத்தேன். அருகில் வந்து நின்றாள்.

"இடியே, சங்கீதமணி, தர்மசிகாமணி, திருகோணமாமணி எண்டு எங்கடி உன்ர தறுதலை மணிகள்?" என்று வினாவினேன்.

"தறுதலைமணிகளோ? அதுகள் என்ர கண்மணிகள், செல்லமணிகள், குஞ்சு மணிகள். 'கொண்டு வந்தால் தந்தை' எண்ட நிலையில தான் நீங்க இப்பவும் இருக்கிறீங்க" என்று தர்மபத்தினி சற்று ஆக்ரோஷத்துடன் சொன்னாள்.


"கொலையும் செய்வாள் பத்தினிப் பெண் எண்ட நிலையிலோ நீ இருக்கிறாய்? " என 'வெடுக்' கென்று கேட்டேன்.

"இல்ல, கொண்டு வந்தாலும், வராவிட்டாலும் தாய் எண்ட நிலையில இருக்கிறன்" என்று தர்மபத்தினி மார் தட்டினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடியோசை நிலையில் சிரிப்பை வெளிவிட்டேன். "ஆனால், என்னை நீ 'கணவனே கண்கண்ட தெய்வம்' எண்டோ, 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' எண்டோ நினைக்கிறதில்ல."



"பிள்ளையள் நான் பெத்தது. உங்களை ஆரோ தானே பெத்து இருக்கினம்? என்ர பிள்ளையளுக்கு நான் தானே பால் குடுத்தனான்? உங்களுக்கு உங்கட கொம்மா தானே? அப்ப வித்தியாசம் இருக்கும் தானே?"

"இடியே, நான் இல்லை எண்டால் இந்த தறுதலைகள் பிறந்திருக்குமோ? உன்னை ஒரு தாயாக பெருமைப்படுத்தியது அடியேன் தானே?"

"உங்களை அப்பாவாக்கிய பெருமை எனக்குத் தானே?"

இப்படி இருவரும் வாக்குவாதப்பட்டு ஐந்து நிமிடங்கள் கழிந்த போதும், உருப்படியான விடயங்கள் எதுவுமே வெளிப்படவில்லை.

"உன்னோட கதைக்கிறதும், வட்ட மேசை மகாநாட்டில எங்கட தலைவர்மார் பேசுறதும் ஒண்டுதான் " என்று இறுதியாகக் கூறினேன்.

"சரி, சரி.... இப்ப என்னை கூப்பிட்ட விசயத்தை 'டக்' கெண்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுங்கோ பார்ப்பம். எனக்கு நிறைய சமையல் வேலை இருக்குது."

"என்னடி நிறைய வேலை? 'சிக்கன்', 'மட்டன்' கறியோ வைக்கப் போறாய்? கத்தரிக்காயில தானே கறி வைக்கப் போறாய்?"

"ஓமோம். எண்டாலும் பதினாலு உருப்படியளுக்கு நான் தனியனாக சமைக்க எவ்வளவு நேரம் எடுக்கும்?"

"ஏன் உன்ர கண்ணின்மணிகள், வாத்துக் குஞ்சுகள் உனக்கு



சமையலில உதவி செய்யறதில்லையோ?"

"'சிக்கன்', 'மட்டன்' கறி எண்டால் உதவி செய்வோம் எண்டு சொல்லுதுகள்."

"அப்ப என்ர எட்டுச் செலவு வைக்கக்கில தான் அதுகள் உனக்கு உதவுங்கள்."

"ஊம்...... இப்ப என்னத்துக்கு என்னை கூப்பிட்டனீங்க?"

"எங்கடி உன்ர தறுதலை மணிகள்? ஒருத்தரின்ர சிலமனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண இல்ல."

"எங்கேயோ போயிட்டுதுகள் மூண்டு பேரும் தொப்பி போட்டுக் கொண்டு போனவங்கள். அதை மட்டும் தான் நான் பார்த்தனான்."

"தொப்பியோடையோ? முதுகில பள்ளிக்கூட 'பாக்'கை தொங்க வைச்சிருந்தவங்களோ?"

"ஓமோம்."

"அப்ப சண்டைக்குத் தான் போயிருப்பாங்க."

"சண்டைக்கோ?" தர்மபத்தினி துள்ளிக் குதித்தாள். "ஆரோட சண்டைக்கு?"

"ஆரும் ஆட்களோட. ஊரில இருந்து சண்டையைப் பார்த்தவங்களுக்கு இஞ்ச வீட்டில சும்மா இருக்க பஞ்சியாக இருந்திருக்கும். போய் இருப்பாங்க."

இப்படி நாம் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுது 'திமு', 'திமு' என சங்கீதமணி, திருகோணமாமணி, தர்மசிகாமணி ஆகிய மூவரும் சோர்வுடன் வந்தார்கள்.

"எங்கடா போயிட்டு வாறியள்?"

"'கிரிக்கெட் மட்ச்' பார்த்திட்டு வாறம்'" சங்கீதமணி சொன்னான்.

"கிரிக்கெட் மட்ச்சோ? எங்கட வீடு இருக்கிற நிலையில 'மட்ச்சோ'?" சற்று உறைப்பாகக் கேட்டேன்.

"எங்கட வீட்டுக்கு என்னப்பா குறை? மழை காலத்தில சில வேளையில கூரை ஒழுகுது. வெயில் காலத்தில நல்லா வியர்க்குது. ஒட்டை மாத்தி, 'ஃபானை' வேண்டி பூட்டினால் வீட்டில ஒரு குறையும் இருக்காது " என்றான் திருகோணமாமணி.

"டேய், எங்கட வீடு எண்டு சொல்லுறது இந்த வீட்டுக் கட்டிடத்தை இல்ல. எங்கட குடும்பத்தை. நீங்க எல்லாரும் இஞ்ச வந்தாப் பிறகு நாங்க படுறபாடு உனக்குத் தெரியாதோ? காசு இல்லாமல் நான் திண்டாடுறன். சில வேளையில உப்பு வாங்கக் கூட காசில்லாமல் கடல் தண்ணியை உப்பாகப் பாவிக்கிறம். முன் வீட்டு பெர்னாண்டோ 'அங்கிள்ன்ர' வீட்டில இருந்தும், பின் வீட்டு குசுமாவதி 'அன்ரி'ன்ர வீட்டில இருந்தும் வாற கோழிக்கறி, மீன்கறி, முட்டைக்கறி வாசனையைமுகர்ந்து தானே கத்தரிக்காய் கறியோட சோறு சாப்பிடுறம்? பக்கத்து வீட்டு காத்தமுத்து அப்பாச்சியின்ர ஆட்டுக்கல்லில உழுந்து ஆட்டுறம். அம்மியில சம்பல் அரைக்கிறம். உரலில மா இடிக்கிறம். இது மட்டுமோ? அமெரிக்கன் மாவுக்குள்ள தவிட்டைக் கலந்து இடியப்பம் அவிச்சு அரிசிமா இடியப்பம் எண்டு சொல்லி சாப்பிடுறம். 'எப். எம்' ரேடியோ கூட இல்லாமல் இப்பவும் 'மீடியம் வேவ்' பாட்டுத்தானே கேட்கிறம்" என்று வேதனையுடன் சொல்லிக் கொண்டே போனேன்.

"இதெல்லாம் எங்களுக்குத் தெரியும். இப்படி எல்லாம் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் கஷ்டப்படக்கில ஒரு நாளைக்காவது பொழுதை சந்தோஷமாகக் கழிக்க வேண்டும் எண்டு நினைச்சுத்தான் அம்மாவுக்கு கூடத் தெரியாமல் 'மட்ச்' பார்க்கப் போனனாங்கள்" என விளக்கமளித்தான் சங்கீதமணி.

"அதுக்கு 'கிரிக்கெட் மட்ச்' பார்க்க வேணுமோ? ரண்டு பேரை 'அவுட்' பண்ணுகிறதுக்கு பதினொரு பேர் முக்கிறதை பார்க்கிறதில என்னடா சந்தோஷம்?"

"அதுல தான் ஒரு 'த்ரிலே' இருக்குது. பழகப்பழக பாலும் புளிக்கும் எண்டு சொல்லுவினமே. ஆனால், கிரிக்கெட்டில அப்படி இல்ல. பார்க்கப் பார்க்கத் தான் ஆசை பெருகும். அப்பா, 'கிரிக்கெட் மட்ச்' பார்க்க இன்னும் கூட உங்களுக்கு விருப்பம் வர இல்லயோ?" என தர்மசிகாமணி நக்கலாகக் கேட்டான்.

"எனக்கு இதில எல்லாம் பிடித்தம் இல்ல. 'ஃபுட் போல்' மாதிரி ரண்டு பக்கமும் சம பலம் உள்ள ஆட்டத்தைப் பார்க்கத்தான் எனக்கு விருப்பம்."

"கிரிக்கெட்டும் அப்படித்தான். ரண்டு பக்கமும் பதினொரு வீரர்கள் இருக்கினம். ஆனால், ரண்டு பேர் விளையாடக்கில பதினொரு பேர் 'ஃபீல்ட்' பண்ணுகினம்."

"அது தான் பிழை என்கிறன். பதினொரு பேரும் விளையாடக்கில மற்ற பதினொரு பேரும் 'ஃபீல்ட்' பண்ண வேணும்" என்று எதையும் யோசிக்காமல் கூறினேன்.

"அப்பா, உங்களுக்கு என்ன விசரா? பனை நடந்த கதை கதைக்கிறியள். நீங்கள் சொல்லுற மாதிரி விளையாட்டை எல்லாம் இன்னும் ஒருத்தரும் கண்டு பிடிக்க இல்ல. கண்டு பிடிச்ச பிறகு வாயைத் திறவுங்கோ" என திருகோணமாமணி சொன்னான்.

"டேய் பெடியள், ஆருக்கடா வெற்றி? ஸ்ரீலங்காவுக்கோ இல்லாட்டால்....." என தர்மபத்தினி வார்த்தைகளை இழுத்தாள்.

"ஒரு பக்கத்திற்கும் வெற்றி கிட்ட இல்ல. ஸ்ரீலங்காவுக்கு எதிராக விளையாடின மற்றக் கோஷ்டி ஆட்கள் நல்லா அடிச்சாங்கள். ஒவ்வொருத்தனும் அறுபது, எழுபது எண்டு அடிச்சாங்கள். மற்றக் கோஷ்டி 'காப்டன்' கெட்டிக்காரன். ஒரே 'சிக்ஸர்களாக' அடிச்சுக் கொண்டிருந்தான். சில நேரங்களில பந்தும் தொலைஞ்சு போயிட்டுது." சங்கீதமணி ஆலாபரணையுடன் சொன்னான்.

"அம்மாவைக் கூட்டிக் கொண்டு போயிருந்தால் தொலைஞ்ச பந்தை எடுக்கிறதுக்கு உதவி செய்திருப்பா. அவவுக்கு ஊரில அக்கம், பக்கத்தில இரவையில விழுற பனம் பழத்தை 'டோர்ச் லைட்' இல்லாமல் பொறுக்கிப் பழக்கம் இருக்குது."

தர்மபத்தினி என்னைக் கோபத்துடன் நோக்கினாள். ஆனால், ஒன்றும் சொல்லவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய், 'அம்பயர்'மார்கள் எப்படி? நேர்மையாக நடந்தவங்களோ?"

"இல்லையப்பா. எத்தனை தரம் 'அவுட்' எண்ட போதிலும் 'அவுட்' குடுக்க இல்ல." சங்கீதமணி வருத்தத்துடன் சொன்னான்.

"டேய், இந்த மாதிரி விளையாட்டுகளுக்கு 'அம்பயர்' தேவை இல்ல எண்டு சொல்றியளோ?"

"ஒம் அப்பா, ரண்டு 'அம்பயர்' மாரும் ஒரு பக்கம் சார்ந்தவையளாக இருந்திச்சினம்." இது சங்கீதமணி.

"ஒரு 'அம்பயரின்ட' ஆள் காட்டி விரல்ல கட்டுப் போட்டிருந்ததை கண்டனான் அதால தான் 'அவுட்' குடுக்க இல்லயோ எண்டு தெரிய இல்ல" என்றான் தர்மசிகாமணி.

"விளையாட்டை பார்க்க நிறைய ஆட்கள் வந்தவையளோ?"

"ஒம் அப்பா. எப்படியும் பத்தாயிரம் பேராவது வந்திருப்பினம்." திருகோணமாமணி சொன்னான்.

"அப்ப நல்லூர் திருவிழா மாதிரி இருந்திருக்கும்."

"அப்பா, நாங்க எப்ப இனி நல்லூர் திருவிழா பார்க்கிறது?" திருகோணமாமணி வாஞ்சையுடன் கேட்டான்.

"'கிரிக்கெட் மட்ச்' எல்லாம் முடிஞ்ச பிறகு தான்."

"'கிரிக்கெட் மட்ச்' எல்லாம் எப்ப முடியும்?"

"பந்து எல்லாம் துலைஞ்ச பிறகு. பந்து இருக்கிறதால தானே 'மட்ச்' விளையாடுகினம்?"

நான் கூறியவை ஒருவருக்குமே விளங்கி இருக்காது என நிச்சயமாக நம்பினேன்.

# (9)

"அப்பா, ஹிட்லர் எண்டால் ஆர் அப்பா?" என்ற வினாவைத் தொடுத்தபடி திருகோணமாமணி என்னிடம் வந்தான்.

அந்நேரத்தில் சம்பலுக்குத் தேங்காய் துருவிய படி தியாகராஜ பாகவதரின் 'மன்மத லீலையை வென்றார் உண்டோ' என்ற பாடலை விசில் வடிவத்தில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தவன், தேங்காயை கீழே வைத்து விட்டு, திருகோணமாமணியை விசித்திரமாக நோக்கினேன்.

"ஹிட்லர் எண்டால் ஆர் எண்டு தெரியாதோ?" என கத்தரிக்காயை இரு கூறுகளாக்கியபடி, திருகோணமாமணியை நகைச்சுவை உணர்வுடன் நோக்கிய வண்ணம் கேள்வி எழுப்பினாள் தர்மபத்தினி.

"தெரியாது எண்டபடியால் தானே எல்லாம் தெரிஞ்ச அப்பாவிற்ற கேட்க வந்தனான்" என்று திருகோணமாமணி 'பட்' டென்று சொன்னான்.

"அப்பாவுக்கு எல்லாம் தெரியுமோ?" தர்மபத்தினி ஒரு இழுவையுடன் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் அம்மா. அப்பா எல்லா விஷயங்களிலையும் ஒரு கெட்டிக்காரன். அசகாய சூரர். 'அன்ரனா' மாதிரி உயர்வானவர். சகலகலா வல்லவர். அப்பா செத்தால் நடுச்சந்தியில சிலை எழுப்பி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் இரங்கலுரை நடத்தலாம்" என்று என் புகழைப் பாடினான் திருகோணமாமணி.

அவன் முதுகில் தட்டி, 'நீ தான்ரா என்ர செல்வக்களஞ்சியம்' என்று சொல்ல முற்பட்ட போது, தர்மபத்தினி என்னை இகழ்வு, சக கோபம், சக கேலி ஆகியன முகத்தில் படரப் பார்த்தாள்.

"உன்ர கொப்பர் எல்லாப் பிரச்சனையையும் தீர்ப்பார் எண்டு எனக்குத் தெரியும். பக்கத்து வீட்டுக் கோழியும், முன் வீட்டு நாயும் சண்டை பிடிச்சால் கூட அதைத் தடுத்து நிறுத்தி சமரசம் செய்யக்கூட தயங்கமாட்டார். ஆனால், எங்கட வீட்டில நடக்கிற சண்டையை தீர்த்து வைக்க மட்டும் அவருக்கு மனசு வராது" என்று தர்மபத்தினி ஓலம் பாடினாள்.

"அது தான் அப்பான்ர சுளித்தனம். பக்கத்து வீட்டுக்காரரின்ர சண்டையை தீர்த்தால் அவருக்கு புகழ் கிடைக்கும். மரியாதை கிடைக்கும். எங்கட வீட்டுச் சண்டையைத் தீர்த்தால் எல்லாரும் 'அதை வாங்கித் தா', 'இதை வாங்கித் தா' எண்டு சொல்லி அப்பாவைப் போட்டு திப்பிலி ஆட்டுவினம்." இப்படி ஒரு விளக்கத்தை திருகோணமாமணி அளித்த போது என் கண்மணிகள் உருண்டன.

"அம்மாவோட ஒரு நாளைக்கு ஒருக்காலாவது சண்டை பிடிக்காமல் இருக்கிறதெண்டால் ஒண்டில் நான் ஒவ்வொரு நாளும் ஒரு போத்தல் சாராயத்தை முழுங்க வேணும். இல்லாட்டால் சாரம் கட்டுறதுக்குப் பதிலாக பாவாடை தான் கட்டவேணும்" என்று அதிகபிரசங்கி போலக் கூறினேன்.

"உங்கை எத்தனை பேரின்ர வீட்டில பாவாடை ஆட்சி புரியுது எண்டு உங்களுக்குத் தெரியாது போல. அப்படி தெரிஞ்சால் இப்படி கதைக்க மாட்டியள்" என்றாள் தர்மபத்தினி.

இதைக் கேட்ட திருகோணமாமணியின் முகத்தில் விழுமிய உணர்ச்சியின் ரேகைகள் நெளிந்து, வளைந்தன. "அப்பா, நான் எதையோ கேட்க வந்து, எதையோ கதைச்சுக் கொண்டிருக்கிறன்."

"அதுக்கு என்னடா? சமாதானம் செய்து வைக்க வந்த ஆட்கள் பேந்து சண்டை பிடிக்க இல்லயோ? அது மாதிரித் தான் இது."

"சரி அப்பா. இப்ப என்ர கேள்விக்கு மறுமொழியைச் சொல்லுங்கோ."

"நீ கேட்ட கேள்வியை இன்னொருக்கால் கேள் பார்ப்பம்."

"ஹிட்லர் எண்டால் ஆர்?"

"உனக்கு ஹிட்லரைத் தெரியாதோ? 'ஹிட்லர் உமாகாந்த்' படம் பார்த்திருந்தால் நீ இந்தமாதிரி மோட்டுத்தனமான கேள்வியைக் கேட்டு அப்பான்ர நேரத்தை வீணாக்க மாட்டாய்" என்று தர்மபத்தினி எவ்வித



122433

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசனையும் இன்றி சொன்னாள்.

இதைக் கேட்டு நானும், திருகோணமாமணியும் உரத்துச் சிரித்தோம். எங்கள் சிரிப்புச் சத்தம் 'சன்–இன்–லோ' தம்பிப்பிள்ளையை சுண்டி இழுத்திருக்க வேண்டும். அடுத்த சில வினாடிகளுக்குள் அவன் அங்கு ஆஜரானான்.

"மாமா....."


"என்னடா?"

"மாமா, எனக்கு 'பட்லர்' எண்டால் ஆர் எண்டு தெரியும். 'ஹிட்' பாட்டுக்களுக்கு 'ட்யூன்' போடுறவங்களையோ ஹிட்லர் எண்டு சொல்றது?"

தம்பிப்பிள்ளையின் முகத்தில் அப்பாவித் தனம் தாராளமாக பரவி இருக்கா விட்டால் நிச்சயம் என் செருப்புக்கள் அவன் கன்னத்தையும், அரை குறையாக முளைத்திருந்த மீசையையும் தடவிச் சென்றிருக்கும்.

"டேய் மொக்கா, நீ சரித்திரம் படிக்க இல்லயோ?"

"என்னை என்ர அப்பு சரித்திரம் படிக்க விட இல்ல. ' சரித்திரத்தை எல்லாம் திரித்து எழுதி இருக்கிறாங்க மகனே, எண்டபடியால நீ பூமிசாஸ்திரம் படிச்சால் போதும்' எண்டு அப்பு அடிக்கடி தொண தொணத்ததினால நான் சரித்திர பாடம் நடக்கிற நேரத்தில இலந்தை மர காணிக்கு போய் விடுவன்."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னைப் போல இந்த நாட்டில நிறையப் பேர் இருந்தால் செருப்பு எல்லாம் காலில இருக்காது" என்று உஷ்ணத்துடன் உரைத்த பின் அவனைக் கனிவாக நோக்கி, "டேய் தம்பிப்பிள்ளை, பூமிசாஸ்திரத்தில ஒரு கேள்வி. ஜேர்மனி எங்கை இருக்குது எண்டு சொல்லு பார்ப்பம்" எனக் கேட்டேன்.

அவன் தலையைச் சொறிந்தான். "முந்தி எங்கை இருந்தது எண்டு தெரியும். இப்ப எங்கை இருக்குது எண்டு சொல்லத் தெரியாது."

"ஏன்டா ஜேர்மனி எங்கையும் ஓடி விட்டுதோ?"

"தமிழ் ஆட்கள் நிறையப் பேர் அங்கை போனாப் போல ஓடி ஒளிஞ்சு விட்டுதாக்கும்." திருகோணமாமணி பகிடித்தனமாக சொன்னான்.

"பிரிஞ்சிருந்த ஜேர்மனியள் ரண்டும் சேர்ந்தாப் போல ஜேர்மனி எங்கை இருக்குது எண்டு தெரிய இல்ல" என தம்பிப்பிள்ளை அரைகுறை விளக்கத்தை அளித்தான்.

"இஞ்சருங்கோ, சரித்திரத்திற்கும், ஹிட்லருக்கும் என்ன சம்பந்தம்?" தர்மபத்தினி என்னிடம் கேட்டாள்.

"ரண்டாவது உலக மகாயுத்தத்திற்கு காரணகர்த்தாவான ஹிட்லர் சரித்திரத்தில இடம் பெறாமல் எங்க இடம் பெறுறது? சரித்திரத்தில தானே?" என அதட்டினேன்.

"அப்ப எங்கட சரித்திரம் எழுதக்கில ஆற்றை பெயரைப் போடுறது?" திருகோணமாமணி வாஞ்சையுடன் வினாவினான்.

"ஏன்ரா, உன்ர பெயரை பதிவு செய்யப் போறியா?"

"ஓமோம். உங்களுக்கும், அம்மாவுக்கும் இடையில நடக்கிற சண்டைக்கு எல்லாம் நான் தானே காரணகர்த்தா" என்று கூறியபடி திருகோணமாமணி அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

# (10)

**எ**மது வீடு 'கல, கல' வென்ற நிலையில் களிப்புடன் விளங்கியது.

எனது இரண்டாவது மகள் தமிழ்மொழியழகிக்கு கலியாணம் பேசி 'புரோக்கர்' கந்தையா வெற்றிலை வாயாக வந்து, அடிக்கடி மூக்குத்தூள் போட்டு தும்மியபடி என்னுடன் சம்பந்தம் விஷயமாக பேசினார்.

"மணியம் அண்ணே, மாப்பிள்ளை சோக்கான பொடியன். கையை கழுவி விட்டுத்தான் அவன்ர கையைப் பிடிக்கலாம். அந்தளவுக்கு சுத்தமானவன். தங்கமானவன். குடி. சிகரெட், பொம்பளை விஷயம் எண்டு ஒண்டும் இல்ல. மூக்குத் தூள் வெள்ளையோ எண்டு கேட்டிருக்கிறானாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

அவ்வளவு சோக்கான பொடியன்."

"இவ்வளவு நல்ல குணம் இருந்தால் பொடியனில ஏதோ கோளாறு இருக்க வேணும். மெய்யே கந்தையா, அவன் ஆம்பிளையோ?" என்று கேட்டேன்.

கந்தையா வெகுளிச் சிரிப்பொன்றை வெளியிட்டார். "அண்ணே, என்ன பகிடி விடுறியளோ? அவன் ஒரு சரியான ஆம்பிளைத்தம்பி. ஆம்பிளையளுக்கு இலக்கணத்தில கூறுகிற சகல அம்சங்களும் இருக்குது. ஆள் ஒரு மன்மதக்குஞ்சு. ஒருக்கால் பார்த்தால் பேந்தும், பேந்தும் பார்க்கச் சொல்லுற வடிவு ஆளிற்ற இருக்குதாம்."



"இப்படியான ஒருத்தனைத் தான் என்ர மனுசிக்காரியும் தேடிப் போட்டு, கடைசியில எனக்கு தலை நீட்டினவவாம்" என்று சொல்லிச் சிரித்தேன்.

கந்தையாவும் கபடமில்லாமல் என்னுடன் சேர்ந்து சிரித்தார்.

"கந்தையா, மாப்பிள்ளை என்ன தொழில் செய்யுறாராம்?"

"கூட்டல் வேலை."

"கூட்டல் வேலையோ? என்னத்தைக் கூட்டுறார்? கணக்கையோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாட்டி 'ரோட்'டையோ?"

"கணக்கை கூட்ட ஏலாததால தான் இப்ப 'ரோட்'டைக் கூட்டுறாராம்."

"என்ன 'ரோட்டு' கூட்டுற மாப்பிள்ளையோ?"

"ஓமோம்."

"கந்தையா அண்ணே, இப்பவே இந்த இடத்தை விட்டு நழுவுங்கோ. என்ர மனுஷன் 'கிளார்க்' எண்டால், வாற மருமோன் 'அற்லீஸ்ற்' 'எக்கவுண்ரனாவது' இருக்க வேணும்" என எமது சம்பாஷணையில் தன் கருத்துக்களைப் புகுத்தினாள் தர்மபத்தினி.

"உங்கட மூத்த மருமோன் 'டொக்டரோ', இல்லாட்டால் 'என்ஜினியரோ?' வீட்டில முடங்கிக் கிடக்கிற முட்டாள் தானே ?"

"அது பிள்ளை விரும்பிக் கட்டினது. அதோட அவர் எங்கட மருமோன். அதாவது இவர்ற அக்கான்ர மேன்."

"இந்த மாப்பிள்ளை கூட்டுற இடம் அவ்வளவு குப்பை இல்லாத இடமாம். 'லோங்ஸ்' போட்டுக் கொண்டு தான் கூட்டுறவராம். அதுவும் குளிர்காலத்தில 'கோட்டு', 'சூட்டு' போடுவாராம். ஆளிற்ற நிறைய காசு இருக்குதாம். சொந்தமாக காரும் இருக்குதாம். இவர்ற காரை கழுவுறதுக்கு எண்டே ஒரு இந்தியனை வேலைக்கு வைச்சிருக்கிறாராம். இஞ்ச நாங்கள் கணக்கு கூட்டுற மாதிரித்தான் அங்கை 'ரோட்டு' கூட்டுறவங்களாம்."

"அங்கை எண்டால் எங்கையாம்?"

"டென்மார்க்கில தான். மாப்பிள்ளைப் பெடியன் டென்மார்க்கில தான் இருக்கிறாராம்."

"டென்மார்க்கோ? அது எங்கை இருக்குது?" என விளையாட்டாகக் கேட்டேன்.

"அப்பா, உங்களுக்கு டென்மார்க் எங்கை இருக்குது எண்டு தெரியாதோ? நான் காட்டுறன்" என்ற சங்கீதமணி உடனே ஓடிப்போய் உலகப் படத்துடன் வந்து டென்மார்க்கை காட்டினான்.

"அட, நீ வலு கெட்டிக்காரன் தான். சிலோன் படத்தில என்னால நயினாதீவு எங்கை இருக்குது எண்டு காட்டத் தெரியாது. இப்ப எல்லாப் பெடியளும் சுளியன்கள் தான்." தர்மபத்தினி வாயெல்லாம் பற்களாகச் சொன்னாள்.

"அப்பா, இப்ப மூண்டு வயசுப் பிள்ளைக்கே டென்மார்க், சுவிஸ், கனடா, பெல்ஜியம், நோர்வே, ஒஸ்திரேலியா எங்கை இருக்குது எண்டு தெரியும்" என்றான் சங்கீதமணி,

"ஓம் அப்பா. தங்கட சொந்த ஊரை இலங்கைப் படத்தில காட்ட முடியாத ஆட்கள் இந்த நாடுகளை உடன காட்டி விடுவினம்" என்றான் திருகோணமாமணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

"நாங்களும் இப்படித் தானே இருந்தனாங்கள்? முந்தி வவுனியாவுக்குப் பிறகு எங்களுக்கு புளியங்குளம் தானே தெரியும்? இப்ப வவுனியாவுக்குப் பிறகு தாண்டிக்குளம், பேயாடிகூழாங்குளம், ஓமந்தை எண்டு எத்தனை ஊரைத் தெரியும்" என சின்னதொரு விளக்கத்தை முன்வைத்தாள் தர்மபத்தினி.

"மெய்யே, மாப்பிள்ளைப் பொடியன் எங்கட சாதியோ?"

கந்தையா 'லொக்கு','லொக்கு' எனச் சிரித்தார். "அவர் பாரதியாரின்ர சாதி."

"அது என்ன சாதி?"

"சாதி இரண்டொழிய வேறு இல்லை எண்ட பாரதியரின்ர கவிதை வரியை அதுக்கிடையில மறந்து விட்டீங்களோ?"

"அது ஊருக்கு. எனக்கோ, உமக்கோ இல்ல. எங்கட சாதியோ எண்டு சொல்லும் பார்ப்பம்."

"அது எனக்குத் தெரியாது. இப்ப இருக்கிற நிலையில அவன் டென்மார்க் சாதி. அவ்வளவு தான் எனக்குத் தெரியும்."

"அப்ப இஞ்ச இருந்து நழுவும். உமக்கு காலமை வெள்ளன கோப்பி தந்தது தான் மிச்சம்."

"மணியம் அண்ணே, கோவியாதேங்கோ. நான் சொல்லுறதை அவதானமாகக் கேளுங்கோ. பொடியனுக்கு சீதனம், 'டொனேஷன்', நகை நட்டு ஒண்டும் வேண்டாமாம். மூக்கும் முளியுமாக ஒரு பொம்பளை தான் வேணுமாம். உங்கட மேள் கிளி மாதிரி இருக்கிறதால கண்ணை மூடி கட்டிவிடுவார். நல்ல சம்பந்தம். சும்மா எங்கட ஊர் ஆக்கள் மறந்த சாதிக் கதையைக் கொண்டு வந்து அநியாயமாக நல்ல மாப்பிள்ளையை இழந்து, உங்கட மேளின்ர வாழ்க்கையில மண்ணை வாரி இறைச்சிப் போடாதேங்கோ" என உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கந்தையா சொல்லி முடித்தார்.

"இஞ்சருங்கோ, இவ்வளவு நல்ல மாப்பிள்ளை இந்த தென்கிழக்கு ஆசியாவில கூட இருக்காது. பேசாமல் கண்ணை மூடி ஓம் எண்டு சொல்லுங்கோ. நான் உடன நானும், மேளும் ஒண்டாக எடுத்த 'ஃபோட்டோவை' கந்தையா அண்ணையிற்ற குடுக்கிறன்."

"பொத்தடி வாயை. மாப்பிள்ளை பொடியன் குடி , புகை, பொம்பளை விசயம் இல்லாதவர். சீதனம், 'டொனேஷன்', நகை நட்டு வேண்டாம் என்கிறார். அப்போ அவரில ஏதோ ஒரு குறையாவது இருக்க வேணும். மெய்யே, கந்தையா, மாப்பிள்ளைக்கு ரண்டு காலும் இருக்குதோ?"

"ஓமோம். ஒரு கையில ஆறு விரல் கூட இருக்குதாம். தலைமயிர், மீசை எல்லாம் கறுப்பாம். தாடியில மட்டும் ஓரிரு நரை மயிர்...."

"மூளை, கீளை?"

"அபாரமூளை Fast Forward இலயும்,Reverse இலயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோட்டைக் கூட்டுவாராம். ஒரு சதுர மீட்டரில எவ்வளவு குப்பை இருக்குது எண்டு மனதாலையே கணக்கு பார்த்து விடுவாராம்."

"அப்ப ஆளில என்ன குறை இருக்குது?"

"ஒரே ஒரு குறை."

"என்ன குறை?"

"தன்ர தாய் மொழியை அதாவது தமிழை மறந்து விட்டாராம். டென்மார்க் பாஷை தான் கதைப்பாராம்."

"அப்ப இடத்தை விட்டு நகருங்கோ. ஒவ்வொருத்தனும் மொழி, மொழி எண்டு சாகிறான். மொழிக்காக சண்டை பிடிக்கிறான். மொழியை மறந்தவனுக்கு நான் என்ர மேளை குடுக்க மாட்டன்."

"உங்களுக்கு நிறையத் தான் மொழிப் பற்று இருக்குது" என்றபடி கந்தையா தோள்பையை கமக்கட்டின் கீழ் வைத்தபடி நடையைக் கட்டினார்.

## (11)

"**வெ**ற்றி, வெற்றி" என முழக்கமிட்டபடி சங்கீதமணி என்னை நோக்கி வீர நடைபயின்று வந்தான்.

முன்னர் சில சினிமா படங்களில் எம்.ஜி.ஆர் தோன்றும் முதல் கட்டத்தில், 'வெற்றி','வெற்றி' என முழக்கமிட்டபடி தான் அறிமுகமாவார். சங்கீதமணியும் அதே போல 'வெற்றி', 'வெற்றி' என்று கூறியபடி வந்த போது, எனது மனத்திரையில் எம்.ஜி.ஆரும், அவரது இளம் நாயகிகளும் நிழலாடினார்கள். ஹ!'அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே' என்ற பாட்டை முணுமுணுத்தபடி அங்கும், இங்கும் விழிகளைச் சுழட்டி, 'நண்பனே', 'நண்பனே' என்று குரலை சற்று உயர்த்திய போது, தர்மபத்தினி வெகு பக்குவமாக வந்து என்னருகில் நின்றாள்.

அக்கணமே என்னை மறந்தேன். அப்படியே அவளைக் கட்டி அணைத்....... சீ! பகல் நேரத்தில் என்ன விவஸ்தை இல்லாத கற்பனை! மனதுக்கு கடிவாளம் போட்டு, அதைப் பக்குவப்படுத்தினேன்.

"வெற்றி, வெற்றி" என்று சங்கீதமணி மீண்டும் எக்காளமிட்டான்.

"என்னடா 'வெற்றி', 'வெற்றி' எண்டு கத்துறாய்? எங்கட வெற்றி வேலுவை எங்கையும் கண்டனியோ?" என சங்கீதமணியிடம் சுவாரஷ்யத் துடன் கேட்டேன்.

"வெற்றுவேலுவா? இல்லை என் அப்பனே" என்று சொல்லிச் சிரித்தான் சங்கீதமணி.

"நல்ல வேளை அப்பாவைப் பார்த்து 'பித்தா' எண்டு சொல்ல இல்ல. அந்தளவில நீ இப்பவும் அப்பாவுக்கு மரியாதை குடுக்கிறாய் தான்." தர்மபத்தினி சொன்னாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்களை நன்றாகக் கடித்தபடி தர்மபத்தினியை முறைத்தேன். பின் சங்கீதமணியை நோக்கி, "டேய், 'வெற்றி', 'வெற்றி' எண்டு ஏன்டா கத்தினனி?" என வினா தொடுத்தேன்.

"அப்பா, 'ஒபரேஷன்' வெற்றியாம்."

"ஆருக்கடா 'ஒபரேஷன்' நடந்துது?" கண்விழிகளை உருட்டியபடி,



அவனை மிரட்டும் வகையில் கேட்டேன்.

"எங்கட கிளி அக்காவுக்கு."

"ஆரடா கிளி அக்கா?"

"பரந்தன் மாமன்ர மேள் கிளியை அதுக்கிடையில மறந்து விட்டீங்களோ?"

"அட..... அட..... எங்கட பரந்தன் குஞ்சியின்ர பேத்தி.... இப்பத்தான் ஞாபகத்துக்கு வருது..... டேய் பெடி, அவளை கிளி எண்டோ, இல்லாட்டி குயில் எண்டோ சொல்லுறவேல்?"

"தங்கச்சிக்காரி தான் குயில். மூத்தவள் கிளி. அவள்ன்ர மூக்குத்தான் கிளி மாதிரி. மூக்குக்குள்ளால பார்த்தால் அவள்ன்ர மூளை தெரியுமாம். இளையவள் நல்ல கறுப்பு. அதால குயில் எண்டு சொல்லுறவேல். மூத்தவள் கிளி எண்டால், இளையவள் கிலி" என்று நகைச்சுவையாக விளக்கம் அளித்தான் சங்கீதமணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மாவைப் போல..... "அவன் காதுபட சொன்னேன்.

"மெய்யே, உங்களுக்கு கிளியைத் தெரியாதோ?" தர்மபத்தினி எமது சம்பாஷணையில் குறுக்கிட்டாள்.

"எனக்கு கிளியையும் தெரியாது. குயிலையும் தெரியாது. ஆனால், மயிலைத் தெரியும்" என்று சிரித்தேன்.

"இஞ்சருங்கோ, அவள் பாவம். "

"ஏனாம்?"

"அவள்ள எத்தனை 'ஒபரேஷன்' செய்து இருப்பினம் தெரியுமோ? ஆயிரத்தி தொள்ளாயிரத்து எண்பத்தி மூண்டில இருந்து இது வரைக்கும் எத்தனை ஒபரேஷன் செய்திருப்பினம்? வேறை ஆரும் எண்டால் 'ஒபரேஷன்' மேசையிலேயே சீவனை விட்டிருப்பினம். அவள் எண்டபடியால் எல்லாத்துக்கும் தாக்குப்பிடிச்சுக் கொண்டு இன்னும் எத்தனை ஒபரேஷன் செய்தாலும் நான் தயார் எண்ட நிலையில நிற்கிறாள். "

"அவள் என்ன அப்படி வருத்தக்காரியோ?"

"சா, இல்ல. முதல்ல அவளுக்கு தலையிடி தான் வருமாம். அதை ஏதாவது குளுசை குடுத்து மாத்தி இருக்கலாம். அதுக்கு பதிலா அந்த கிழட்டு டாக்குத்தர் தலையை மொட்டை அடிச்சு வைத்தியம் பார்க்கிறன் எண்டு சொல்லி வைத்தியம் பார்த்தாராம். ஆனால் தலையிடி மாற இல்லயாம். அதுக்குப் பிறகு வயித்துக்குத்து வந்து அவள் கஷ்டபட்டாள். அதையும் குணப்படுத்துறன் எண்டு சொல்லி அந்த டாக்குத்தர் அவள்ன்ர வயிற்றை கிழிச்சு குடலை உருவி வெளியில எடுத்தாராம்."

"ஏன் ஆருக்கும் மாலை போடவோ?"

தர்மபத்தினி என்னை முறைத்தாள். "குடல்ல தான் ஏதோ புண் இருக்குது எண்டு சொன்ன டாக்குத்தர் குடல்ல அரைவாசியை வெட்டி வீசி விட்டார். ஆனால், வயிற்று வலி அகலவே இல்ல."

"அப்ப தலையிடியும் மாற இல்ல. வயிற்று வலியும் நிற்க இல்ல. வேற டாக்குத்தரிற்ற போய் இருக்கலாம் தானே?"

"ஆரோ இந்த மாதிரி வியாதிக்கு இந்தியாவுக்கு போனால் மருந்து செய்யலாம் எண்டு சொல்லிச்சினமாம்."

"அப்ப கிளி இந்தியாவுக்கு போனவளோ?"

"இல்ல, ஆனால், அவள்ன்ர அதிர்ஷ்டமோ, இல்லாட்டி துரதிர்ஷ்டமோ இந்தியாவில இருந்தே இந்த மாதிரி 'ஒபரேஷன்' செய்யுறதிலையே வலு கெட்டிக்காரரான டொக்டர் மான்சிங் வந்தார். "

"ஆ.... எனக்கு அந்த டாக்குத்தரை தெரியும். ஆள் வலு சூரனாம். உலகத்திலையே நாலாவது பெரிய டாக்குத்தராம் அவர். "

"உங்களுக்கும் அவரை பற்றித் தெரியும் போல. அவர் இஞ்ச வந்தாப்பிறகு எங்கடை ஆட்கள் எத்தனை ஆரவாரம் செய்திச்சினம். குமர் பெட்டையள் கூட அவருக்கு மாலை போட்டிச்சினம். அவரை கடவுளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பி இருந்திச்சினம். ஆனால்........"

"ஆனால்? மீதியையும் கெதியில சொல்லி முடியன்."

"கெதியில சொல்லி முடிக்கிற மாதிரியோ அவர் நடந்தவர்? 'ஒபரேஷன்' செய்யாமலேயே குணமாக்கிறன் எண்டு சொன்னவர், பேந்து எத்தனை 'ஒபரேஷனை' செய்திருப்பார். ஆனால், ஒரு ஒபரேஷனுமே வெற்றியாக அமைய இல்ல."

"அவர் டாக்குத்தர்தானே?"

"ஓமோம். இந்த டாக்குத்தருக்கு கிளியின்ர தேப்பன் எத்தனை ஆடுகளை வெட்டி விருந்து வைச்சிருப்பார்? டாக்குத்தருக்கு பனம் பழத்தில நல்ல விருப்பமாம். பனையில ஏறி பனம் பழம் பிடுங்க ஆரும் இல்லாட்டால் பரந்தன் மாமா பனையை அப்படியே வெட்டி சரிச்சு பனம் பழத்தைப் பிடுங்கிக் குடுப்பாராம்."

"எங்கட பனம் வளம் எல்லாம் போச்சுதே."

"அய்யோ, அந்த அக்கிரமத்தை, அநியாயத்தை என்னெண்டு சொல்லுறது? எத்தனை பனம் மரம் அடியோட சரிஞ்சுது? ஆனால், அதால ஏற்பட்ட பலன் சைபர் தான். கிளியின்ர வருத்தம் மாறவே இல்ல. இனியும் 'ஒபரேஷன்' எண்டு நாளைக் கடத்தினால் தன்ர மானம், மரியாதை கப்பல்ல ஏறி விடும் எண்டு டாக்குத்தர் நினைச்சு இந்தியாவுக்கு மூட்டை கட்டி விட்டாராம்."

"டாக்குத்தர் இஞ்ச எத்தனை வருஷம் இருந்தவராம்?"

"இரண்டரை வருஷத்திற்கு மேலையாம்."

"பாவம் பெடிச்சி, நல்லா கஷ்டப்பட்டிருப்பாள்."

"ஓம் அப்பா, கிளி அக்கா நல்லா மெலிஞ்சிட்டா. போஷாக்கு சாப்பாடு கூட கிடைக்காமல் வேற, வேற வருத்தம் எல்லாம் வந்து நல்லா கஷ்டப்பட்டா. பாவம் அவ." சங்கீதமணி வருத்தத்துடன் சொன்னான்."

"வேற யாரும் டாக்குத்தரிட்ட காட்டி இருக்கலாம் தானே?"

"எல்லாரும் ஏறி சறுக்கி விழுந்த குதிரையில சக்கடத்தார் ஏறி சறுக்கி விழுந்தாராம் எண்ட மாதிரி எங்கட உள்ளூர் டாக்குத்தர் ஒருத்தரும் ஒபரேஷன் எல்லாம் செய்து பார்த்தார். அதுவும் சரி வரயில்ல. இந்த டாக்குத்தர் அவ்வளவு 'சீரியஸான' டாக்குத்தர் இல்லயாம். 'ஒபரேஷனுக்கு' எல்லாம் ஆயுத்தப்படுத்தி விட்டு கத்தியைக் கொண்டு வரமாட்டாராம். இல்லாவிட்டால் 'ஒபரேஷன்' நடக்கக்கில என்ர தலைமயிருக்கு 'டை' போட நேரமாச்சுது எண்டு சொல்லி அரைகுறையில போய் விடுவாராம். அதால அவர் எந்த ஒரு 'ஒபரேஷனையும்' ஒழுங்காக செய்ய இல்லயாம்" என தர்மபத்தினி கூறிமுடித்தாள்.

"நல்ல டாக்குத்தர்மார் தான். ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் எண்ட பழ மொழிதான் ஞாபகம் வருது."

"அப்பா, அப்படியெண்டால் இரண்டாயிரம் பேரைக் கொன்றவன் முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியனோ?" சங்கீதமணி விஷமச் சிரிப்புடன் கேட்டான்.

"கணக்குப்படி பார்த்தால் சரிதான்."

"அப்ப 'ஒபரேஷன்' செய்த எங்கட ஆட்கள் கனபேருக்கு டாக்குத்தர் பட்டம் குடுக்க வேணும்."

அப்பொழுது சங்கீதமணி 'வெற்றி, வெற்றி' என்று கத்திக் கொண்டு வந்தமை நினைவுக்கு வந்தது. "டேய் வெற்றி, வெற்றி எண்டு கத்திக் கொண்டு வந்தியே. அப்படி எண்டால் கிளி அக்காவில ஏதாவது 'ஒபரேஷன்' செய்து அது வெற்றி அடைஞ்சிருக்குதோ?"

" வெற்றி எண்டு டாக்குத்தர் சொல்லுறாராம். ஆனால், உண்மை என்னெண்டால் போனமுறை டாக்குத்தர் மறந்து போய் தன்ர சுங்கானை கிளி அக்கான்ர வயித்துக்குள்ள வைச்சு தைச்சிட்டாராம். இதை ஒரு மாதிரி அறிஞ்சு போனகிழமை பேந்தும் ஒரு 'ஒபரேஷன்' செய்து சுங்கானை எடுத்துப் போட்டாராம். அதைத் தான் வெற்றியான 'ஒபரேஷன்' எண்டு சொல்லித் திரியுறாராம்" என்று சங்கீதமணி சொல்லி முடிக்கையில், என் வாயில் இருந்து 'ஒன்றரைக்கண்' குமரிமுத்துவின் அட்டகாசச் சிரிப்பு முகிழ்ந்தது.

## (12)

ஒரு காலை வேளை அது.

தர்மபத்தினி ஒரு பக்கம், ஆண்பிள்ளைகள் இன்னொரு பக்கம், பெண்பிள்ளைகள் மறுபக்கம் என்று நின்று காரசாரமான வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இடைக்கிடை அடி, குத்து என்ற வகையில் வன்முறையும் இடம் பெற்றது.

பெண் பிள்ளைகள் அடிமட்டத்தை ஆண்பிள்ளைகளை நோக்கி எறிந்த போது, ஆண் பிள்ளைகள் எதிர்த்தாக்குதலுக்கு மீட்டர் மட்டத்தை ஆயுதமாகப் பாவித்தனர். பெண்பிள்ளைகளுக்கு தர்மபத்தினி இடையிடையே மறைமுகமாக உதவியும் புரிந்தாள். உலக்கை, அரிவாள், 'பட்டர்' கத்தி, புல்வெட்டும் கத்தி, உடைந்த போத்தல்கள் ஆகியன களத்திற்கு கொண்டு வரப்பட்ட போதும், அவை பாவிக்கப்படவில்லை. வெறும் தடயப் பொருட்களாகவே விளங்கின.

ஊரில் குண்டுத் தாக்குதல் நாட்களில் 'பங்கருக்குள்' அனுபவித்த நரக வேதனையை விட வேதனையையும், கூடவே எரிச்சல், உபாதை, கோபம், ஆத்திரம் ஆகிய உணர்ச்சிகளையும் அடைந்தேன். எனது பிள்ளைகள் இப்படி சண்டை பிடிக்கிறார்களே எனக் கலங்கி, கலவரமுற்ற போது கவலை இதயத்தைக் கரைக்க முற்பட்டது. கண்ணீர் வழிவதற்கு பிரயத்தனம் எடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் புத்திர, புத்திரிகள் சண்டை பிடிப்பதற்கான காரணம் புரியவில்லை. தலையைச் சொறிந்தும் பலன் கிட்டவில்லை. சண்டையை நிறுத்தித் தான் காரணத்தைக் கேட்போமே என எண்ணியவனாக "டேய் பெடியள், சண்டையை நிற்பாட்டுங்கோ" என்று கத்தி, முழிகளைப் புரட்டிய போதும், அவர்கள் என் கத்தலைத் தூசியாக மதித்தபடி, தமது சண்டையை வெகு லாவகமாகத் தொடர்ந்தார்கள்.

எனது கோபமும், ஆத்திரமும் எல்லை மீறின. "டேய், சண்டை பிடிக்கிறதை நிற்பாட்டுங்கோ" என்று கத்தியபடி சென்று, தர்மபத்தினியின் முதுகில் 'கனமான ஒன்று கொடுத்தேன்.

"அய்யோ அம்மா" என அலறியபடி தர்மபத்தினி சண்டை நிறுத்தத்திற்கு சாவுமணி அடித்தாள்.

அவளின் அலறலைக் கேட்டு பெடி, பெட்டையள் வாயை மூடினார்கள். சண்டை நிறுத்தம் பெற்றது. எல்லோரும் தம்மை ஆசுவாசப்படுத்தினார்கள். என் முன்னால் எல்லா சக்திகளையும், வளங்களையும் வீணாக்கி விட்டோமே என வெட்கித் தலை குனிந்தார்கள்.

தர்மபத்தினியை நக்கீரப் பார்வையால் சுட்டெரித்தேன். "இடியே, ஏன்ரி, நீயும் பிள்ளையளும் சண்டை பிடிக்கிறயள்? காலமை குடிச்ச சோற்றுக் கஞ்சி செமிக்க இல்லயோ?" என உஷ்ணத்துடன் கேட்டேன்.

முதுகைத் தடவியபடி, என்னை ஏறெடுத்துப் பார்க்காமல், "முதுகில குத்தி இருக்கிறியள், கோழை மாதிரி. முன்னுக்கு குத்தியிருந்தால் என்ர வீரத்தை நானும் காட்டி இருப்பன்" என்று காட்டமாகக் கூறினாள்.

இதைக் கேட்டு பிள்ளைகள் எல்லோரும் தங்கள் பகைமையை மறந்தவர்களாக, ஒவ்வொரு விதமான சிரிப்பை உதிர்த்து, என்னுள் அவமான உணர்ச்சியை உட்தள்ளினார்கள்.

"கோழைகளை நான் முதுகில தான் குத்துறனான்" என சமாளித்தபடி, சங்கீதமணியை நோக்கி, "ஏன்ரா சண்டை பிடிக்கிறியள்" என வினவினேன்.

"அப்பா, ஒரு சின்னப் பிரச்சனை. அதை அலசி ஆராயக்குள்ள சின்னப் பிரச்சனை பெரிய பிரச்சனை ஆகிவிட்டுது. அதாவது எங்கட சண்டை ரண்டு கோணத்தில நடக்குது" என்றவன், ஒருவெகுளிச் சிரிப்பைத் தாராளமாக வெளியிட்டான்.

"சின்னப் பிரச்சனையும், பெரிய பிரச்சனையுமோ? விளக்கமாகச் சொல்லன்" என்றபடி சுருட்டொன்றைப் பற்ற வைத்தேன்.

"ஒண்டு சர்வதேசப் பிரச்சனை மாதிரி. மற்றது உள்ளூர் பிரச்சனை மாதிரி."

"சரி முதல்ல சர்வதேசப் பிரச்சனையை அவிழ்த்து விடு பார்ப்பம். "

"உலகத்தில உசத்தியான ஆட்கள் ஆம்பிளையளா? பொம்பளையளா?" என எமது சம்பாஷணையில் குறுக்கிட்டாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழியழகி.

"நல்ல விசயத்தைப் பற்றித் தான் ஆராய்ஞ்சு இருக்கிறியள். சரி, உள்ளூர் பிரச்சனையை சொல்லு பார்ப்பம்."

"இந்த வீட்டில அப்பாவா, அம்மாவா உசத்தி எண்டது தான் உள்ளூர் பிரச்சனை."

"அடியடா புறப்படலையில எண்டானாம். காலமை நல்ல சோலி தான். முதல்ல சர்வதேசப் பிரச்சனையைப் பற்றி ஆராய்வம். உலகத்தில உசத்தியான ஆட்கள் ஆம்பிளையளா, பொம்பளையளா?" என்று கேட்டு விட்டு எல்லோரையும் 'ஸ்லோ மோஷனில்' பார்த்தேன்.

"ஆம்பிளையள் தான்" என்றார்கள் ஆண் பிள்ளைகள். "பொம்பளையள்" என்றார்கள் பெண் பிள்ளைகள்.

தர்மபத்தினியைச் சுவாரஷ்யமாக நோக்கினேன். "இடியே, நீ என்ன சொல்லுறாய்?"

"உங்களை கலியாணம் முடிச்ச பிறகு ஆம்பிளையள் எண்டு சொல்லுவனோ? உலகத்தில உசத்தியான ஆட்கள் பொம்பளையள் தான். நாங்கள் இல்லாட்டால், 'கரண்ட்' இல்லாத ரேடியோ மாதிரி, உயிர் இல்லாத நிலையில துடிதுடிப்பியள். நாயாக, பேயாக, பூதமாக அலைவியள்."

"அப்படி எண்டால் யாழ்ப்பாணத்துக்கும் உயிர் இல்லயோ அம்மா?" என சங்கீதமணி கேட்டான்.

"ஏன்ரா அப்படி கேட்கிறாய்?"

"அங்க தானே 'கரண்ட்' இல்லயே! "

இதைக் கேட்டு சிரிப்பு அங்கு எதிரொலித்தது. ஏதாவது ஒரு ஜன்னல் கண்ணாடி வெடித்திருக்கலாம்.

"அப்பா, உங்கட மறுமொழி என்ன?" பருபதபத்தினி பவ்யமாகக் கேட்டாள்.

"அம்மா இல்லை எண்டால் பொம்பளை சாதி தான் உலகத்திலையே உசத்தியான சாதி எண்டு சொல்லி இருப்பன். அம்மாவும் பொம்பளை சாதிக்குள்ள அடங்குறதால என்ர முடிவு ஆம்பிளையள் பக்கம் தான்."

ஒரு சிறிய 'க்ளிங்', 'க்ளிங்' சிரிப்பு அங்கு முகிழ்ந்தது.

"அம்மாவை மறந்து விட்டு மறுமொழி சொல்லுறதெண்டால் என்ன சொல்லுவீங்க?" தமிழ்மொழியழகி கேட்டாள்.

"பகலில ஆம்பிளையளும், இரவில பொம்பளையளும் உசத்தியான ஆட்கள்" என்று கூறிவிட்டு தர்மபத்தினியை அர்த்தபுஷ்டியுடன் பார்த்தேன்.


இதைக் கேட்டு வயது வந்த பிள்ளைகள் யாவரும் சிரிக்க, மற்றவர்கள் முழித்தார்கள்.

தர்மபத்தினியின் முகம் அழுகிய பழம் போலாகியது.

"சரி, இனி உள்ளூர் பிரச்சனையை ஆராய்வம். இந்த வீட்டில யார் உசத்தி? அப்பாவா? அம்மாவா?" என சங்கீதமணி பொதுப்படையாகக்



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேட்டான்.

எல்லோரும் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்து கண்களால் கதை பேசினர். இதழ்களை கோணலாக்கினர். நிமிஷங்கள் நகர்ந்த போதும் ஒருவரும் மறுமொழி சொல்லாமல் நின்றனர்.

"டேய் பெடியள், அப்பா தான் எண்டு சொல்லுங்கடா." எனது குடும்பத்தில் ஆறு ஆண்பிள்ளைகள் என்றபடியால் என் சார்பாகவே மறுமொழி கூறுவார்கள் என்ற நம்பிக்கையில், நப்பாசையில் கத்தினேன்.

"டேய் பெடியள், பெட்டையள் உங்களுக்கெல்லாம் கத்தரிக்காய் கறியை கோழி இறைச்சிக் கறி மாதிரி சமைச்சுத் தாறதை மறந்து அப்பா பக்கம் நிண்டுடாதேங்கோ." தர்மபத்தினி பதறினாள்.

சகல பிள்ளைகளும் மீண்டும் தமது புலன்களால் பரிபாஷையில் ஈடுபட்டார்கள். நேரம் போனதே தவிர ஒருவருமே ஒரு முடிவுக்கும் வரவில்லை.

"இந்த வீட்டில உசத்தி மாமி தான்" என்று கூறி, அங்கு குடிகொண்டிருந்த அமைதியைக் குலைத்தபடி தம்பிப்பிள்ளை வந்தான்.

எல்லோரது பார்வையும் அவன் மீது ஆச்சரியத்துடன் பாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மபத்தினி அன்பு ததும்ப அவனைப் பார்த்து, கண்களால் நன்றி கூறினாள்.

என் கண்களில் இருந்து அதிவெப்பத்துடன் அம்பான நிலையில் வெளிப்பட்ட பார்வை தர்மபத்தினியின் முகத்தில் படிந்தது.

தம்பிப்பிள்ளை என்னை அலட்சியமாக நோக்கி என்.ரி.ராமராவின் 'கிருஷ்ணச்சிரிப்பு' ஒன்றை நளினமாக வெளியிட்டான்.

"டேய் தம்பிப்பிள்ளை, என்ர மேளை கலியாணம் கட்டுறதுக்கு 'பெர்மிஷன்' தந்த எனக்கு இப்படியோடா நீ நன்றிக் கடன் செலுத்திறது?" என்று காரசாரம் கலக்கக் கேட்டேன்.

"பெர்மிஷன் தந்தது என்னவோ உண்மை தான். ஆனால், கலியாணம் முடிச்ச கையோட என்னை கனடாவுக்கு அனுப்புறதாக நீங்க வாக்கு குடுத்தீங்க. ஆனால், இதுவரையில உங்கட வாக்கை நீங்க நிறைவேத்தி வைக்க இல்ல. கனடாவுக்கு எப்ப அனுப்புவீங்க எண்டு கேட்டால் சுடலை நெருப்பாட்டம் நிற்கிறியள்."

"மருமோன், அதுக்கு இப்படி பழிக்கு பழி வாங்கிறதோ? நான் உன்னை கனடாவுக்கு அனுப்பி வைப்பன் தானே?"

"எப்ப?"

"காசு கிடைச்ச பிறகு."

"காசு எப்ப கிடைக்கும்?"

"மாமி வாங்கி இருக்கிற 'சுவீப்பில பிரைஸ்' கிடைச்ச பிறகு."

"அப்ப இந்த சென்மத்துக்கும் நான் கனடாவுக்கு போகமாட்டன்."

"சரி, சரி உந்தக் கதையைப் பற்றி பிறகு அலசுவம். இப்ப உன்ர மறுமொழியை என்ர சார்பாக சொல்லி, எனக்கு வெற்றியை எடுத்துத் தா."

"மாட்டன். இந்த வீட்டில மாமி தான் உசத்தி. மாமி இல்லாட்டால் இந்த வீடு சுடுகாடு தான்."

அவன் வாய் மூட முன் பெண்பிள்ளைகள் எல்லோரும் "அம்மாவுக்கு ஜயவேவா" எனக் கத்தினார்கள்.

சங்கீதமணியின் ஆந்தை முழி இருட்டறையில் ஒரு மாதம் தொடர்ந்திருந்தவனின் கண்கள் போலாகின. என் இதயத்தினுள் வெப்பமும், குளிரும் போட்டி போட்டன. நாக்கைப் பிடுங்கிச் சாக வேண்டும் என்ற நிலையில் தவித்தேன், தடம்புரண்டேன். அடுத்த நடவடிக்கையை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்று தெரியாமல் விழித்தேன். நாக்கு உள் வாங்கியது போன்ற நிலையில் திண்டாடினேன், திணறினேன்.

தர்மபத்தினி பெருமை சொட்ட என்னைப் பார்த்தாள்.

"அப்படி எண்டால் இந்த வீட்டில அம்மா தானே உசத்தி?" என தமிழ்மொழியழகி உறுதிப்படுத்துமாப் போலக் கேட்டாள்.

என் மூளைக்குள் எதுவோ செருகியது போன்ற உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோங்கியது. கைவிரல்கள் பரபரத்தன. மூளை ஓர் அசாதாரண கட்டளையைப் பிறப்பித்தது.

நான் என்னை, என் வயதை, என் குடும்ப அந்தஸ்தை மறந்தேன். கண்களை மூடினேன். அந்த கட்டளை உக்கிரமடைந்தது. அடுத்து ஒரே பாய்ச்சலில் தம்பிப்பிள்ளை மீது பாய்ந்தேன். அந்த வேகத்தில் அவன் வயிற்றில் இரண்டு குத்துக்களை விட்டேன். இதை அவன் சற்றேனும் எதிர்பார்க்கவில்லை. நிலை குலைந்து விட்டான். இன்னொரு குத்து.

"அய்யோ அம்மா" என்று அலறியபடி அங்கிருந்து ஓடினான்.

"கொலை, கொலை" என்று யாரோ கத்துவது கேட்டது.

தம்பிப்பிள்ளையைத் தொடர்ந்து பருபதபத்தினி அங்கிருந்து ஓடினாள். சொற்ப வேளைக்குள் மற்றப் பெண்பிள்ளைகளும் அங்கிருந்து மறைந்தனர்.

தர்மபத்தினி மாத்திரம் எஞ்சி நின்றாள். அவளை கர்ணகடூரமாக நோக்கினேன். அவளின் விழிகளின் கீழே இருந்த நரம்புகள் துடித்தன. இதழ்கள் 'டைப்' அடித்தன. கைவிரல்கள் மேளம் தட்டத் தயாராகின.

"அய்யோ, அப்படிப் பார்க்காதேங்கோ. இந்த வீட்டில நீங்க தான் உசத்தியான ஆள், அதி சிறப்பான மனுஷன், அதிமேதாவி, அசகாயசூரன்" என்று வார்த்தைகளை அடுக்கிய தர்மபத்தினி மெல்ல அங்கிருந்து நழுவினாள்.

"பார்த்தியோடா என்ர ஒரே ஒரு தாக்குதல் எத்தனை மாற்றத்தை உண்டு பண்ணி இருக்குது. அடியைப் போல அண்ணன், தம்பி உதவாதடா" என்று சங்கீதமணியைப் பார்த்து கூறி விட்டு, குறைச் சுருட்டை வெளியே எறிந்தேன்.

"இடைக்கிடை இப்படி தாக்குதல் நடத்தினால் தான் இந்த வீடு உருப்படும்" என்று சொல்லிச் சிரித்தான் சங்கீதமணி.

## (13)

'பிளாஸ்ரிக்' கதிரையில் அமர்ந்திருந்த வண்ணம் காரியாலயத்தில் இருந்து கொண்டு வந்த ஆங்கில, தமிழ் வாராந்த செய்திப் பத்திரிகைகளை அலசி ஆராய்ந்து கொண்டிருந்த போது, சங்கீதமணி என் முன்னால் வந்து நின்றான். சில வினாடிகள் வரை என்னைப் பார்த்தவன், பல தடவைகள் தலையைச் சொரிந்த பின் பேசினான்.

"அப்பா, ஆயிரத்தி தொள்ளாயிரத்தி நாற்பத்தெட்டாம் ஆண்டுக்கு பிறகு இலங்கையில நடந்த முக்கியமான சம்பவம் ஒண்டைச் சொல்லுங்கோ."

"உன்ர அம்மாவை நான் கலியாணம் முடிச்சது ஒரு முக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவம் தானே?" என அகசியமாகக் கேட்டேன்.

"அது முக்கியமான சம்பவம் இல்ல. அம்மா தூக்குக் கயிற்றுக்குப் பதிலாக உங்கட தாலிக் கயிற்றுக்கு தலை குடுத்த துக்கமான சம்பவம்."

"டேய் மோட்டு மடையா, இப்படியோடா அப்பாவோட கதைக்கிறது" என்று கேட்டு 'நைஸாக' அவன் தலையில் ஒரு குட்டு வைத்தேன்.

அவன் அதையிட்டு கவலைப்படாமல் பேச்சைத் தொடர்ந்தான்.

"அப்பா, நீங்க சொன்ன உப்பு, புளி இல்லாத கதைக்கு அப்படித் தானே கதைக்கிறது? பெரிய ஆட்கள் பெரிய ஆட்கள் மாதிரி நடக்காவிட்டால், சின்ன ஆட்கள் பெரிய ஆட்கள் மாதிரி நடக்கத்தானே



வேணும்" என்று எதையோ மனதில் வைத்தபடி பேசினான்.

"டேய், ஆயிரத்தி தொள்ளாயிரத்தி நாற்பத்தெட்டாம் ஆண்டுக்குப் பிறகு தான் எங்கடை நாட்டுக்கு சுதந்திரம் கிடைச்சுது. அது முக்கிய சமாச்சாரம் தானே?"

"அப்பா சுதந்திரம் எண்டால் என்ன?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ என்னை மடக்கும் வகையில் அவன் கேள்விகளைத் தயார் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறான் என்று எனக்குப் புரிந்தது. எனவே, புத்தி சாதுரியத்துடன் பதில் கூறி தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியவனாக, "டேய், தெரியாத ஒண்டை என்னற்ற கேட்காதை. சுதந்திரம் எண்டால் 'இண்டிபெண்டன்ற்' எண்டு மட்டும் தான் எனக்குத் தெரியும்" என்றேன்.

"கடவுளைக் காணாமல், கடவுள் எண்டால் என்னெண்டு தெரியாமல் ஏன் கடவுளை கும்பிடுறீங்க?" என அடுத்த கேள்வியைத் தொடுத்தான்.

"கடவுள் ஒரு சக்தி. அந்த சக்தியைக் காணத் தேவையில்லை. அதை உணர்ந்தாலே போதும்" என்று வார்த்தைகளை மென்று விழுங்கினேன்.

சங்கீதமணி கைகொட்டிச் சிரித்தான். "அப்படி எண்டால் நீங்க எப்பவாவது சுதந்திரத்தை உணர்ந்து இருக்கிறீங்களா?"

"உன்ர அம்மாவை கட்டின பிறகு சுதந்திரம் எண்ட சொல்லை நான் துப்பரவாக மறந்து விட்டன்."

இப்படி நான் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது தர்மபத்தினி வந்தாள். "சுதந்திரத்தைப் பற்றியோ கதைச்சுக் கொண்டிருந்தியள்?"

"ஓமோம்."

"எங்கட சுதந்திரநாதன் கனடாவில போய் இறங்கி விட்டான் எண்டு கேள்விப்பட்டன். அதைப் பற்றியோ கதைக்கிறியள்?"

"இடியே, அப்ப எங்கட சுதந்திரம் இப்ப கனடாவிலையோ இருக்குது?"

"ஓமப்பா. இப்ப ஒரு வருசத்திற்கு முந்தித் தான் இஞ்ச இருந்து 'பிளேன்' ஏறினவனாம். ஆனால், போனகிழமை தான் கனடா போய்ச் சேர்ந்தவனாம். "

"ஏன் போற வழியில அமெரிக்காவுக்கு போய் கோதுமை பயிர்ச் செய்கை செய்தவனோ?"

"இல்ல. இஞ்ச இருந்து நேரே சிங்கப்பூருக்கு போய் இருக்கிறான். அங்கை ஏமலாந்திக் கொண்டிருக்கையில பொலிஸ்காரங்க அவனைப் பிடிச்சு கூட்டுக்குள்ள அடைச்சுப் போட்டாங்களாம். பேந்து ஒரு மாதிரி அங்கை இருந்தவங்களுக்கு 'சம்திங்' குடுத்து தப்பி ரஷ்யாவுக்கு போனானாம்."

"ஏன் 'ரஷ்யா வித் லவ்' பார்க்கவோ?"

"இல்ல, ஏஜன்ஸிகாரன் அந்த 'ரூட்'டைத்தான் போட்டிருக்கிறானாம்."

"ஆர் ஏஜன்ஸிக்காரனாம்?"

"ஏகாம்பரமாம். "

"அட எங்கட பஸ்கார ஏகாம்பரம். கொடிகாமம் 'போர்ட்' போட்டு விட்டு கீரிமலைக்கு 'ரூட்' மாத்தி ஓடுறவன் தானே? இன்னும் 'ரூட்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திர புத்தி அவனுக்கு மாற இல்லயாக்கும். ஊம், பேந்து.... பேந்து...."

"ரஷ்யாவில இவன் ஒரு வருசம் இருந்திருக்கிறானாம். இவனை ஒரு வீட்டில கொண்டு போய் ஏகாம்பரம் விட அந்த வீட்டில எங்கட பெடி, பெட்டையள் எண்டு ஊருப்பட்டதுகள் நிண்டுதுகளாம்."

"எல்லாரும் கனடா 'கேஸோ'?"

"ஓமோம். கனடாவில இருக்கிற புருஷன்மாரோட சேர்றதுக்கு எண்டு கனக்க பெட்டையள் இருந்துதுகளாம். கொஞ்சப் பெட்டையள் அங்கை இருந்த பொடியங்களோட கொளுவிக் கொண்டு குடும்பமும் நடத்திச்சுதுகளாம். "

"அதுவும் நல்லது தானே?"

"என்ன மாதிரி?"

"எங்கட கலை, கலாச்சாரங்கள், பாரம்பரியங்கள் எண்டு எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சு விட்டு போற ஆட்கள் இப்படித்தானே நடப்பினம்?"

"எல்லாரையும் ஒரு மாதிரி எடை போடாதேங்கோ."

"நான் பொதுவாகத்தான் சொல்லுறன்."

"பேந்து நடந்ததை சொல்லுறதோ?"

"சொல்லன்."

"அந்த வீட்டில சுதந்திரம் ஆறு மாசம் இருந்தானாம். அதுக்குப் பிறகு கடவுள் கண்ணைத் திறக்க, அவன் கனடாவுக்கு போயிட்டானாம்."

"கனடாவுக்கு போற ஆட்களைத்தான் கடவுள் கண்ணைத் திறந்து பார்க்கிறார். எங்களை எல்லாம் நெற்றிக் கண்ணால தான் பார்க்கிறார்" என்றான் சங்கீதமணி.

"இஞ்சருங்கோ, இப்படியே எங்கட சனம் எல்லாம் ஒவ்வொரு நாட்டுக்கும் படை எடுத்தால் மிஞ்சி இருக்கிற எங்கட கதி என்னவாகும்?" என்று தர்மபத்தினி ஏதோ நினைப்பில் கேட்டாள்.

"எங்களுக்கு ஒண்டும் நடக்காது. ஊரில இருக்கிற காணி, பூமி எல்லாம் மிஞ்சி இருக்கிற ஆட்களுக்கு கிடைக்கும். ஒரு அங்குல காணிக்காக விதானையார், பொலிஸ், 'கோடு' எண்டு போய் காசைச் செலவளிக்கத் தேவையில்ல. நல்லூர் திருவிழா காலத்தில கூட சாமி கும்பிட இயலுமாக இருக்கும். போற போக்கைப் பார்த்தால் ஊரில இருக்கிற கிணறு எல்லாம் வற்றப் போகுது. ஆட்கள் குறைஞ்சால் தண்ணி குறைவாக கிடைச்சாலும், ஒரு மாதிரி சமாளிக்கலாம்."

"அப்படியெண்டால் ஊரில இருக்கிற ஆட்கள் எல்லாம் வேற திசைகளுக்கு போனால் எங்களுக்கு நல்ல காலம் பிறக்கும் எண்டு சொல்லுறியளோ?"

"ஓமடி. ஊர் ரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் எண்ட மாதிரியான நிலையில தான் நாங்க இப்ப இருக்கிறம். 'ஓவசியர்' தம்பிராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரம் அவசரமாக அரை விலையில தன்ர வீட்டை விற்றதால தானே சுருட்டு கூட குடிக்க வக்கு இல்லாத வேலாயுதம் அந்த வீட்டை வாங்கினான்? ஒரு அங்குலத்துக்கும், இரண்டு அங்குலத்துக்கும் எண்டு வழக்கு வைச்சு தன்ர காணியைப் பெருப்பிச்ச பெரியதம்பி காணியை கோயிலுக்கு எழுதிப் போட்டு ஒஸ்திரேலியாவுக்கு போனதால தானே அந்தக் காணியில அகதிகளுக்கு கொட்டில் கட்டிக் குடுக்க முடிஞ்சது?"

"அப்படியெண்டால் இப்ப இருக்கிற பிரச்சனை தீரக் கூடாது. அதால ஊரில இருக்கிற ஆட்கள் எல்லாம் பற்பல தேசாந்தரங்களுக்கும் போக வேணும் எண்டு விரும்புறியளோ?"

"ஓமோம். அதில என்ன பிழை? அப்பத்தான் இஞ்ச இருக்கிற ஒவ்வொருத்தனும் வாழ்க்கையில முன்னேறுவான்."

"அப்ப நான் உங்களை விட்டிட்டுப் போனால் நீங்களும் வாழ்க்கையில முன்னேறுவீங்களோ? "

பதில் கூறுவதற்கு நான் திக்குமுக்காடியதைக் கண்டு, சங்கீதமணி நக்கலாகச் சிரித்தான்.

# (14)

ஒரு சனிக்கிழமை

இன்று ஒரு இடமும் போகாமல் நிம்மதியாக வீட்டில் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த போது, எனது பிள்ளைகளில் பலர் என்னைச் சூழ்ந்து கோல்பேஸ் கடற்கரைக்கு போக வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

"சரி, கூட்டிக் கொண்டு போறன். அங்கை போனாப் போல 'ஐஸ் கிரீம்' வேணும், கடலை வேணும், பலூன் வேணும் எண்டு என்னை நச்சரிக்கக்கூடாது" என்று ஒரு நிபந்தனை விதித்த போது, எல்லோரும் "ஓமோம்" என்று கத்தியபடி தலையாட்டினார்கள்.

மாலை, சூரியன் கடலுள் சங்கமமாகும் வேளை, நானும், தர்மபத்தினியும், பத்துப் பிள்ளைகளும் 'கோல்பேஸுக்குப்' பயணமானோம். மூத்த மகள் பருபதபத்தினியும், 'சன்–இன்–லோ' தம்பிப்பிள்ளையும் தாம் கோயிலுக்குப் போவதாகக் கூறி எங்களுடன் வர மறுப்புத் தெரிவித்தனர்.

பஸ்சில் ஏறும் போதே 'கண்டக்டர்' என்னை ஒரு தினுசாகப் பார்த்தான். ஆறு முழு 'டிக்கெட்களும்', ஆறு அரை 'டிக்கெட்களும்' கேட்ட போது, அவன் எனது 'சேர்ட் கொலரில்' இருந்த கிளிசலையும், காற் சட்டையில் அங்கும், இங்கும் கிடந்த ஒட்டைகளையும் பார்த்து விட்டு நான்கு முழு 'டிக்கெட்'களுக்கும், நான்கு அரை 'டிக்கெட்'களுக்கும் மட்டுமே பணம் எடுத்தான். பஸ்சில் கூட 'டிஸ்கவுண்ற்' தருவார்கள் என்றதை நான் அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அறிந்தேன்.

இதை அவதானித்த சங்கீதமணி "அப்பா, எங்கட ஊரில எண்டால் கைப்பைக்கும், சாப்பாட்டுப் 'பார்சலுக்கும்' பஸ்காரங்கள் 'டிக்கெட்' எடுக்கிறவங்கள்" என்று குசுகுசுத்தான்.

மனதினுள் மெல்லச் சிரித்தபடி, ஒன்றும் கூறாமல் நின்றேன்.

டிரைவர் வேகமாக பஸ்சைச் செலுத்தினான்.

"அறுவான் எங்களை எல்லாம் பரலோகம் கொண்டு போகப் போறானோ?" என தர்மபத்தினி முணுமுணுத்தாள்.

"பரலோகம் போனால் நல்லது தானே? கொழும்பு என்ன சொர்க்கபுரியோ?" என்று கேலியாகக் கேட்டேன்.

தர்மபத்தினியின் முகம் தொட்டாற் சுருங்கி போலாகியது.

'கோல்பேஸ்' கடற்கரையை அடைந்தோம்.

"ஷா! நல்ல வடிவான கடற்கரை. எங்கடை ஊரில அலைகள் அடிக்கிறதில்ல. இஞ்ச நல்லா அடிக்குது" என்று நான்காவது மகள் தமிழ்மொழியழகி சொன்னாள்.

"எங்கட கடல் அலைகள் அடிக்காட்டாலும் நல்ல ஆழமானது" என்றான் சங்கீதமணி.

"ஆட்களைப் போல" தர்மபத்தினி 'டக்'கென்று சொன்னாள்.

எனக்கு சிரிப்பு வந்து விட்டது. சிரித்து விட்டேன்.

"ஏன் சிரிக்கிறீங்க?" தர்மபத்தினி 'வெடுக்'கென்று கேட்டாள்.

"எங்கட ஆட்கள் ஆழமான ஆட்கள் தான். ஆனால், சில வேளையில ஆழம் தெரியாமல் காலை விட்டிட்டு அந்தரப்படுவினம்."

"விளக்கமாகச் சொல்லுங்களேன்."

"அது உனக்கு எண்டைக்கும் விளங்காது. எண்டபடியால விளக்கமாக சொல்லி பிரயோசனம் இல்லை."

தர்மபத்தினியின் முகம் கோணலாகி விட்டுது. வீடு என்றால் வாய்ச்சண்டையில் இறங்கி இருப்பாள். பொது இடம் என்றபடியால் தப்பினேன்.

கடற்கரையில் சிறிது தூரம் காலாற நடந்தோம். அங்கிருந்தவர்களில் பலரும் எங்களைத் தான் வேடிக்கை பார்த்தார்கள்.

"மச்சான், உது ஒரு குடும்பமோ? இல்லாட்டால் இரண்டோ?" ஒரு வாலிபன் இன்னொரு வாலிபனிடம் கேட்பது எனக்கு கேட்டது.

"ஓண்டு தான். பத்துப் பிள்ளையளுக்கும் ஒரே முகவெட்டுத் தான். மனுசன் பத்துப் பிள்ளையளைப் பெத்தாலும் என்ன தெம்பா நடக்கிறார் எண்டு பார்த்தியோ?" இரண்டாமவன் கேட்டான்.

"மனுசிக்காரியைப் பார்த்தியோ? பத்துப் பெத்திருந்தாலும் இன்னும் ஐஞ்சு பெறுவதற்கு தயார் எண்ட மாதிரி அல்லோ போகிறா."

பெருமை மனதைச் சுற்றி வளைத்த நிலையில் நடந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது சம்பாஷணை தர்மத்தினிக்கு கேட்கவில்லை. கேட்டிருந்தால் நெஞ்சை நிமிர்த்தி இருப்பாள்.

'ஐஸ்கிரீம்'காரர்களை, கடலைக்காரர்களை, பலூன்காரர்களை கடந்து சென்ற போதும், ஒரு பிள்ளைகூட, ஆறு வயது ஒப்பிலாமணி உட்பட தமது புலன்களை அவர்கள் மீது செலுத்தவில்லை.

"அப்பா, எங்கட உணர்ச்சி எல்லாம் மரத்து விட்டுது. 'சோப்'பைக் கண்டு கூட நாங்கள் ஏங்கின நாள் இருந்துது. 'ரோட்டால' போகக்கில ரேடியோவில பாட்டு படிச்சால் அதைக் கேட்கிறதுக்காகக் கூட நிற்கிறனாங்க. அது ஒரு காலம். அதுக்குப் பிறகு நாங்க எங்கட உணர்ச்சியை கட்டுப்படுத்தி இயந்திரமாக வாழ்ந்தம்" என்று வழியில் சொன்னான் சங்கீதமணி.

அவன் வார்த்தைகள் என் இதயத்தை உதைத்தன.

குடைக் காதலர்களைக் கண்டு சில பிள்ளைகள் அதிசயிப்பதை அவர்களின் பார்வைகள் மூலம் புரிந்து கொண்டேன். தர்மபத்தினியும் குடைக் காதலர்களைக் கண்டு விட்டாள்.

"இவையளுக்கு காதலிக்க வேறை இடம் இல்லயோ? குஞ்சு, குருமன் வாற இடங்களில கொஞ்சுறதும். கட்டிப்பிடிக்கிறதும்.... சே! நாங்கள் பொது இடத்தில இப்படி நடந்திருக்கிறமோ? யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் 'பார்க்'கில நானும், நீங்களும் இருக்கக்கில நீங்கள் எப்பவாவது என்ர கையை பிடிச்சு இருக்கிறியளோ?"

"அது அந்தக் காலமடி. இப்ப காலம் மாறிப் போச்சுது. இது 'கொம்பியூட்டர்' யுகம். அந்தக் காலத்தில சிவராத்திரி அண்டைக்கு நாங்கள் கோயிலுக்கு போய் கதாகாலாட்சேபம், சொற்பொழிவு, வில்லுப்பாட்டு கேட்டுத் தானே நித்திரை முழிச்சனாங்கள்? இப்ப அப்படியோ? 'வீடியோ'வில இரண்டு, மூண்டு சினிமாப் படம் பார்த்துத்தானே நித்திரை முழிக்கிறனாங்கள்? காலத்திற்கு ஏற்ற மாதிரி எங்களை 'அட்ஜெஸ்ட்' பண்ண வேணும்."

"காலம் மாறிப் போச்சுதெண்டால் நானும் இப்ப சில கிழட்டுப் பொம்பளையள் கட்டைச் சட்டை போடுற மாதிரி போடட்டோ? "

"போடு. இப்போதைக்கு நித்திரை கொள்ளக்கில மட்டும் போடு."

தர்மபத்தினி என்னை சினத்துடன் பார்த்து, "கண்டறியாத பகிடிக் கதை" என்றபடி தலையைத் திருப்பினாள்.

அப்பொழுது, "அப்பா, அங்கை ஒரு கப்பல் போகுது" என்று கடலில் போன கப்பல் ஒன்றை மூன்றாவது மகள் சௌந்தர்யவல்லி காட்டினாள்.

அவள் காட்டிய திசையில் ஒரு கப்பல் போவது தெரிந்தது.

"அப்பா, எனக்கு கப்பல்ல போக வேணும் எண்டு ஒரே ஆசை." சங்கீதமணி வாஞ்சையுடன் சொன்னான்.

"இப்போதைக்கு அந்தஆசையை விட்டு விடு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் அவன் ஒன்றுமே கேட்கவில்லை.

நடந்தோம்.... நடந்தோம்...

இப்பொழுது கப்பல் எங்களை அண்மித்து வருவது போல இருந்தது. எங்களுக்கும், கப்பலுக்கும் இடையில் நூறு யார் தூரம் தான் இருந்தது. கப்பலில் இருந்த சில மாலுமிகள் எங்களைப் பார்த்து கையசைத்தார்கள்.

"அப்பா, அவங்கள் எங்களைக் கூப்பிடுறாங்க போல" என்றாள் சௌந்தர்யவல்லி.

"கையை காட்டுறாங்க. போன பிறப்பில எங்கட தம்பிமாராக இருந்திருப்பாங்களாக்கும்" என சற்று 'சீரியஸாகச்' சொன்னாள் தர்மபத்தினி.

"அப்படியெண்டால் நீ எனக்கு தர வேண்டிய மீதி சீதனக் காசைக் கேட்டுப் பாரன்" என்றேன்.

தர்மபத்தினி நான் கூறியதைக் காதில் போடாமல், கப்பலை வெகு ரசிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அப்பா, இந்தக் கப்பல் எங்க போகுது?" சங்கீதமணி கேட்டான்.

"ஒஸ்திரேலியாவுக்காக்கும்."

"அப்ப எங்களையும் ஏற்றிக் கொண்டு போகச் சொல்லுவமோ?" எனக் கேட்ட சங்கீதமணி, நான் பதில் அளிக்கும் முன் 'டபா' ரென கடலுள் பாய்ந்து கப்பலை நோக்கி நீந்தினான்.

இதை நான் துளியளவும் எதிர்பார்க்கவில்லை. "டேய், டேய்...." எனக் கத்தினேன்.

அவன் என் கத்தலை அசட்டை செய்தவனாக நீந்தினான். எனது ஏனைய பிள்ளைகள் முதலை வாயான நிலையில் கடலையே பார்த்தபடி நின்றனர். தர்மபத்தினி ஒப்பாரி வைக்குமாப் போல குழறினாள்.

"இடியே, அவனுக்கு நீந்தத் தெரியுமோ?" ஏதோ நினைவு வந்தவனாகக் கேட்டேன்.

"ஓமோம். ஊர் கிணற்றுக்குள்ள நாலைஞ்சு தரம் விழுந்தாப் போல நீந்தப் பழகிவிட்டான்" என்று தர்மபத்தினி அழுகைக்கிடையே சொன்னாள்.

இதனிடையே அங்கு குழுமிய மக்கள் ஆரவாரம் செய்து, சங்கீதமணியை உற்சாக மூட்டினார்கள்.

சங்கீதமணி கப்பலை அடைந்தான். மாலுமிகள் ஒரு கயிற்று ஏணியை கீழே விட்டு அவனைக் கப்பலில் ஏற்றினார்கள்.

"அய்யோ, கப்பல்ல ஏறிட்டான்."

"அதுக்கென்னடி? 'பாஸ்போட்' இல்லாமல், 'விசா' இல்லாமல் ஒஸ்திரேலியாவுக்கு போகப் போறான். அவன் எங்களை எல்லாம் 'ஸ்பொன்ஸர்' செய்து கூப்பிடுவான்" என்று குதூகலித்தேன்.

கப்பல் எங்கள் கண்களில் இருந்து மறையும் வரை அதையே பார்த்தபடி இருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு முழுவதும் தர்மபத்தினி கண்ணீர் சிந்தினாள்.

நள்ளிரவு போல் முன் கதவில் ஒரு 'டொக், டொக்' சத்தம் பதட்டத்துடன், பதறிய நிலையில் கதவைத் திறந்தேன்.

வெளியே காக்கிச் சட்டைக்காரர். 'நம்பர் பிளேட்' இல்லாத 'வான்' நிற்கிறதா என அறிய அவசரத்துடன் வெளியே பார்வையை எறிந்தேன். 'நம்பர் பிளேட்டுடன்' ஜீப் ஒன்று நின்றது. மனதில் மெல்லிய சந்தோஷம்.

"நீங்க தானே சங்கீதமணியின்ர அப்பா?"என்று தமிழ் தெரிந்த பொலிஸ்காரன் ஒருவன் வினயமாகக் கேட்டான்.

"அப்படித்தான் நினைக்கிறன்" என வழமையான பாணியில் சொன்னேன்.

"உங்கட மகனை நாங்க 'அரஸ்ட்' செய்திருக்கிறம். "

"ஏன், எதற்கு, என்னத்துக்கு" தர்மபத்தினி விரைவுடன் கேட்டாள்.

"நோனா, உங்கட மகன் ஒஸ்திரேலியாவுக்கு போன கப்பல்ல ஏறிட்டான். அந்தக் கப்பல்ல ஏறின குற்றத்திற்காகத்தான் 'அரஸ்ட்' பண்ணி இருக்கிறம்."

இதைக்கேட்டு தர்மபத்தினியின் முகம் வெளுறிவிட்டது. கண்களை இமைக்க மறந்தவளாக பொலிஸ்காரர்களைப் பார்த்தபடி நின்றாள்.

"ஆனால் 'நோனா', உங்கட மகனை நாளைக்கு விட்டு விடுவம். ஏனெண்டால் கப்பல்ல ஏறின உங்கட மகன் இந்தியாவில இருந்து கழுதைகள் ஒஸ்திரேலியாவுக்கு கடத்தப்படுறதை கண்டு பிடிச்சு எங்களுக்கு 'வோக்கி டோக்கியில' அறிவிச்சு இருக்கிறான். நாங்க உடனே போய் கப்பலை சுற்றி வளைச்சு கழுதை கடத்துறவங்களை பிடிச்சு விட்டம்."

"கழுதையை கப்பல்ல கொண்டு போறது சட்ட விரோதமான செயலோ?" நான் கேட்டேன்.

"இல்ல. ஆனால், கழுதைக்குள்ள போதைப் பொருளை ஒளிச்சு வைச்சிருந்தாங்களாம். "

"ஓ!"

என் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அது ஆனந்தக் கண்ணீர் தான்.

"சங்கீதமணி உண்மையில ஒரு இமாலய சாதனைதான் புரிந்திருக்கிறான்" என்று பொலிஸ்காரர்கள் எனக்கு 'சல்யூட்' அடித்து விட்டுப் போன பின் சொன்னாள் தர்மபத்தினி.

"ஏன்ரி இமாலய சாதனை எண்டு சொல்லுறாய்? சிவனொளிபாத சாதனை எண்டு சொல்லன். உங்களுக்கெல்லாம் பிறநாட்டு சாமான்ல தான் மோகம் எண்டால் மலையிலையும் மோகம் தான்" என்றேன்.

தர்மபத்தினி ஒன்றும் கூறவில்லை. விடியும் வரை இன்பக் கனவுகளைக் கண்டபடி படுத்திருப்பாள் என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

# (15)

"சமாதானம், சமாதானம்...... சமாதானம். எங்கும் சமாதானம். எதிலும் சமாதானம்...." என்று "நாராயணா..... நாராயணா....." என்ற நாரதர் பாணியில் கூறியபடி சங்கீதமணி என்னிடம் வந்தான்.

ஒரு வாரமாக குளிக்காமல் இருந்தால் மனநிலை எப்படி இருக்குமோ, அப்படியானதொரு நிலையில் விளங்கிய எனக்கு அவனது பேச்சு எரிச்சலைத் தாராளமாக வரவழைத்தது. "என்னடா 'சமாதானம், சமாதானம்' எண்டு கத்துறாய்? எங்கடா சமாதானம் ஏற்பட்டிருக்குது" என அவசரத்துடனும், அகசியத்துடனும், அகநகையுடனும் கேட்டேன்.

"அப்பா, நீங்கள் 'பேப்பர்' வாசிக்கிறதில்லயா? அப்படி வாசிச்சிருந்தால் இப்படி முட்டாள் போல கேள்வி கேட்டிருக்க மாட்டியள்" என சற்று கர்ணகடூரமாகச் சொன்னான் சங்கீதமணி.

என் முகத்தில் அசடு நிறைய வழிந்திருக்க வேண்டும். எல்லாமே சில வினாடிகள் தான். சற்று பின்வாங்கி இருந்த மன எழுச்சி திடீரென சீறியது.

"டேய், சமாதானம் எண்ட சொல்லைப் பார்த்து, கேட்டு பேதி குடிச்சவன்ர நிலைதான் எனக்கு ஏற்படுது. முந்தி எல்லாம் பேப்பரில சமாதானம் எண்ட சொல்லைக் கண்டாலே அந்தப் 'பேப்பரை' காசு குடுத்து வாங்கி கொண்டு போய் வாசிப்பன். இப்படி எத்தனை சமாதான செய்தியை வாசித்து நான் மோசம் போயிருப்பன்? அதால இப்ப 'பேப்பர்' வாசிக்கக்கில சமாதானம் எண்ட சொல்லைப் பார்த்தாலே அந்த 'பேப்பரை' வாங்காமல் விட்டு விடுவன்" என்று நீட்டி முழங்கினேன்.

சங்கீதமணி 'சுவிங்க' சிரிப்பொன்றை தாராளத்துடன் வெளிப்படுத்தினான். " அப்பா, எங்கட சீனி அப்பு முந்தி பேச்சுவார்த்தை எண்டு 'பேப்பரில' செய்தி போட்டிருந்தால் உடன கோயிலுக்கு போய் அர்ச்சனை செய்து விட்டு அந்த செய்தியை சந்தியில நிண்டு விமர்சனம் செய்து விட்டுத் தான் வீட்டுக்குப் போவார். அந்தளவுக்கு பேச்சுவார்த்தையில அவருக்கு நம்பிக்கை இருந்துது. காலப் போக்கில பேச்சுவார்த்தை எண்ட சொல்லில அவருக்கு அவநம்பிக்கை ஏற்பட்டு விட்டுது. கடைசியில பேச்சுவார்த்தை எண்டு பேப்பரில கொட்டை எழுத்தில செய்தி கிடந்தால் அந்த 'பேப்பரை' வாசிப்பதையே அவர் விட்டுட்டார். அந்த நிலையில தான் நீங்களும் இருக்கிறீங்க போல" எனச் சிரிப்பை முழுங்கியபடி சங்கீதமணி கேட்டான்.

"மெய்யே, எங்க சமாதானம் ஏற்பட்டு இருக்குதாம்?" எனக் கேள்வியை எழுப்பியபடி தர்மபத்தினி வந்தாள்.

"இடியே, நானும், நீயும் கலியாணம் முடிச்ச பிறகு எத்தனை தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டை பிடிச்சிருப்பம். அதால எத்தனை பேர் எங்களுக்குள்ள சமாதானம் செய்யுறதுக்காக எங்கட வீட்டுக்கு வந்திருப்பினம் எண்டு உனக்குக் தெரியுமோ?"



"உங்களை கலியாணம் முடிச்ச பிறகு நீங்க என்னோட சண்டை போடாத நாள் இருக்குதோ?" என்று விஷமமாகக் கேட்டாள் தர்மபத்தினி.

"அப்பா, நீங்களும், அம்மாவும் சமாதானமாக வாழ்ந்தால் என்ன? 'அட்லீஸ்ட்' எங்களுக்காவது சண்டை போடுறதை நிற்பாட்டினால் என்ன?" சங்கீதமணி கேட்டான்.

"டேய், சண்டை பிடிக்கிறதும் ஒரு 'திரில்' தான். "

"என்ன மாதிரி?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சண்டை பிடிச்சால் அது கடைசியில ஊடலில தான் முடியும். பேந்து கூடல் எண்ட ஒண்டு இருக்குது எண்டு உனக்குத் தெரியாதோ?"

"ஊடலுக்கு பின் கூடலில வெற்றி பெற்ற ஆளுக்கு சுவையாகத்தான் இருக்கும். ஆனால், தோல்வி அடைஞ்ச ஆளுக்கு மனநிலை எப்படி இருக்கும்?"

"விட்டுக் குடுத்து வாழ வேணும் எண்ட பக்குவம் ஏற்படும்."

"சின்ன பிள்ளையளோட என்ன கதைக்கிறது எண்டு உங்களுக்குத் தெரியாதோ" என தர்மபத்தினி கோபாவேசத்துடன் கத்தினாள்.

"என்னடி சின்னப்பிள்ளை? இந்தக் காலத்தில பன்னிரண்டு, பதிமூண்டு வயசுப் பொடியள் செய்யுறதை முப்பத்திரண்டு, முப்பத்திமூண்டு வயசுக்காரங்களால கூட செய்ய ஏலாமல் இருக்குது. சங்கீதமணிக்கு இப்ப மார்க்கண்டேய வயசு எண்டு உனக்குத் தெரியாதோ? அப்ப அவன் சின்னப் பொடியனோ?"

தர்மபத்தினி எதையோ முணுமுணுத்தாள்.

அப்பொழுது 'சன்–இன்–லோ' தம்பிப்பிள்ளை அன்றைய தினசரியுடன் வந்தான்.

"மாமா, இண்டைய பேப்பரைப் பார்த்தனீங்களோ? நல்ல ஒரு செய்தி போட்டிருக்காங்கள்" என்ற பீடிகையுடன் பேச்சை ஆரம்பித்தான்.

"என்னடா நல்ல செய்தி?"

"மீனைப் பதமாக்கி கருவாடு செய்யுறதைப் போல மரக்கறிகள பதமாக்கி கருவாடு செய்யப் போறாங்களாம்."

"இதுவோடா நல்ல செய்தி? இதைச் சொல்லவோ இஞ்ச வந்து எங்கட பேச்சைக் குழப்பினனி? இந்த மாதிரி பேச்சைக் குழப்பிறது பிழையான விசயம் எண்டு உனக்குத் தெரியாதோ?"

"தெரியும்..... தெரியும்..... மாமா, நான் சொன்ன செய்தி நல்லது தானே? மாமிசத்திற்கு பதிலாக மரக்கறியில கருவாடு செய்யுறது கூடாத செய்தியோ?"

"ஏதாவது சமாதான செய்தி சொல்லுவாய் எண்டு நினைச்சன். நீ கருவாட்டு செய்தி அல்லோ சொல்லுறாய்."

"சமாதானச் செய்தியும் இதில இருக்குது."

"அப்ப அதைச் சொல்லன். கன நாளா சமாதானச் செய்தி கேட்க இல்ல."

"எங்கட ஊரிக்காட்டு உலகநாதபிள்ளை மட்ராசில சமாதானம் எண்ட பெயரில ஒரு படம் தயாரிக்கப் போறாராம். பெரும்பாலும் குஷ்புவும், குள்ளமணியும் ஜோடியாக நடிக்கலாமாம். "

"சிலுக்கு சுமிதா 'அன்ரி'யும் நடிக்கிறாவோ?" அங்கு வந்த திருகோணமாமணி கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOHA
JPL

"இல்லையாம். ஆனால், சிலோனில இருந்து ஒரு கவர்ச்சி நடிகையை வரவழைச்சு கவர்ச்சி 'டான்ஸ்' காட்சி எடுக்கப் போயினமாம்."

தம்பிப்பிள்ளையை உஷ்ணத்துடன் நோக்கினேன். "டேய் மொக்கா, இது வோடா சமாதானச் செய்தி?"

"ஓமாக்கும், இல்லையாக்கும்" என்று தடம் புரண்டவன், பத்திரிகையை எடுத்து அதை அவசரம், அவசரமாக மேய்ந்தான். "மாமா, இன்னொரு சமாதானச் செய்தி."

"என்ன?"

"இனி சமாதானத்திற்கு புறாவைப் பறக்கவிடுறதுக்குப் பதிலாக கிளியைப் பறக்க விடுறது பற்றி ஆராய்கினமாம்."

"ஏன் புறாவுக்கு தட்டுப்பாடு வந்து விட்டதோ?"

"இல்ல மாமா. சமாதானத்திற்கு போற பறவை கொஞ்சமாவது கதைக்கக் கூடியதாக இருக்க வேணுமாம்."

"உன்ர மாமி நித்திரையில புலம்புற மாதிரியோ?"

தம்பிப்பிள்ளை சங்கோஜப் புன்னகை ஒன்றை தாராளத்துடன் வெளியிட்டான். தர்மபத்தினி என்னை கோபத்துடன் நோக்கினாள்.

"அப்ப அத்தான், எந்தப் பறவையை அனுப்பப் போயினமாம்?" சங்கீதமணி கேட்டான்.

"கொஞ்சமாவது கதைக்கிற பறவை கிளிதானே? எண்டபடியால இனி சமாதானப் பறவையாக கிளி தான் விளங்கப் போகுது."

"இஞ்சருங்கோ, அப்ப நாங்க கிளி வளர்ப்பமோ? சமாதானத்திற்கு கிளி தேவைப்படக்கில எங்கட கிளியை நல்ல விலைக்கு விற்கலாம்" என முகமலர்ச்சியுடன் ஆலோசனை கூறினாள் தர்மபத்தினி.

"நீ வளர்க்கிற கிளி தமிழ் தானே கதைக்கும்? தமிழும், சிங்களமும் கதைக்கிற கிளி தான் தேவைப்படும்."

"அப்ப நீங்க கிளியோட சிங்களத்தில கதையுங்கோவன்."

"வேலைவெட்டி இல்லாதவன் செய்யுற வேலையை எனக்குத் தராதை. எனக்கு நிறைய வேலை இருக்குது."

"அப்ப மல்காந்தி அன்ரியை கூப்பிடுவம்." சங்கீதமணி யோசனை தெரிவித்தான்

"அது நல்ல 'ஐடியா' தான்" என்று நான் சொன்னதைக் கேட்ட தர்மபத்தினி, "போடா அங்கால" என்று சொல்லி சங்கீதமணியின் முதுகில் ஒன்று வைத்தாள்.

"மருமோன் 'பேப்பரில' சமாதானம் பற்றி வேறை ஏதாவது செய்தி இருக்குதோ?" தம்பிப்பிள்ளையிடம் வினவினேன்.

"ஓம் மாமா."

"அப்ப அதை அவிழ்த்து விடு பார்ப்பம்."

"இஸ்ரேலும், பாலஸ்தீனமும் சண்டையை விட்டிட்டு சமாதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சு போட்டுதாம்."

"டேய், இந்த முக்கியமான செய்தியை வாசிக்காமல் ஏனடா விட்டேரி செய்தியை எல்லாம் சொன்னனி? "

"சமாதானச் செய்தியை எல்லாம் வாசிச்சு, வாசிச்சு எனக்கு அலுத்து விட்டுது. அதாலதான் இந்த முக்கியமான செய்தியை கடைசியாகச் சொன்னனான்."

"அப்ப நீயும் என்னைப் போல சிந்திக்கிறாய் போல."

"மெய்யே, இஞ்ச எப்ப சமாதானம் வருமாம்?" தர்மபத்தினி வாஞ்சையுடன் கேட்டாள்.

"ஏன் ஊருக்கு போற அவதி வந்து விட்டுதோ?"

"ஊருக்கு போற அவசரம் வர இல்ல. இஞ்ச இருக்கிறதை விட ஊருக்குப் போய் இருக்கலாம் போல இருக்குது."

"ஏன் இஞ்ச என்ன குறை? 'லைட்டைப்' பார்த்து அலுத்து விட்டுதோ?"

"உங்களோட இஞ்ச நிம்மதியாக இருக்கலாமோ? அங்கை எண்டால் இடைக்கிடை தான் தாக்குதல் நடக்கும். இஞ்ச ஒவ்வொரு நாளும் நடக்குது."

"ஓ! அப்படியோ? சரி இப்பவே தாக்குதலைத் தொடங்குறன்" என்றவன், தர்மபத்தினி 'குய்யோ', 'முறையோ' என்று கத்தக்கத்த அவளை நையப்புடைத்தேன்.

எமது சண்டை நள்ளிரவு வரை நீண்டது.

எம்மை சமாதானம் செய்து வைக்க எவருக்குமே துணிவு வரவில்லை. எனவே, வடக்குப் பக்கத்தில் என் தலையும், தெற்குப் பக்கத்தில் தர்மபத்தினியின் தலையும் இருக்கத்தக்கதாக 69 நிலையில் நாம் உறங்கினோம்.

# (16)

"**பை**த்தியக்கார ஆஸ்பத்திரியில பைத்தியத்துக்கு வைத்தியம் பார்க்கிற வைத்தியருக்கு பைத்தியம் பிடிச்சு, பைத்தியம் பிடிச்ச நாயைக் கடிச்சு வைத்தியம் பார்த்து நாய் குணம் அடைய, வைத்தியர் வயித்தைப் பிடிச்சு 'வள், வள்' எண்டு குலைச்சாராம்."

யாரோ என்றோ ஒருநாள் சொன்ன இந்த தறுதலைக் கூற்று திடீரென அசரீரி போல என் காதில் மோதியது. மீண்டும், மீண்டும் அந்தக் கூற்றை மனதில் போட்டு தேய்த்து எடுத்து, அலசி ஆராய்ந்தேன்.

இவ்வாறான ஒரு நிலையில் எனக்குத் தெரிந்த வைத்தியர் யாரும் தக்கி முக்கித் தவித்தார்களா என்று அலசி சிறு ஆராய்ச்சி ஒன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுள் நடத்தினேன்.

எனக்குத் தெரிந்த அளவில், எனது தர்மபத்தினியின் தூரத்து உறவுக்காரரான சித்த வைத்தியரான பரிகாரி பரமசிவம் தான் தனது கடைசிக் காலத்தில் பைத்தியம் பிடித்து சுடலையில் இராப்போசனத்தை விழுங்கினார். வீட்டு முற்றத்தில் மலம் கழித்தார். பட்டு வேட்டியுடன் சந்தைக்குச் சென்றார். சாரத்துடன் கலியாண வீட்டில் ஆஜரானார். பாம்புப் புற்றுக்குள் கையை விட்டு பல்லியைத் தேடினார். கனவு தெளிவாகத் தெரிய வேண்டும் என்பதற்காக மூக்குக் கண்ணாடியுடன் உறங்கினார்.

பரமசிவத்தார் நிரந்தரமாக கண்களை மூடிய போது, அருகில் என் தர்மபத்தினி தான் இருந்தாளாம். அவளின் கையை அவர் பிடித்தபடி இருக்க, ஆவி பிரிந்ததாம்.

"இடியே, உன்ர பரிகாரி குஞ்சியப்புன்ர கையை நீ பிடிச்சிருக்கக்கில, அவர் மண்டையை போட்டிருக்கிறார். எண்டபடியால அவற்ற விசர் 'கரண்ட்' ஏறுற மாதிரி உன்னில ஏறிவிட்டுது" என்று சொல்லி எத்தனை தடவை அவளைப் பரிகசித்திருப்பேன்?

ஒரு நாள் இப்படி என் சவடாலை அவிழ்த்து விட்டு வேடிக்கை பார்த்திருந்த போது காளி வேஷத்திற்குள் புகுந்தாற் போல ஈட்டிக்குப் பதிலாக அகப்பையை என் முகத்திற்கு நேரே பிடித்தபடி என்னை நெருங்கினாள் தர்மபத்தினி. என்னை கர்ணகடூரமாக நோக்கியபடி, "இனி இந்த மாதிரி விசர் கதை கதைச்சால் நான் உண்மையாகவே விசரியாகி விடுவன். பேந்து உங்கட ரத்தத்தைத் தான் குடிப்பன்" என்று என்னை மிரட்டினாள்.

மிரளுவதற்குப் பதிலாக மிகையான கோபத்தை அடைந்தேன்."இடியே நீ விசரி ஆகலாம். பேய் ஆகலாம். பூதம் ஆகலாம். ஆனால், இந்த தலைவனை அவ்வளவு லேசில மிரட்ட ஏலாது" என உச்சஸ்தொனியில் கத்தினேன்.

இதன் பின் இப்படியொரு சம்பாஷணை எமக்குள் இடம் பெறவில்லை.

கொஞ்சம், கொஞ்சமாக பரமசிவத்தின் நினைவு மனதினுள் தேய்ந்த போது, சங்கீதமணி ஒரு மலர்ச்சியான சிரிப்புடன் என்னை நெருங்கினான்.

"அப்பா, கப்பல் ஒண்டு வருதாம்."

"கப்பல் வரும். போகும். அதைப்பற்றி ஏன் என்னற்ற சொல்றாய்?"

"இந்தக் கப்பல் விசேஷமான கப்பலாம்."

"ஏன் சில்லுப் பூட்டியிருக்கிறாங்களோ?"


"இல்ல."

"அப்ப தண்டவாளத்திலையும் ஓடுமோ?"

"இல்ல அப்பா. அதில விசேஷமான ஆட்கள் வருகினமாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நடமாடும் மிருகக்காட்சிசாலை கப்பலைப் பற்றியோ குறிப்பிடுறாய்?"

"உங்களுக்கு மனுசரைப் பற்றி நினைப்பு வராது. மிருகத்தைப் பற்றித் தான் நினைப்பு வரும்."

"உங்களோட அடுகிடையாக கிடக்கக்கில மனுசரைப் பற்றி நினைப்பு வருமோ?

"சரி... சரி... தொண தொணக்காதீங்கோ."

"என்னடா 'தொண தொணப்பு' எண்டு அம்மா சொல்லுற மாதிரி சொல்லுறாய்?"

"அம்மாவோட அடுகிடையாக கிடக்கிறதால எனக்கும் அம்மான்ர பாஷை தொற்றி விட்டுது."

நான் உடனடியாக ஒன்றும் கூறவில்லை. "இந்தக் கப்பல்ல என்னடா விசேஷம்?" என சில வினாடிகளின் பின் கேட்டேன்.

"இதில டாக்குத்தர்மார் நிறைய வருகினமாம். "

" அதுக்கு என்னடா? கப்பல்ல டாக்குத்தர்மார் வாறது பெரிய விசயமோ? முந்தியும் தான் கப்பல்ல டாக்குத்தர்மார் இஞ்ச வந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்களுக்கு மருந்து குடுத்திச்சினம். 'ஒபரேஷன்' செய்திச்சினம்."

"இந்த கப்பல்ல வாற டாக்குத்தர்மார் வித்தியாசமான டாக்குத்தர்மாராம்."

"கப்பல்ன்ர ஆட்ட பாட்டத்திலையும் 'ஒபரேஷன்' செய்வினமோ?"

"இல்லப்பா. இந்த டாக்குத்தர்மார் எல்லாம் மன நோயாளியளை குணப்படுத்திற டாக்குத்தர்மாராம். நிறைய நாடுகளுக்கு போய் குணப்படுத்த முடியாத ஆட்களை எல்லாம் குணப்படுத்தி இருக்கினமாம். கடைசியாக இந்தியாவில ஒரு மாசமளவில நிண்டு விட்டு இஞ்ச வருகினமாம்."

"நல்ல செய்தியைத் தான் காலமை வெள்ளன சொல்லி இருக்கிறாய். இந்த மாதிரியான கப்பலைத் தான் நான் எதிர்பார்த்தனான். இஞ்ச வாறது நல்ல விசயம் தான். மெய்யே பெடி, கப்பல் இஞ்ச எவ்வளவு நாள் நிற்குமாம்?"

"ஒரு கிழமை தான்."

"ஒரு கிழமையோ?"

"ஓ மோம்"

"ஒரு கிழமைக்குள்ள இஞ்ச இருக்கிற நோயாளியளை பார்க்க முடியுமோ?"

"அது எனக்குத் தெரியாது."

"கப்பல் எங்க தரை இறங்கப் போகுதாம்? காங்கேசன் துறையிலையோ? இல்லாட்டால் கொழும்பிலையோ?" என்று கேட்டபடி அகப்பையினால் முதுகைச் சொறிந்தபடி தர்மபத்தினி வந்தாள்.

"காங்கேசன்துறையில தரையிறக்கினால் கப்பல்காரருக்கு நஷ்டமாம். கொழும்பில இறக்கினால் கொளுத்த லாபம் கிடைக்குமாம்" என சங்கீதமணி விளக்கம் அளித்தான்.

"அம்மா, நாங்கள் எல்லாரும் இந்த சாட்டில கப்பலைப் பார்த்திட்டு வரலாம்" என்றபடி தமிழ்மொழியழகி அங்கு வந்தாள்.

"ஏன் நீ ஒருக்காலும் கப்பலைப் பார்க்க இல்லயோ?"

"இல்ல. மழை வெள்ளத்தில ஓடின கப்பல தான் நான் கண்டிருக்கிறன்." தமிழ்மொழியழகி விடை பகிர்ந்தாள்.

"கப்பலில எத்தனை டாக்குத்தர்மார் இருக்கினமாம்?" தர்மபத்தினி கேட்டாள்.

"பத்துப் பேராம். அதில ஒரு பொம்பளை டாக்குத்தரும் அடக்கமாம்."

"அப்ப அம்மா பாடு கொண்டாட்டம் தான்" என்று குழந்தை போல் கைகொட்டிச் சிரித்தேன்.

சுடலைத்தனமான பார்வையால் என்னை விசிறிய தர்மபத்தினி, "என்னை குணமாக்க ஒரு டாக்குத்தர் தான் இருக்குது. ஆனால், உங்களை குணமாக்க ஒன்பது டாக்குத்தர்மார் இருக்கினம். கப்பல் இஞ்ச இருந்து போகக்கில எட்டு டாக்குத்தர்மாருக்காவது விசர் பிடிக்காவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என்ர பெயரை மாத்துவன்" என்று தர்மபத்தினி சவால் விடுத்தாள்.

"இந்த சாட்டில கனடாவில இருக்கிற எங்கடை சில ஆட்கள் தங்கட பெயரை மாத்தின மாதிரி நீயும் பெயரை மாத்தப் போறியோ?" காட்டமாக வினா தொடுத்தேன்.

"அப்பாவுக்கும், அம்மாவுக்கும் குதர்க்கம் பேசாட்டால் பொழுது விடியாது" என்று கூறியபடி தமிழ்மொழியழகி அங்கிருந்து அகன்றாள்.

"எனக்கு இஞ்ச இனியும் நிண்டால் விசர் தான் பிடிக்கும். நானும் போறன்" என்றபடி தர்மபத்தினி அகல முற்பட்டாள்.

"இடியே, நீ எங்க போகப் போறாய் எண்டு எனக்குத் தெரியும். கப்பல பார்க்கத்தானே போறாய்?" எனக் கேட்டேன்.

தர்மபத்தினி ஒரு பதிலும் சொல்லவில்லை.

"கப்பல் வர முந்தியே ஒரு மைல் வரை வரிசையில ஆட்கள் நிற்கினமாம்." சங்கீதமணி சொன்னான்.

"அப்ப வரிசையில முதலாவதாக ஆரை நிற்பாட்டப் போகினமாம்?"

"அதுக்கு ஒருத்தரைத் தேடுகினமாம். பொம்பளையாகப் போட்டால் நல்லது எண்டு நினைக்கினமாம்."

நான் தர்மபத்தினியைப் பார்க்க, அவள் என்னை கொலை வெறியுடன் பார்த்தபடி வெளியேறினாள்.

## (17)

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை.

காரியாலயத்திற்குப் போகத் தேவையில்லை என்ற நிலையில் உறக்கத்தில் என்னை மறந்திருந்தேன். திடீரென தர்மபத்தினி என்னைத் தட்டி, "ஒழும்புங்கோ, ஒழும்புங்கோ" என்று கத்தினாள்.

அலறித் துடித்தபடி எழுந்தவன், "என்னடி ஒழுப்புறாய்? இண்டைக் கல்லோ ஞாயிற்றுக்கிழமை? இண்டைக்காவது என்னை நித்திரை கொள்ள விடன்" என்று புறுபுறுத்தேன்.

"இஞ்சருங்கோ, ரேடியோவில சொல்லக் கூடாத செய்தியைக் கேட்ட பிறகும் உங்களை ஒழுப்பாமல் இருக்க முடியுமோ?"

"என்னடி சொல்லக் கூடாத செய்தி? பத்துப் பிள்ளையளுக்கு மேல பெத்த ஆக்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப் போறாங்களோ?"

"இல்லை, எங்கட பூதத்தம்பி அல்லோ செத்துப் போயிட்டார்? அதை இப்ப மரண அறிவித்தலில சொன்னவங்கள்."

"எட எங்கட பூதத்தம்பியோ? மரண அறிவித்தலை ரண்டாம் முறையும் சொன்னவங்களோ?"

"இல்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப பொறு கேட்பம்" என்று சொல்லியபடி, வானொலியை நோக்கி விரைந்தேன்.

"பாலைதீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வாழ்விடமாகவும், கொழும்பில் குடியேறி, தொழில் புரிந்தவருமான பூதலிங்கம் பூதத்தம்பி அகால மரணமானார். சௌபாக்கியசுந்தரகோமளசுந்தரியின் அன்புக் கணவரான இவர் அம்பிகாபதி, அமராவதியின் அன்பு மருமகனாவார். சுவிஸ் சந்திரகுமார், லண்டன் மணிமேகலை, சவூதி பேரம்பலம், கனடா சடகோபன், அவுஸ்திரேலியா கண்மணிசுந்தரி, சுவிஸ் கனகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுவீட்டி, டிக்கி, டக்கி, வைட்டி, சுந்தரம்பாள், ஈழேஸ்வரன், சுமிதா ஆகியோரின் செல்லப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் கொள்ளுப்பிட்டி 18ஆவது ஒழுங்கையில் இருந்து கனத்தை மயானத்துக்கு இன்று மாலை நான்கு மணிக்கு கொண்டு செல்லப்படும்."

அறிவித்தல் முடிந்தது. என்னிடம் இருந்து பெருமூச்சொன்று கிளம்பியது.

"இடியே, ஆரடி பூதத்தம்பிக்கு கொள்ளி வைக்கிறது? இக்கனம் மனுசிக்காரி தான் கொள்ளி வைக்க வேண்டி வரும் போல இருக்கு. எல்லாப் பிள்ளையளும் திக்கு, திக்காக வெளியில போயிட்டுதுகள்." ஈரமான குரலில் சொன்னேன்.

"ஓமப்பா. ஒரு மகன் கூட பக்கத்தில இல்ல. மாப்பிள்ளைத் தோழன், தோழி இரவல் பெறுகிற மாதிரி கொள்ளி வைக்கிறதுக்கும் இரவல் பெறத் தான் வேணும் போல இருக்குது."

"இப்ப தோழனுக்கு மாப்பிள்ளை வீட்டார் மோதிரம் போடுற மாதிரி எனக்கும் மோதிரம் போட்டால் நான் கொள்ளி வைப்பன்" என்று 'சீரியஸாக' சொல்லியபடி சங்கீதமணி அங்கு வந்தான்.

"டேய், உனக்கு மோதிரம் இல்லடா உதை தான் தர வேணும். இல்லாட்டால் கொள்ளி வைச்ச கையோட உன்னை சிதைக்குள்ள தள்ளி விட வேணும்"என்று ஆத்திரத்தில் கத்தினேன்.

அவன் ஒரடி பின் வாங்கினான்.

அன்று எனது தூரத்து உறவுக்காரனான பூதத்தம்பியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக அவன் வீட்டுக்குச் சென்றேன். என்னைக் கண்ட அவன் மனைவி 'கோ' வெனக் கதறினாள்.

"ஐயோ, எத்தனை தரம் அவர் 'அக்ஸிடென்டில' சிக்கி தப்பி இருப்பார்? ஒருக்கால் கார் மோதியும் அவருக்கு ஒண்டும் நடக்க இல்ல. ஊரில இருக்கக்கில குண்டு ஒண்டு பக்கத்தில விழுந்தும் அவர் தப்பி விட்டார். கொள்ளுப்பிட்டி சந்தியில ஒரு மாடு முட்டியல்லோ செத்துப் போனார்? ஐயோ, நான் இனி என்ன செய்வன்?" என செ.சு.கோ.சுந்தரி ஒப்பாரி வைத்தாள்.

"என்ன செய்யுறது? எல்லாம் காலபலன்தான்" என்று வார்த்தைகளை மென்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன காலபலன்? இவர்ற தேப்பனும், தாயும் மலையாட்டம் ஊரில இருக்கக்கில இவர்ற உயிரை யமன் ஏன் பறிச்சவனாம்? பிள்ளையள் லீவில வரக்கில இது நடந்திருந்தாலும் அதுகளில ஒருத்தன் கொள்ளி வைச்சிருப்பான். இப்ப இருக்கிற நிலைமையில ஒருத்தனும் இஞ்ச வர முடியாதாம். எல்லாரும் அவர்ற சாம்பலை அனுப்பினால் தேம்ஸ் நதியில, இல்லாட்டால் நைல் நதியில கரைக்கலாம் எண்டு சொல்லுறாங்கள்" என்று செ.சு.கோ.சுந்தரி அழுகைக்கிடையே சொன்னாள்.

"அப்ப கொள்ளி வைக்கிறதுக்கு ஆரை ஒழுங்கு செய்திருக்கிறியள்?" என மெல்லக் கேட்டேன்.

செ.சு.கோ.சுந்தரி மூக்கைச் சீறினாள். "செத்த வீடு நடத்துறதுக்கு



இந்தக் கொழும்பில எத்தனையோ வசதிகள் இருக்குது. ஒவ்வொரு கருமத்தையும் செய்யுறதுக்கு எண்டு ஆட்கள் இருக்குது. ஆனால், கொள்ளி வைக்கிறதுக்குத் தான் ஆட்கள் இல்ல."

அப்பொழுது சங்கீதமணி காலையில் சொன்னவை ஞாபகத்திற்கு வந்தன. அவனை கொள்ளி வைக்கிறதுக்கு ஏற்பாடு செய்தால் என்ன என்று ஓர் அரைகுறை யோசனை என்னுள் தோன்றியது. எனவே, மெல்ல, மெல்ல



122433
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
KOHA JDL

AHOM 1941

என் மனதில் புதையுண்டிருந்த விடயத்தை அவிழ்த்து விட்டேன்.

"என்ர மூன்றாவது மேனை கொள்ளி வைக்கிறதுக்கு ஏற்பாடு செய்யட்டோ? அவன்ர விரலுக்கு அளவான மோதிரம் செய்து குடுத்தியள் எண்டால் இசகு பிசகில்லாமல் கொள்ளி வைப்பான். ஒரு நெருப்புக் குச்சியால அடுப்பைப் பற்ற வைக்கக் கூடிய திறமை அவனிற்ற இருக்குது. அதோட சீன வெடியும் நல்லா கொளுத்துவான். எரியுற வீட்டில புகுந்து கட்டில் விரிப்புகளையும் வெளியில கொண்டு வாற சுளித்தனமும் அவனிற்ற இருக்குது" என்று புளுகினேன்.

"என்றாலும் உங்கட மேனை எல்லாருக்கும் தெரியும். பேந்து அவனை என்ர அவர்ற்ற கள்ள மேன் எண்டு சொன்னாலும் சொல்லுவினம். பேந்து ஏன் வீண் தொந்தரவு?"

செ.சு.கோ.சுந்தரி கூறியதைக் கேட்டு என் மனம் இருண்டுவிட்டது.

இப்படி நாம் இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் ஒரு வாலிபன் அடித்துப், பிடித்துக் கொண்டு உள்ளே வந்தான். பூதத்தம்பியின் பூதவுடலைக் கண்டவன், "ஐயோ அப்பா செத்திட்டீங்களே" என்று கத்திக் கதறி, அழுது, அமர்க்களம் செய்தான்.

செ.சு.கோ. சுந்தரியின் முகத்தைப் பார்க்க வேண்டுமே! பேய் அறைந்தாற் போல விளங்கியது. " டேய் நீ ஆரடா?" என அவ்வாலிபனை வெருட்டினேன்.

"நான் இவற்ற ரண்டாவது பெஞ்சாதியின்ர மகன்" என்று வாலிபன் சர்வசாதாரணமாகச் சொன்னான்.

"என்ன ரண்டாவது பெஞ்சாதியோ? பூதத்தம்பிக்கு ரண்டு பெஞ்சாதி இருந்துதோ?" என செ.சு.கோ. சுந்தரியைக் கேட்க, அவள் வாயைப் பிளந்தபடி இருந்தாள்.

அவளுக்கு கணவன் இறந்ததைவிட கணவனின் இரண்டாவது மனைவியின் மகன் என்று சொல்லி அங்கு வந்திருந்தவனைப் பார்த்து வேதனை பன்மடங்காகியது.

அதன் பின் அவள் வாயை அறவே மூட முடியாதவாறு சம்பவங்கள் நடைபெற்றன.

பூதத்தம்பியின் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது மனைவிமார் என்று சொல்லி ஒவ்வொரு 'சைஸுகளிலும்' மூன்று பெண்களும், அவர்களது மகன்மார்களும் அங்கு படை எடுத்து, செத்த வீட்டையே அமர்க்களப்படுத்தி விட்டனர்.

இறுதியாக பூதத்தம்பியின் பூதவுடல் பொரளை மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போது அவரின் இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் மனைவிமாரின் மகன்கள் யாவரும் தாமே கொள்ளிவைக்க வேண்டும் என்று சண்டை பிடித்தார்கள்.

சண்டைகள் தொடரட்டும் என மனதார வேண்டிக் கொண்டு மயானத்தை விட்டு களிப்புடன் வெளியேறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (18)

காரியாலயத்தில் வேலை செய்ய வேண்டிய எட்டு மணி நேரத்தில் மல்காந்தி, ராமநாயக்க ஆகியோருடன் ஆறு மணி நேரத்தை அரட்டை அடிப்பதில் கழி(ளி)த்து விட்டு, வீடு வந்த போது என் இதயத்தை அதிர்ச்சி, ஆச்சரியம், பீதி, கவலை ஆகியன இறுக அணைத்தன.

மதுரையை எரிக்க முன், அதாவது ஒரு மணி நேரத்தின் முன் கண்ணகி எப்படி இருந்திருப்பாளோ, அதே நிலையில் என் தர்மபத்தினி நின்றிருந்தாள். எடுத்த எடுப்பில் "என்ன நடந்துபோச்சு? பேயறைஞ்ச நிலையில நிற்கிறாய்?" எனக் கேட்டேன்.

நான் வாயை மூடியது தான் தாமதம், "அய்யோ, அய்யோ" என்று அவள் ஒப்பாரி வைக்கத் தொடங்கி விட்டாள். இப்படி எல்லாம் அவள் ஒப்பாரி வைக்கும் போது அங்கு ஆஜாராகும் சங்கீதமணி வராததையிட்டு ஆச்சரியம் விரிந்தது.

"இடியே, ஒப்பாரியை நிற்பாட்டு. கேட்க சகிக்க இல்ல. உடைஞ்ச 'ரெக்கோட்' மாதிரி 'அய்யோ', 'அய்யோ' எண்டு ஊளையிடுறாய்" என்று சற்று உஷ்ணத்துடன் உரைப்பினேன்.

"அய்யோ, அய்யோ" என்று மீண்டும் ஒப்பாரி வைத்தாள்.

"எனக்கு கெட்ட கோபம் தான் வரும். உன்ர ஒப்பாரியை நிற்பாட்டு. சொல்ல வேண்டியதை சொல்லு" என்று கர்ஜித்தேன்.

"இஞ்சருங்கோ, பள்ளிக்கூடத்திற்கு போன சங்கீதமணி இன்னும் வர இல்ல. அவனை பொலிஸ்காரங்கள் பிடிச்சுக் கொண்டு போயிட்டாங்கள் போல. ஒருக்கால் பார்த்துக் கொண்டு வாங்களேன்" என ஒப்பாரியை அடக்கியபடி தர்மபத்தினி சொன்னாள்.

எனது பிள்ளைகளில் சங்கீதமணியில் எனக்கு ஓர் அலாதியான பிரியம் மலிந்திருந்தது. அதுக்கு பல காரணங்கள் இருந்தன.

அவன் ஒரு சுளியன். சைக்கிளை 'ரிவேர்ஸில்' ஓட்டுவான். தையல் ஊசியின் துவாரம் இன்னும் கொஞ்சம் பெரிதென்றால் அதனூடாக நுழைந்து விடுவான். மண்ணெண்ணெயை 'வெஜிடபிள் ஒயிலாக' மாற்றுவதற்கு முயன்று அதில் எண்பது வீத வெற்றியை ஈட்டிய அசகாயசூரன். பல விடயங்களில் எனக்கு மந்திராலோசனை கூறிய கிஸிங்கர் சாதியன். பதினான்கு வயது வரை அரை டிக்கெட்டில் பஸ்சில் பிரயாணம் செய்தவன். அரிவரி படிக்கும் காலத்திலேயே பள்ளிக்கூடத்தில் இருந்து வந்தவுடன் தாய்ப் பாலைக் குடித்து தாயின் பெருமையை பறைசாற்றியவன். இப்படிப்பட்ட பெருமைக்குரியவன், வீட்டுக்கு வராத போது, என் மனம் எந்தளவு பாடுபட்டிருக்கும்?

"என்னடி சொல்லுறாய்? பள்ளிக்கூடத்திற்கு போனவன் இன்னும் வர இல்லயோ? வீட்டுக்கு வராமல் நேரே டியூஷனுக்கு போயிட்டானோ? "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்ல, எப்படியும் இஞ்ச வந்து சாப்பிட்டு விட்டுத் தான் 'டியூஷனுக்கு' போறவன். "

"டியூட்டரிக்கு ஆள் விட்டுப் பார்த்தனியோ?"

"ஓமோம். அங்கை வர இல்லயாம். பள்ளிக்கூடம் விட்ட பிறகு வழியில மாமரத்துக்கு கல்லு எறிஞ்சு விட்டு போனதை ஒரு பொடியன் கண்டவனாம்."

"ஏதாவது படம் பார்க்க தியேட்டருக்கு போயிருப்பான். "

"உங்களைப் போல செல்லத்துரையிட்ட போயிட்டு வாறன் எண்டு கொப்பர், கொம்மாற்ற சொல்லிப் போட்டு, கள்ளமாக படம் பார்த்து விட்டு வாற மாதிரி அவன் பார்க்கமாட்டான். எதையும் சொல்லிப் போட்டுத்தான் செய்வான்".

"அப்படியெண்டால் பொலிஸ்காரங்கள் பிடிச்சுக் கொண்டு போயிருப்பாங்களோ? இவன் முழிக்கிற முழியைப் பார்த்தால் ஆருக்கும் சந்தேகம் வரும். அமாவாசை அண்டைக்கு பிறந்தவன் தானே?"

"இஞ்சருங்கோ, ஒருக்கால் போய் பார்த்திட்டு வாங்களேன்."

"நான் எங்க போய் அவனைத் தேடுறது? கொழும்பில எத்தனை பொலிஸ் ஸ்டேஷன் இருக்குது? எல்லாத்திலையும் ஏறி இறங்கினால் கடைசியில என்னையும் பிடிச்சு அடைச்சு விடுவாங்கள். பேந்து நீ தான் நாயாக, பேயாக அலைய வேணும்."

"அப்படி எண்டால் அவனை எங்கை தேடுறது?"

"அவன் வருவான். இப்பத் தானே ஐஞ்சு மணி? ஆறு மணிக்குள்ள வருவான். ஆறு மணிக்கு முகம் கழுவிவிட்டு சாமி கும்புடுறவன் தானே? சாமி கும்பிறடுதுக்காவது வருவான்."

இப்படி நான் தர்மபத்தினியை சமாதானப்படுத்தும் போது, தம்பிப்பிள்ளை வந்தான்.

"மாமா, ஒரு புதினம்."

"என்ன?" நானும், தர்மபத்தினியும் ஒரே குரலில் கேட்டோம்.

"மணி பற்றி ஒரு புதினம்."

"சங்கீதமணி பற்றியோ?" ஆவலுடன் கேட்டேன்.

"இல்ல. எங்கட ஊர் கோயில் மணியைப் பற்றி ஒரு புதினம்."

தர்மபத்தினியின் முகமும், என் மனமும் சுருங்கின.

"எங்கட கோயில் மணிக்கு என்னவாம்?" ஆத்திரத்தை அடக்கியபடி கேட்டேன்.

"அதை 'ரிப்பேர்' செய்றதுக்கு மட்ராஸுக்கு கொண்டு போகப் போயினம் எண்டு யாழ்ப்பாணத்து பேப்பரில போட்டிருக்குதாம்."

"டேய், நான் சங்கீதமணியை காண இல்ல எண்டு துடிக்கிறன். நீ கோயில் மணியைப் பற்றி கதைக்கிறியே."

"மாமா, சங்கீதமணியை காண இல்லயோ?"

"ஓமோம். எங்கையும் கண்டனியோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேத்தைக்கு கண்டனான்."

"டேய், இண்டைக்கு காண இல்லயோ?"

"நான் ஒழும்ப முந்தி பள்ளிக்கூடத்திற்கு போயிட்டான்."

"ஓ! நீ முன் தூங்கி பின் எழும்புற சாதி தானே? அதுதான் என்ர பெடியள் உனக்கு அரசாங்கம் சோம்பேறிப் பட்டம் குடுத்து, பத்தாயிரம் ரூபாவும் குடுத்தால் நீ அதை எடுக்க சோம்பல்படுவாய் எண்டு சொல்லி சிரிக்கிறதுகள்."

தம்பிப்பிள்ளையின் முகம் வாடிவிட்டது. அப்போது "அப்பா" என்று ஒரு குரல். வாசலைப் பார்த்தேன். சங்கீதமணி!

அவன் முகத்தை சந்தோஷம் நூறு வீதம் குத்தகைக்கு எடுத்திருந்தது.

"டேய், எங்கடா போயிற்று வாறாய்?" என்று எடுத்த எடுப்பில் கேட்டேன்.

அவன் பெருமைபடர தாயை நோக்கினான். "அம்மா, எங்கட அப்பா அடிக்கடி இல்லாமை, இயலாமை, ஏழ்மை அப்படி, இப்படி எண்டு சொல்லி பெருமூச்சு விடுவார், கண்ணீர் விடுவார் தானே? இனி அப்படி பெருமூச்சு விடத் தேவையில்ல, கண்ணீரும் விடத் தேவையில்ல. படுக்கை அறையில இருந்து 'பாத்ரூமுக்கு' காரில போற அளவுக்கு நாங்க வசதியாக வாழப் போறம். மாலைதீவில ஒரு தீவு வாங்கிறதுக்கு மாலேக்கு 'பிளேனை சார்ட்டர்' பண்ணிப் போற அளவுக்கு வசதி எங்களுக்கு வந்து விட்டுது. பில் கிளின்டனை இரவுச் சாப்பாட்டுக்கு வரச்சொல்லி அழைப்பு விடுற அளவுக்கு நாங்க உயரப் போறம். எங்களுக்கு வரப் போற செல்வங்களை அனுபவிக்கிறதுக்கு நீங்க பெற்றெடுத்த பதினொரு செல்வங்கள் போதாத நிலைக்கு நாங்க வந்து விட்டம்" என்று சங்கீதமணி பெருமை சொட்டச் சொன்னான்.

அவன் கூறிய யாவற்றையும் கேட்டு பிரமித்தேன், சொக்கினேன். என்ன சொல்லுறான்? மாயாஜால மந்திர வித்தை காட்டுவது போல வார்த்தைகளால் மாயா ஜால வித்தை காட்டுறானே! "டேய், என்னடா சொல்றாய்? சொல்லுறதை விளக்கமாச் சொல்லுடா" என்று பொறுமை இழந்தவனாகக் கத்தினேன்.

"மச்சான், இப்படி எல்லாம் நீ கதைக்கிறதொண்டால் உனக்கு 'சுவீப்'பில பிரைஸ் கிடைச்சிருக்க வேணும். நான் சொல்லுறது சரி எண்டால் என்னை கனடாவுக்கு அனுப்பிப் போடு. நான் அதுக்கு கைமாற்றாக என்ர பொடியனை உன்ர பெட்டைக்கு கலியாணம் கட்டி வைக்கிறன்" என்று தம்பிப்பிள்ளை சொன்னான்.

"அப்பு, உனக்கு 'சுபீப்'பில 'பிரைஸ்' விழுந்திருக்குதோ? அப்புக்குஞ்சு சாத்திரியார் சொன்னது சரிதான். 'சுவீப்' எனக்கு விழும் எண்டு தான் சொன்னவர். இப்ப பார்த்தால் என்ர மேனுக்கு விழுந்திருக்குது." வெகு உற்சாகத்துடன் தர்மபத்தினி சொன்னாள்.

"டேய், உன்ர கொம்மா சொல்லுறது சரியோ?"

"ஓம் அப்பா. போன கிழமை ஒரு 'சுவீப் டிக்கெட்'வாங்கினன். நேத்தைக்குத் தான் இழுத்தாங்க. இண்டைக்கு பேப்பரைப் பார்த்தால் என்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நம்பருக்கு' முதல் 'பிரைஸ்'. மொத்தமாக நாற்பது லட்சம் ரூபாய்."

அவன் வாயை மூடியது தான் தாமதம், அந்த வீடே இரண்டுபட்டது. அடுத்த அரை மணி நேரமும் ஒரே கூச்சல், கும்மாளம். சங்கீதமணிக்கு 'ஜே' என்று கோஷம். 'சங்கீதமணி வாழ்க' என்றும் கோஷம். இதன் எதிரொலி வீட்டு ஜன்னல் கண்ணாடி ஒன்று உடைந்தது. 'சீலிங் ஷீட்' இரண்டு வெடித்தன. 'கிளாஸ்கள்' மூன்று தூள் தூளாகின.

"அப்பா, என்னை பேட்டி காண 'ரிப்போர்ட்டர்ஸ் கமெரா' இல்லாமல் வரலாம். அதால பள்ளிக்கூடம் முடிஞ்ச பிறகு 'ஸ்ரூடியோவுக்கு' போய் படம் எடுத்திட்டு வாறன். அதால தான் கொஞ்சம் 'லேட்'டாகி விட்டன்." இந்த களேபரத்தில் சங்கீதமணி சொன்னான்.

அன்றைய மாலைப் பொழுதில் இருந்து நள்ளிரவு வரை சங்கீதமணியே நாயகன், தளபதி, குரு, தர்மதுரை, உழைப்பாளி, மகராசன், ராஜகுமாரன், 'ஜென்டில்மன்' ஆகிய நிலைகளில் ஜொலி, ஜொலித்தான். தேய்பிறையான நிலைக்கு நான் தள்ளப்பட்டேன்.

மூத்தமகன் தர்மசிகாமணி தம்பி சங்கீதமணியை 'அண்ணே' போட்டுக் கதைத்தான். 'அத்தான்' என்று கதைத்தான் தம்பிப்பிள்ளை. 'டார்லிங்' என கொஞ்சினாள் தர்மபத்தினி.

என்னை ஒருவருமே ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஒதுக்கப்பட்டு, உதாசீனப்படுத்தப்பட்ட போதும், ஆனந்தம் தங்கு தடையின்றி உடலெங்கும், உள்ளமெங்கும் ஓடியது.

நாற்பது லட்சம் ரூபாவுக்கு நாங்கள் அதிபதியாகப் போகிறோம்.

எவ்வளவு பெரிய தொகை!

பன்னிரண்டு லட்சத்துக்கு அன்டர்சன் தொடர்மாடியில் ஒரு வீடு வாங்கலாம்.

பத்து லட்சத்துக்கு கார் வாங்கலாம்

27அங்குல 'ரி.வி', 'டெக்', 'த்ரி இன் வன்', ' ப்ரிஜ்', 'ஃபான்', 'மிக்சர்', 'பிளெண்டர்', 'எயார் கொண்டிஷன்' என்று மின்சார உபகரணங்கள் எல்லாவற்றையும் வாங்க இரண்டு லட்சத்தை ஒதுக்கலாம்.

நாளெல்லாம் நச்சரிக்கும் தம்பிப்பிள்ளையை ஐந்து லட்சம் செலவளித்து கனடாவுக்கு அனுப்பலாம்.

மீதிக் காசை வங்கியில் சேமிப்புக் கணக்கில் போட்டு விட்டு மாதா மாதம் கிடைக்கும் வட்டியில் உல்லாச வாழ்க்கையை மேற்கொள்ளலாம்.

ஒவ்வொரு வார இறுதியிலும் ஹிக்கடுவை, பெந்தோட்டை, நீர் கொழும்பு, உன்னஸ்கிரிய, நுவரெலியா என்று போய் விட்டு வரலாம்.

திடீரென ஒரு 'ஐடியா' உதயமாகியது.

ஒரு சின்ன வீடு 'செட் அப்' பண்ணினால் என்ன என்ற விவஸ்தை அற்ற ஆசை என்னுள் உருவாகி, என் மனதை உலுக்கியது.

அது பற்றி, சந்தோஷத்தில் மூத்த மகளின் 'நைட்டியில்' புகுந்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மபத்தினியிடம் ரகசியமாக வெளியிட்டேன்.

"அது நல்ல ஐடியா தான். நீங்கள் உங்கட பாட்டைப் பார்த்துக் கொண்டிருப்பியள். பெடியளும் 'அப்பா ஒரு காட்டு மிராண்டி', 'டேய்', 'டோய்', 'இடியே' எண்டு சொல்லி காலமை தொடக்கம் இரவு வரை தவளையாட்டம் கத்துறார். அப்பாவை துரத்திப் போட்டு ஒரு புது அப்பாவை எடுக்க வேணும்' எண்டு சொல்லுதுகள். நீங்கள் ஒரு சின்ன வீட்டை 'செட் அப்' பண்ணினால் பழி, பாவத்தில இருந்து நான் தப்பிவிடுவன்" என்று தர்மபத்தினி சொல்ல, இந்த ஜென்மத்திற்கும் இனி சின்ன வீடு என்ற சொல்லை நான் பாவிப்பனோ தெரிய இல்லை.

## (19)

தனக்கு 'சுவீப்'பில் முதல் பரிசாக நாற்பது லட்சம் ரூபா கிடைத்திருக்கிறது என்று சங்கீதமணி கூறி விட்டான். அது முதல் எங்கள் வீடு மகிழ்ச்சியில் திளைத்தது. ஒரே ஆரவாரம். பலரும் பலப்பல திட்டங்களையும் தீட்டினார்கள். நானும் கற்பனைக் கோட்டைக்குள் புகுந்து, கற்பனைகளுடன் கண்ணாமூச்சி விளையாடினேன்.

திடீரென மனதினுள் சந்தேகம் முளைத்தது. பொதுவாக எங்களை, குறிப்பாக என்னை, ஏமாற்றி சொற்ப வேளைக்கு சந்தோஷத்தில் ஆழ்த்தி, இறுதியில்"அப்பா, பொய் தான் சொன்னனான். எனக்கு 'சுவீப்'பில 'பிரைஸ்' விழ இல்ல. அம்மா 'சுவீப்' வாங்கத் தந்த காசுக்கு ஒரு பலூனும், ஐஸ்கிரீமும் வாங்கிவிட்டன்" என்று சொல்லி அசடாக்குவதுதான் சங்கீதமணியின் நோக்கமாக இருக்கலாமா என்ற எண்ணம் தோன்ற, நிமிடங்கள் நகர அந்த உண்மையை அறிய வேண்டும் என்ற துடிப்பு என்னை சங்கீதமணியிடம் விரட்டியது.

அவனை நாடி பக்குவமாக அவனுடன் பேசி, 'சுவீப் டிக்கெட்டை' எடுத்து எனது சந்தேகத்தை நிவர்த்தி செய்தேன். சங்கீதமணி பொய் சொல்லவில்லை. நாற்பது லட்சம் ரூபாவுக்கு எங்களை அதிபதியாக்கி இருந்தான்.

"சங்கீத், காசைக் கொண்டு என்னடா செய்யப் போறாய்?" எனக் கேட்டேன்.

அவன் அர்த்தபுஷ்டியுடன் புன்னகைத்தான். "அப்பா, எனக்கு சில சின்ன சின்ன ஆசைகள் இருக்குது. அதுகளை நிறைவேற்ற வேணும் எண்டது தான் என்ர பெரிய ஆசை."

"என்ன மாதிரியான சின்ன ஆசைகள்?"

"நீங்களும், அம்மாவும் கலியாணம் முடிச்சு இருபத்தைஞ்சு வருஷமாகுது. எண்டபடியால ஒரு வெள்ளி விழா நடத்தி உங்களை கௌரவப்படுத்த வேணும். இது என்ர முதல் ஆசை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதமணியின் வார்த்தைகள் என் இதயத்தில் தேனை அளவுக்கு மீறிக் கொட்டின. சந்தோஷத்தின் உச்சக்கட்டத்தில் நின்று ஏதாவது ஒரு பக்கத்தில் விழுந்து விடுவனோ என்ற நிலையில் கலங்கினேன். என்னால் ஒரு வார்த்தையை நன்றியாகக் கூட வெளியிட முடியவில்லை.

அவனே தொடர்ந்தும் பேசினான். "அப்பா இந்த விழாவுக்கு எங்கட அரசியல் தலைவர்களை கூப்பிட்டு உங்களுக்கு மாலை சூட வைக்கப்போறன்."

அரசியல் தலைவர்கள் என்ற வார்த்தைகளைக் கேட்டதும் என் மனம் ஊசியினால் குத்தப்பட்ட பலூன் போலாகியது. "சங்கீத், அரசியல் தலைவர்கள் வேண்டாம். ஆராவது ஜொலி ஜொலிக்கிற ஆட்களைக் கூப்பிடன்."

"அப்படியா? அப்படியெண்டால் பிரசாத், கார்த்திக், குஷ்பு, பிரபு, ரோஜா, மீனா எண்டு ஒரு சினிமா பட்டாளத்தை கூப்பிட்டு உங்களை கௌரவப்படுத்தட்டோ?"

"என்ர மனதுக்குள்ள இருக்கிற எல்லாத்தையும் எப்படியடா கண்டு பிடிச்சனி? நீ ஒரு சுளியன் தான். இந்த பட்டாளத்தோடு ஸ்ரீதேவியையும் கூப்பிடப் பார். 'குரு' படத்தைப் பார்த்தாப் போல நானும் ஸ்ரீதேவி ரசிகன் ஆகிவிட்டன்."

"உங்களுக்கு வெட்கம் இல்லயோ? ஒரு மகனோட கதைக்கிற கதையோ கதைக்கிறியள்?" என்று கேட்டபடி தர்மபத்தினி குசினியில் இருந்து வந்தாள்.

"உன்னைக் கட்டின பிறகு வெட்கம், ரோசம், மானம், சூடு, சொரணை எல்லாம் போயிட்டுது" என்று அவள் மீது சீறி விழுந்தேன்.

"ஓ! இப்ப இப்படி சொல்லுவியள். நாற்பது லட்சம் காசு கிடைச்ச பிறகு இதுக்கு மேலயும் சொல்லுவியள்."

"சொல்ல வேணும் எண்டு நினைச்சால் சொல்லுவன்."

"இப்படி பிள்ளைகளுக்கு முன்னால நீங்க கதைக்கிதறால தான் அதுகளும் இப்ப என்னை மதிக்குதுகள் இல்ல. வேலைக்காரியை விட தாழ்வான நிலைக்கு என்னைக் கொண்டு வந்து விட்டியள். "

"சரி, சரி தொண தொணக்காதை. இப்ப நல்ல விசயத்தை கதைப்பம். சங்கீதமணிக்கு என்ர மூளை இருக்கிறதால தானே சரியான 'சுவீப் டிக்கெட்டை' வாங்கி இருக்கிறான்."

நான் இப்படி கூறியதும் தர்மபத்தினி என்னை விழுங்குவது போல் பார்த்தாள். " இஞ்சருங்கோ, நான்தான் அவனுக்கு பத்து ரூபா குடுத்து 'சுவீப் டிக்கெட்' வாங்கச் சொன்னனான். நான் காசு குடுத்திருக்காட்டால் நீங்கள் இண்டைக்கும் இல்லாமை, இயலாமை, ஏழ்மை எண்டு புராணம் பாடிக் கொண்டிருப்பியள். உங்கட வாழ்க்கையை செழிப்பாக்கிற விதத்தில நான் தான் செயல்பட்டிருக்கிறன்."

"என்ர வாழ்க்கையை ஆரும் செழிப்பாக்கத் தேவையில்ல. என்னை 'காடு வா' எண்டுது. 'வீடு போ' எண்டுது. நீயும் பிள்ளையளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிக்கிறதுக்குத் தான் காசு தேவை. நான் வாழ்ந்திட்டன். இனியும் சோக்கு பண்ண வேணும் எண்ட ஆசை எனக்கு இல்ல" என குரலை உயர்த்திப் பேசினேன்.

"ஆசை இல்லை எண்டால் வெட்கமில்லாமல் குஷ்புவைக் கொண்டு வா, ஸ்ரீதேவியைக் கொண்டு வா எண்டு ஏன் இவனிற்ற கோரிக்கை விடுறியள்?"

"அது சும்மா பேச்சுக்குத்தான் சொன்னனான். பிள்ளையளின்ர ஆசையை என்ர ஆசை போலச் சொன்னனான்" என்று சொல்லி சமாளித்தேன்.

"அப்பா, என்ர அடுத்த சின்ன ஆசை என்ன எண்டு தெரியுமோ?"

"டேய், எங்கட இருபத்தைஞ்சாம் கலியாணத்தை கொண்டாடுறது பற்றி நீயும், நானும் கதைக்கவே உன்ர அம்மா முள்ளுப்பண்டியாட்டம் நிற்கிறா. எண்டபடியால நான் சம்பந்தப்படாத விதத்தில உன்ர ஆசையை வைச்சுக் கொள்."

இதைக் கேட்டு தர்மபத்தினி 'கல, கல' வென நகைத்தாள். "மெய்யே, எங்கட பிரசாந்த். பிரபு, குஷ்பு,கார்த்திக், ரோஜாவை கூப்பிட்டு விழா வைக்க உங்களுக்கு விருப்பமோ?" என கொஞ்சலாக தர்மபத்தினி கேட்டாள்.

அவள் கேட்ட விதம் என்னை சொக்க வைத்து விட்டது. "ஓமடி."

"அப்ப பெரிசா கொண்டாடுவோம். "

"என்ர அடுத்த ஆசையும் உங்கட கொண்டாட்டத்துக்குள்ள தான் அடங்கி இருக்குது" என்றான் சங்கீதமணி.

"என்ன ஆசை?"

"வெள்ளி விழாவை உங்கட கலியாணம் மாதிரி தடல்புடலாக வைச்சு 'வீடியோ' படம் எடுக்க வேணும். ஏனெண்டால் எங்களுக்கு உங்கட கலியாணத்தை பார்க்க முடிய இல்ல. அதோட உங்களிற்ற ஒரு கலியாண படம் கூட இல்ல."

"உண்மைதான் எங்கட கலியாணத்துக்கு ஒரு 'கமெராக்காரன்' வந்து நிறையப் படம் எடுத்தான். அம்மாவை எத்தனை 'போஸ்களில' நிற்க வைச்சு படம் எடுத்தான். கிணற்றுக்குள்ள இறக்கி மட்டும் படம் எடுக்கல்ல. எல்லாம் முடிஞ்சாப் பிறகு தான் அவன் 'ஃபிலிம் ரோல்' போடாமல் எடுத்திருக்கிறான் எண்டது விளங்கிச்சுது. எனக்கு சரியான கோவம் வந்திட்டுது. அண்டையில இருந்து அம்மாவோட சேர்ந்து படம் எடுக்கிறது இல்ல எண்டு சபதம் எடுத்தன்" என்றேன்.

"ஏன் பழைய கதையை இப்ப கொண்டு வாறியள்? இவன்ர ஆசையை நிறைவேத்தி வைப்பம்."

"வீடியோ படம் எடுத்து என்ன பிரயோசனம்? ஆருக்கு போட்டுக் காட்டப் போறாய்?"

"ஊரில எங்கடை ஆட்கள் எத்தனை பேர் இருக்கினம். அவையளுக்கு அனுப்புவம். தங்கம் அக்காவும் எங்கடை குடும்பப் படத்தை அனுப்பச் சொன்னவ. இந்த சாட்டில 'வீடியோ' படத்தை அனுப்புவம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊருக்கு 'வீடியோ' படத்தை அனுப்பப் போறியோ? அங்க எங்கட இன, சனம் சீனியும், அரிசியும், பால் மாவும் வாங்க திண்டாடுதுகள். அதுகள் படுற அவதிக்குள்ள எங்கடை படத்தை பார்க்க 'லைட் மெஷினுக்கும்', 'ரி.வி' க்கும்'டெக்'குக்கும் காசு குடுக்குங்களோ?"

நான் கூறியதைக் கேட்டு தர்மபத்தினியின் முகம் கூம்பிவிட்டது. "அப்ப, ஒரு 'குரூப்' படம் எடுப்பம்."

"சரி எடுப்பம்."

"என்ர அடுத்த ஆசை என்ன தெரியுமோ?"

"சொல்லன்."

"என்ர பெயரை மாத்தப் போறன்."

"என்னெண்டு?" நான் வினா எழுப்ப," டேய், எவ்வளவு ஆசையா சங்கீதமணி எண்டு பெயர் வைச்சம். ஏன்டா அந்தப் பெயரை மாத்தப் போறாய்?" என தர்மபத்தினி கேட்டாள்.

"ஏன் இந்த கர்னாடக பெயரை வைச்சனியள்? வகுப்பு பெடியள் எல்லாம் என்னை பகிடி பண்ணுதுகள்."

"நீ பிறந்து இருக்கையில கொப்பர் வந்து பார்த்தவர். அப்ப நீ அழக்கில அது ஒரு சங்கீதம் போல இருந்துதாம். அதால சங்கீதமணி எண்டு வைச்சிட்டார்."

"பதினாறு வருஷமாக உந்தப் பெயரோட இருந்திட்டன். இனி பெயரை மாத்துறன்."

தர்மபத்தினிக்கு கோபம் வந்து விட்டது. "நல்லா மாத்து. விருப்பம் எண்டால் நீ எங்களுக்கு பிறக்க இல்ல எண்டும் சொல்லலாம்."

இதைக் கேட்டு சங்கீதமணி 'வெல, வெலத்துப்' போய் விட்டான்.

## (20)

எனது மூன்றாவது மகனுக்குரிய அந்தஸ்தைக் கொண்ட சங்கீதமணி பத்திரிகையாளர் மகாநாடு நடத்தினான்.

தொலைக்காட்சியில் தோன்றி ஒரு சிறிய பேட்டிக்கு தன்னை ஈடுபடுத்தினான்.

வானொலியில் லொத்தர் சீட்டிழுப்புக்கான விளம்பரத்திற்கு தன் குரலை ஈந்தான்.

மொத்தத்தில் ஒரு அரசியல்வாதியான நிலையில், நடிகனான நிலையில் விளங்கினான்.

அடிக்கடி 'பிஸி' என்ற சொல்லைப் பாவித்தான்.

"கண்ணை மூடி இருந்த எங்கட கடவுள் கண்ணைத் திறந்து போட்டுது" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் என்று பேட்டிகளுக்கிடையே சூட்சுமமாகச் சொன்னான்.

"பதினொரு பிள்ளைகள் உள்ள குடும்பத்தில மூன்றாவது ஆண் பிள்ளையாக பிறக்க வேண்டும்" என்று ஆலோசனை கூறினான்.

சீதனம் இல்லாமல் கலியாணம் கட்ட வேண்டும் என்பதே தனது லட்சியம் எனப் பிதற்றினான்.

பெரியவனாகிய பின் அகதி முகாமில் இருந்து அனாதைப் பிள்ளை ஒன்றைத் தத்தெடுத்து, வளர்க்க வேண்டும் என்பதே தனது பேரவா எனப் புளுகினான்.

தனக்கு நாற்பது வயது வரும் போது இனப்பிரச்சனை தீராவிட்டால் தீக்குளிக்கப் போவதாகப் பசப்பினான்.

இல்லாமை, இயலாமை, ஏழ்மையில் உழன்ற நான் சங்கீதமணி லட்சாதிபதியான பின் ஒதுக்கப்பட்டேன், உதாசீனப்படுத்தப்பட்டேன், எள்ளி நகையாடப்பட்டேன், உதவாக்கரை என்ற பட்டத்திற்கு ஆளானேன்.

ஒரே நாளில் 'சுவீப்'பில் நாற்பது லட்சம் ரூபாவை தட்டியதன் மூலம் சங்கீதமணி தமிழ் சினிமா படமொன்றில் யாரோ நகைச்சுவை நடிகர் கூறியது போல், 'சார், எங்கயோ போயிட்டீங்க' என்ற நிலைக்குத் தள்ளப்பட்டான்.

சங்கீதமணிக்கு காலையில் முட்டைக் கோப்பி. காலை ஆகாரத்தின் பின் அப்பிள் 'ஜுஸ்'. மதிய ஆகாரத்தின் முன் ஆட்டுக்கால் 'சூப்'. ஆகாரத்தின் பின் 'ஐஸ் கிரீம் வித் ஃபுருட் சலட்'. மாலையில் நெஸ்கபே. இருட்டும் போது நெஸ்பிறே. இருட்டிய பின் நெஸ்டோமோல்ட். இரவு ஆகாரத்தின் பின் ஆட்டுப்பால். இப்படி பல விதமான திண்ம, திரவ ஆகாரங்கள் அவனுக்கு வழங்கப்பட்டன.

புதுமனை புகுந்தோம்,

புதுக் காரில் பயணமானோம்.

'ரி.வி.', 'டெக்', 'த்ரி இன் வன்', 'ஃபிரிஜ்', 'ஃபான்', 'ரோஸ்ரர்', 'பிளென்டர்' என்று அந்நிய நாட்டுப் பொருட்கள் வீட்டில் குடியேறின.

புதுச் சொந்தக்காரர்கள் முன் கதவைத் தட்டினார்கள்.

புதுச் செருப்புக்கள் எங்கள் கால்களைக் கடித்தன.

நடக்கிற தூரத்தை காரில் சென்றோம்.

பில் கிளின்டனுடன் டெலிபோனில் மணிக்கணக்கில் கதைத்தோம். இறுதியில் தான் அவரது பிரதான வேலைக்காரனுடன் பேசி இருக்கிறோம் என்பதைப் புரிந்தோம்.

மைக்கல் ஜாக்ஸனுடன் கதைப்பதற்கு முப்பது தடவைகள் டெலிபோன் செய்தும் தோல்வியைத் தழுவினோம்.

எனது இருபத்தைந்தாம் கலியாண நாள் விழா தடல்புடலாக நடந்து, ஸ்ரீதேவி, மிதுன் சக்கரவர்த்தியுடன் வந்து எனக்கும், தர்மபத்தினிக்கும் மலர்மாலை சூடி வாழ்த்த, அவர்களை மகிழ்விக்க நாம் ஆளுக்கு மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

பவுணில் தங்கச் சங்கிலிகளை அணிவித்தோம்.

பாடசாலை கட்டிட நிதிக்காரர்கள் வீட்டுக்குப் படை எடுத்தார்கள்.

அகதி முகாமில் இருந்து பரோபகாரி சங்கீதமணியைப் பார்க்க ஒரு பட்டாளம் வந்து போனது.

நாய் வளர்ப்பாளர்கள் சங்கத்தினர் என் தர்மபத்தினியை தமது சங்கத் தலைவியாக்கினார்கள். சங்க நாய்கள் நோய் பீடிக்கவே தர்மபத்தினி எமது பணத்தில் மருந்து வாங்கி நாய்களை குணமாக்கினாள்.

'சன்–இன்–லோ' தம்பிப்பிள்ளைக்கு 'ஏஜன்ஸியில்' ஐந்து லட்சம் ரூபாவைக் கட்டி கனடாவுக்கு அனுப்பினோம். அவன் சிங்கப்பூர், இந்தோனேஷியா, ரஷ்யா, பிரான்ஸ், வாயில் பூராத ஒரு ஆபிரிக்க நாடு என்று ஒரு பெரிய சுற்று சுற்றி விட்டு மீண்டும் கட்டுநாயக்காவிலேயே காலடி வைத்தான்.

பணம் கரைந்தது.

பந்தங்கள் விலகின.

படை எடுப்புக்கள் நின்றன.

பக்கிரியானோம்.

தங்கச் சங்கிலிகள் அடகுக் கடை ஏறின.

இறுதியில் எல்லாவற்றையும் இழந்தோம்.

மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பினோம்.

ஏழ்மை எம்மை அரவணைத்தது.

இயலாமை எம்முடன் ஒட்டியது.

இல்லாமை எம்மிடம் சரண் அடைந்தது.

மூன்று மாதங்களில் நான் பழைய சுப்பிரமணியமாகி விட்டேன்.

'மினி' பஸ்சில் நசுங்கியபடி அலுவலகம் செல்லும் சுப்பிரமணியமாகி விட்டேன். ♦♦♦♦

122433
4565

...கிய நூலகப் பிரிவு
...கர நூலக சேவை
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments

**D. Dinorshan Trading (Pvt) Ltd**

eneral Merchants, Commission Agents and Importers

Dealers in Milk Foods, Nestle's Products

72 G Peoples Park Complex

Gasworks Street

Colombo 11.

'phone 440842 Wire: Dinosan

325929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org